தமிழரசு

மார்ச் 2009

விலை ரூ.10/-

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

அரசு அருங்காட்சியகம்

அமீர் மஹால்

கோட்டை அருங்காட்சியகம்

பழவேற்காடு ஏரி

தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040

மாசி - பங்குனி

மார்ச் 2009

மலர் : 40 இதழ் : 9

ஆசிரியர் குழு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

துரை. தாமரைச்செல்வம்
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

மு. ஸ்ரீநாகேஷ்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

க. குமாரவேலு
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்

இரா. சுரேஷ்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்
இரா.இளவரசி

நிருபர்கள்

கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்

தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ. ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்

வி.இராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு

அ. மதன். உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
ஆர். பாலாஜி
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/28520408
தொலைநகல் : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in

ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

ஒப்பற்றதாகவும், அழிவில்லாததாகவும் இந்த உலகத்தில் நிலைத்திருப்பது புகழைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

இந்த இதழில்...

- சுற்றிக்கொண்டே கற்றுக்கொள்வோம் 2
- அறியவேண்டிய அரிய சுற்றுலாத்தலங்கள் 8
- திருக்குறள் : பொதுமறை - புதுமறை - அறிஞர் அண்ணா 15
- பிசிராந்தையார் - கலைஞரின் சங்கத்தமிழ் 21
- நாடுகளும் நாணயங்களும் 31
- உயிர் தொழில் நுட்ப வளர்ச்சி வேகம் 34
- உடல்நலன் பேண சில ஆலோசனைகள் 39
- அரசினர் கீழ்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம் 41
- வேலை வாய்ப்பளிக்கும் விஷுவல் கம்யூனிகேஷன் கல்வி 48
- தமிழுக்குத் தொண்டு செய்த பெருமக்கள் 53
- வான இயல் ஆராய்ச்சியாளர் யோஹன் கெப்பிலர் 59
- உயிர் நீர் தண்ணீர் 61
- இசைத்தூண்கள் 67
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அரிய செயல்பாடுகள் 70

முதலாம் மற்றும் நான்காம் பக்க அட்டைப்பட ஓவியம் : முல்லைராஜன்

சுற்றிக்கொண்டே கற்றுக்கொள்வோம்

வெ. இறையன்பு, இ.ஆ.ப.,
செயலர்,
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை,
தமிழ்நாடு அரசு

மனிதன் இயற்கையோடு ஒத்துப் போவதாலேயே எழுச்சி பெறுகிறான். மற்ற விலங்குகள் குறுகிய எல்லைக்குள் தங்களைக் குறுக்கிக் கொண்டபோது தேடுதலின் மூலம் தன்னை விருத்தி செய்து கொண்டதால், அவன் இடர்ப்பாடுகளிலிருந்து தப்பிப் பிழைத்தான். தலை நிமிர்ந்து நின்றான். சுற்றுப்புறச் சூழல் வேறுபட்டபோது உலகத்தை ராஜ்ஜியம் செய்து கொண்டிருந்த ராட்சதப் பல்லிகள் அழிந்து போயின. கொடூரமான சிங்கம்கூட சின்னத் தீப்பந்தத்திற்கு பயந்து ஓடும். பஞ்சபூதங்களில் தீ விசித்திரமானது. அதை மட்டுமே மனிதனால் உற்பத்தி செய்ய முடியும். தேவலோகத்திலிருந்து 'புரோமத்தியஸ்' என்கிற தேவன் தீயைத் திருடிக்கொண்டு வந்து மனித இனத்திற்கு அளித்துவிட்டதாகவும், அதனால் அவன் தேவர்களின் தலைவனால் தண்டிக்கப் பட்டதாகவும் புனைவியல் கதையுண்டு. இன்றிருக்கும் அத்தனை முன்னேற்றத்திற்கும் தீயே காரணம்.



ஹரப்பா

“உலகத்தின் முதல் பெண்மணி தென் ஆப்பிரிக்காவில் உருவானதாக அறிஞர்கள் அறுதியிடுகிறார்கள். மனித இனம் தொடர்ந்து தேடியதால்தான், இன்று உலகத்தை நிரப்பி வெளிக்கிரகங்களையும் துருவித் துருவி ஆராய்கின்ற மனப்பான்மை வந்தது.”

உலகம் இயங்குவதே சுழற்சியினால்தான். சுற்றுவதை நிறுத்தினால் நாம் சற்று நேரம்கூட தாக்குப் பிடிக்க முடியாது. தயிர் சுற்றுகிறபோது வெண்ணெயாகிறது. மனிதன் சுற்றுகிறபோது அமிழ்தாக மாறுகிறான்.

வேட்டையாடிக் கொண்டிருந்த மனிதன் காட்டுச் செடிகளில் சிவப்பாகப் பழுத்திருந்த மாறுபட்ட பழங்களைத் தின்று வேளாண்மையைக் கற்றுக்கொண்டான். பெரும்பான்மையான செடிகள் கழிவறையிலிருந்தே உதயமாயின. அதிகப் பிரதேசங்களைக் கைப்பற்றி விவசாயம் செய்து விளை நிலமாக்கும் ஆசையே படையெடுப்பதற்கு அடித்தளமானது. புதிய இடங்களிலிருந்த பயிர்களைத் தன்னிடத்திற்குக் கொண்டு வந்தான். தன்னிடம் இருந்தவற்றை படையெடுத்த நாடுகளில் பயிர் செய்வித்தான்.

சிந்து சமவெளி நாகரிகம் மிகச்சிறந்த கட்டமைப்பு வசதிகளுடன் திகழ்ந்தது. ஆனால், நகர்ப்புறத்திலேயே தங்கிவிட்ட அவர்கள், படையெடுத்து வந்தவர்கள் அருகிலிருக்கும் கிராமங்களைக் கைப்பற்றியபோது உணவு தானியம் கிடைக்காமல் அவதிப்பட்டார்கள். ஓரிடத்திலேயே தங்கிவிட்டால், உயர்ந்த நாகரிகத்தைக்கூட, வீழ்த்துவதற்கு சாதாரண நாகரிகத்தின் கை ஓங்கிவிடும் என்பதற்கு மொகஞ்சதாரோவும், ஹரப்பாவுமே முதல் எடுத்துக்காட்டு. அரிஸ்டோபுலஸ் என்கிற மாசிடோனிய தளபதி அலெக்ஸாண்டருடைய இந்தியப் படையெடுப்பில் இடம் பெற்றிருந்தவர். அவர், சிந்து சமவெளி சிதைபாடுகள் பற்றிக் குறிப்புகள் எழுதி வைத்திருந்தார். 1826ஆம் ஆண்டு சார்லஸ் மேசன் என்பவர்



எல்லோரா குகைக் கோயில்

ஹரப்பாவிலிருந்த சிதிலப்பட்ட செங்கற் கோட்டையை சிலாகித்து எழுதியிருப்பார். சிந்து சமவெளி நாகரிகம் மட்டும் தொடர்ந்திருந்தால், இன்று இந்தியா உலகத்திற்கே சிறந்த சுற்றுலா நாடாகத் திகழ்ந்திருக்கும்.

உலகத்தின் முதல் பெண்மணி தென் ஆப்பிரிக்காவில் உருவானதாக அறிஞர்கள் அறுதியிடுகிறார்கள். மனித இனம் தொடர்ந்து தேடியதால்தான், இன்று உலகத்தை நிரப்பி வெளிக்கிரகங்களையும் துருவித் துருவி ஆராய்கின்ற மனப்பான்மை வந்தது.



சார்லஸ் டார்வின்

விதைகள் கூட உருவான இடத்திலேயே விழ விரும்புவதில்லை. இறகுகள் முளைத்த விதைகள் இருக்கின்றன. பஞ்சைத் தரித்துக் கொண்ட வித்துக்களும் உண்டு. காற்றின் கைகளால் எடுத்துச் செல்லப்பட்டு வெகுதூரத்தில் விழுந்து முளைப்பதற்கு அந்த வடிவங்களே அவற்றுக்கு ஆதாரம். பழங்கள் சுவையாக இருப்பதுகூட விதைகள் வேறு இடத்தில் முளைக்க வேண்டும் என்கின்ற முன் ஜாக்கிரதையால்தான். வெறுமனே விழுந்தால் பல விதைகள் முளைக்க முடியாது. பறவைகளின் உணவுக்குழாயில் நுழைந்து ஏற்படுகின்ற மாற்றத்தின் மூலம்தான் அவை முளைப்புத் திறனைப் பெற முடியும் என்பது இயற்கையின் நியதி. ஒன்றேனும் முளைக்க வேண்டும் என்கிற ஆசையில்தான் ஓராயிரம் விதைகளை ஒவ்வொரு மரமும் தாங்கி நிற்கின்றது

மேற்கு ஆசியாவின் பிறை போன்ற பகுதியிலிருந்துதான் நிறையப் பயிர்கள் தோன்றி உலகெங்கும் பரவின. மெசோ அமெரிக்காவில், சரித்திர காலத்திற்கு முன்பு தோன்றிய பருத்திப் பயிரிலிருந்து அபிவிருத்தி செய்தவைதான், இப்போது உலகத்தில் 95 சதவிகிதம் வளர்க்கப்படுகின்ற பருத்தி இனங்கள்.

'வால்டர் ரேலே' என்பவர்தான் அமெரிக்காவிலிருந்த சிவப்பிந்தியர்கள் உபயோகித்து வந்த புகையிலையை எடுத்துக் கொண்டுபோய் முதலாம் எலிசபெத் ராணியிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார். அதற்கு எதிர்ப்பாக முதலாம் ஜேம்ஸ் மன்னர் ஒரு புத்தகத்தை எழுதினார். ஆனால், புகைக்குப் பகையாக இருந்த அவர் வாதம் எடுபடவில்லை.

சார்லஸ் டார்வின் கெலபேகோஸ் தீவுகளுக்குப் பயணம் செய்தபோது, ஏற்பட்ட அனுபவங்களால்தான் அவருக்குப் பரிணாம வளர்ச்சித் தத்துவமே பரிச்சயமானது.

விலங்குகள் கூட ஒரே இடத்தில் உற்பத்தியாகவில்லை. ஆட்டின் அளவே இருந்த குதிரை மத்திய கிழக்குப் பகுதியிலும், ஐரோப்பாவிலும் வளர்ப்பு மிருகமான பிறகு அடைந்த பெரிய உருவம் நாடோடி வீரர்கள் சவாரி செய்து வந்தபோது பலரையும் பயமுறுத்தியது. பல ஆண்டுகள் குதிரைகளை இனப்பெருக்கம் செய்ய வைக்கும் யுக்தி, தமிழ்நாட்டிற்குத் தெரியாமலே இருந்ததாகவும், தமிழ் மன்னர்கள் அரேபியாவிலிருந்தே அவற்றை இறக்குமதி செய்ததாகவும் வரலாற்றுக் குறிப்புகள் உண்டு. அதனால்தான் மாணிக்கவாசகர்கூட குதிரைகள் வாங்குவதற்காகக் கொடுத்த பணத்தில் கோயில் கட்டியதாகவும், பிறகு பரி, நரியான கதையும்

"பதினான்குவிதமான விலங்குகளை மாத்திரம்தான், மனிதனால் வளர்ப்பு மிருகமாக மாற்ற முடிந்தது. அவற்றில் செம்மறி ஆடு, பசு, பன்றி, குதிரை ஆகியவை முக்கியமானவை. சிலவற்றை அடக்க முடிந்ததே தவிர ஆள முடியவில்லை."

உண்டானது. ஒட்டகம் வட அமெரிக்காவில்தான் முதலில் தோன்றியது. அங்கு அது காணாமல் போவதற்கு முன்பு ஆசியாவிற்கும், தெற்கு அமெரிக்காவிற்கும் பரவியது.

பதினான்குவிதமான விலங்குகளை மாத்திரம்தான், மனிதனால் வளர்ப்பு மிருகமாக மாற்ற முடிந்தது. அவற்றில் செம்மறி ஆடு, பசு, பன்றி, குதிரை ஆகியவை முக்கியமானவை. சிலவற்றை அடக்க முடிந்ததே தவிர ஆள முடியவில்லை. மொகலாய மன்னர்கள் ஆயிரக் கணக்கான சிறுத்தைகளை வேட்டையாடு வதற்காகப் பழக்கி வைத்தார்கள். ஆனால், அவை குட்டி போடவில்லை. 1960ஆம் ஆண்டுதான் மிருகக்காட்சி சாலையில் இருந்த சிறுத்தை முதல்முறையாகக் குட்டி போட்டது. அதிக தூரம் ஓடித் திரிகிற போதுதான், பெண் சிறுத்தைகளுக்கு கரு முட்டை உண்டாகிறது என்பதுதான் அதற்குக் காரணம்.

சுற்றுப்பயணம் மேற் கொண்டவர்களால் அழிய வேண்டிய பல இனங்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. 1861ஆம் ஆண்டு பெர்ரி ஆர்மன் டேவிட் என்கிற பாதிரியார் சீனாவிற்குச் சென்றபோது பீஜிங்கில் உள்ள அரண்மனைப் பூங்காவில் அற்புதமான மான் இனம் இருப்பதைப் பார்த்து, அவற்றில் சிலவற்றைப் பாரீசுக்கு அனுப்பினார். 1900ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் அரண்மனைப் பூங்கா அடியோடு நாசமாகி அத்தனை மான்களும் அழிந்தன. பாரிசிலிருந்த மான்கள் மட்டுமே உயிரோடு இருந்தன. அவற்றிற்கு பெர்ரி டேவிட் என்றே பெயரிடப்பட்டன. 1954இல் நான்கு மான்கள் அங்கிருந்து சீனாவிற்கே அனுப்பப்பட்டன.

பறவைகள் தங்கள் இனம் அழிந்துவிடாமல்

பாதுகாத்துக் கொண்டதற்கு, அவற்றின் இடம் பெயர்தல்தான் முக்கியக் காரணம். குளிர் பிரதேசங்களில் வாழும் பறவைகள் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் பயணம் செய்து முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து, பிறகு அவற்றோடு சொந்த நாட்டிற்குத் திரும்புகின்றன. பறவைகளைப் பார்த்து மனிதனுக்கும் பறக்க வேண்டுமென்ற ஆசை. இறக்கைகளைக் கட்டிக்கொண்டு உயரமான கோபுரத்திலிருந்து பறக்க முயன்று கீழே விழுந்து பல் உடைந்தவர்கள் பலர். கிரேக்கப் புராணத்தில் மெழுகினாலான

இறக்கைகளைக் கட்டிக்கொண்டு இக்காரஸ் என்பவன் சிறையிலிருந்து தப்பித்ததாகவும், உயரமாகப் பறந்து சூரியனுக்கு அருகில் சென்றதால் மெழுகு இறகுகள் உருகி இறந்ததாகவும் கதைகள் உண்டு.

சந்திரகுப்த மௌரியர் தன்னிடம் தோல்வியடைந்த செல்யூகஸ் நிகேடருக்கு ஐநூறு யானைகளைப் பரிசாக அளித்தார். தோல்வி அடைந்தவர்களிடம் பெருந் தொகையை ஈடாகக் கறக்கும் (Ransom) பழக்கம் உலகமெங்கும் பரவியிருந்தபோது, பரிசு தருகிற பழக்கம் பாரதத்தில் மட்டுமே இருந்தது. அதனால், யானைகளின் போர்த் திறனை அறிந்து பல்லாண்டுகளுக்குப் பிறகு கத்தார்ஜ் நாட்டைச் சார்ந்த ஹன்னிபால் ஆப்பிரிக்கக் காட்டு யானைகளைப் பழக்கி, வடக்கிலிருந்து படை யெடுத்து ரோமாபுரியைக் கைப்பற்றினார்.

சிலுவைப் போர் வீரர்கள் தெரிந்து வரும் வரை ஐரோப்பாவில் காற்றாலை களைப் பற்றி யாரும் அறிந்து வைத்திருக்கவில்லை. ஆரம்பத்திலிருந்தே வாழையிலையில் உண்ணுகின்ற தூய நாகரிகம் தமிழர்களிடம் இருந்தது. உபயோகித்துத் தூக்கி எறிந்து சுத்தத்தைப் பேணி, சுற்றுச்சூழலைப் பாதிக்காத முதல் 'டிஸ்போசபிள்' (Disposable) தட்டு வாழையிலை தான். பதினைந்தாம் நூற்றாண்டு வரை மேற்கத்திய நாடுகளில் சாப்பிடும் தட்டு புழக்கத்தில் இல்லை. கனமான ரொட்டியின் மீது உணவைப் பரப்பி, ஒரு பிடிபிடிப்பதுதான் அவர்களின் வழக்கம்.

காஞ்சிபுரம் கோயில்

பண்டித நேரு சோவியத் யூனியன் நாட்டிற்கு 1927ஆம் ஆண்டு பயணம் செய்தார். அங்கே கண்ட அரசு நிர்வாக முறை அவரை வெகுவாகக் கவர்ந்தது. அதனால்தான், இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் சோவியத் சாரத்துடன் வடிவமைக்கப்பட்டன. 1947ஆம் ஆண்டுதான், அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அவர் முதல்முறையாகச் சென்றார். ஒருவேளை ரஷ்யாவிற்குச் செல்வதற்கு முன் அமெரிக்காவிற்குச் சென்றிருந்தால், அவருடைய சிந்தனை முறையே மாறியிருக்கலாம்.

இந்தியாவின்மீது படையெடுக்க வேண்டும் என்கிற ஆர்வம் வெளிநாட்டவர்களுக்கு ஏற்பட்டதற்கு முக்கியக் காரணம் இங்கு வந்து சென்றவர்கள், இந்தியாவைப் பற்றி எழுதி வைத்த குறிப்புகள்தான். வரலாற்று நூல்களுக்குத் தந்தை என்று வர்ணிக்கப்படும் 'ஹிரோடெட்டஸ்' தன்னுடைய 'சரித்திரங்கள்' என்ற புத்தகத்தில் 'இந்தியாவில் தங்கம் பொதி பொதியாகக் குவிந்து கிடப்பதாக' எழுதியிருப்பார்.

பல சமூகங்கள் எழுதுகிற பழக்கத்தை பக்கத்திலிருக்கும் சமூகங்களிடம்தான் கற்றுக் கொண்டன. முதலில் எழுத ஆரம்பித்தவர்கள் பயிர்களை சாகுபடி செய்வதிலும் முதலிடம் பெற்றிருந்தார்கள்.

இன்று நாம் சாப்பிடுகிற பல உணவு வகைகள் கூட சுற்றுலாவினால் தான் பிரபலமாயின. 'நொபின் சந்திரதாஸ்' என்ற கல்கத்தாக்காரர்தான் முதலில் ரசகுல்லாவைக் கண்டுபிடித்தார். ஏழையாய் இருந்த அவர்,

எவ்வளவுதான் முயற்சி செய்தும் அதைப் பிரபலமாக்க முடியவில்லை. யாரும் அதை விரும்பவும் இல்லை. அப்போது பகவான்தாஸ் பக்லா என்பவர் ஒரு படகில் சுற்றுலா வந்தவர், கரையோரமாக இருந்த 'நொபின் சந்திராவின்' வீட்டுக்குப் பக்கத்தில் படகை நிறுத்தினார். தண்ணீர் வேண்டும் என்று அடம்பிடித்த அவர் மகனுக்காக, நொபின் வீட்டிற்குச் சென்று தண்ணீர் கேட்டார். வங்காளத்தில் தண்ணீரை மட்டும் தருவது வழக்கமில்லை. ஏதேனும் ஒரு இனிப்பைக் கொடுத்துவிட்டுத்தான் தண்ணீரைத் தருவார்கள். ஏழையாக இருந்தால் ஒரு தேக்கரண்டி சர்க்கரையாவது தரவேண்டும். தன்னிடம் விற்பனையாகாமல் இருந்த ராசகுல்லாவை பையனுக்குத் தந்தார் நொபின். அவனுக்கோ ரசகுல்லா மிகவும் பிடித்துப் போக தந்தையிடம் சொல்லி ஒரு பானையையே வாங்கி வரச்செய்தான். பகவான்தாசுக்கும் அது மிகவும் பிடித்தது. அதற்குப் பிறகு கூடை கூடையாக வாங்கி, தன் உறவினர்களுக்கெல்லாம் தந்து ரசகுல்லாவை வங்காளம் முழுவதற்கும் பிரசித்தியாக்கி விட்டார் பகவான்தாஸ். அவர் மட்டும் சுற்றுலா செல்லாமல் இருந்திருந்தால் ரசகுல்லா போட்டிருக்கும் வெறும் குல்லா.

இந்தியாவிற்கு வந்த மொகலாயர்கள்தான் திராட்சை, ரோஜா, குலோப்ஜாமூன், பாசந்தி, பாதுஷா போன்ற இனிப்பு வகைகளை அறிமுகப்படுத்தினார்கள். பாரசீகர்கள் மூலமாகத்தான் கபாப், கொஃப்தா, தந்தூரி ரொட்டி ஆகியவை அறிமுகமாயின. ஆரம்பத்தில் தேநீரை எப்படிப் பருகுவது எனத் தெரியாமல் டிகாக்ஷனை எறிந்துவிட்டு, தேயிலைகளை இங்கிலாந்தில் பரிமாறிய விநோதமும் உண்டு.

காஞ்சிபுரம், பட்டடக்கல், எல்லோரா ஆகியவை ஒவ்வொன்றும் 500 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. ஆனால், அங்கிருக்கும் கோயில்களோ ஒரே மாதிரி அமைந்திருக்கின்றன. கைலாசநாதர் கோயில் ராஜசிம்மனால் தொடங்கப்பட்டு மூன்றாம் மகேந்திரவர்மனால் முடிக்கப்பட்டது. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கோயிலைக் கண்ட சாளுக்கிய நாட்டின் இரண்டாம் விக்ரமாதித்தன் அதைப்போலவே தோற்றமளிக்கும் விருப்பாட்சி கோயிலை பட்டடக்கல்லில் கட்டடக் கலையாக்கினான். ராஷ்டிரக்கூட மன்னர்கள் அந்தக் கோயிலைக் கண்டு, எல்லோராவில் அதைப் போலவே ஒரு கோயிலை வடிவமைத்தார்கள். அதைப்போலவே ஜெருசலம் என்கின்ற ஒரே இடமே, இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் புனித இடமாகிப் பல போராட்டங்களைத் தோற்றுவித்தது.

விளையாட்டுக்களும், நாடுவிட்டு நாடு சுற்றுலாவினாலும், பயணத்தினாலுமே பரவின. இந்தியாவில்தான் சதுரங்கம் ஆரம்பமானது. படையின் நான்கு அங்கங்களான காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை ஆகியவையே நான்கு சதுரங்கமாயின. பட்டு, விற்க வந்தவர்கள் மூலமாகத்தான் அது பல நாடுகளுக்குப் பயணித்தது. யுவான் சுவாங்கும், பாஹியானும் நாளந்தாவில் மாணவர்களிடம் பிரபலமாகியிருந்த பல விளையாட்டுக்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஸ்காட்லாந்தில் பிரபலமாகி இருந்த பூனையும், நாயும் என்ற விளையாட்டே கிரிக்கெட்டாகப் பரிணாம வளர்ச்சி பெற்றது. 2,500 ஆண்டுகளுக்கு முன்பு சீனத்திலிருந்த குஜூ என்கிற விளையாட்டே கால்பந்தானது. பாரசீகர்கள்தான் போலோ விளையாட்டை முதன்முதலில் விளையாடியவர்கள்.

சுற்றுலா என்பது கற்றுக்கொள்ள உதவும் அனுபவப் பாடம். மனித நாகரிகம் இன்று அடைந்திருக்கும் உன்னத நிலைக்குச் சுற்றுலாவே காரணம். நாமும் கோடை விடுமுறையில் ஊர் சுற்றுவோம், நல்ல நல்ல பழக்கங்களைக் கண்டுபிடிப்போம். பழகுகிற மனிதர்களிடம் இருக்கும் மேன்மையான பண்புகளை உறிஞ்சிக்கொண்டு உன்னத மடைவோம்; உயர்வுபெறுவோம். ❖

அறியவேண்டிய அரிய சுற்றுலாத்தலங்கள்

அமீர் மகால்

அரண்மனை என்ற சொல்லிற்கு சென்னைக்குள்ளேயே ஓர் அடையாளம் அமீர் மகால். ஆற்காடு நவாப்களின் கலைத் திறனின் சாட்சியாக, 14 ஏக்கர் பரப்பளவில் இந்த மாளிகை கம்பீரம் ஒளிர அமைக்கப் பட்டிருக்கிறது.

1789ஆம் ஆண்டு கட்டப்பட்டு, 1870இல் ஆற்காடு அரச குடும்பத்தாரின் மாளிகை ஆயிற்று. நவாப் அரசர்களின் கலை மனங்களை இந்த மகாலின் கலையெழில் கொஞ்சும் தூண்களே சொல்லும். இங்கு வந்து பார்த்தவர்கள் பரவசம் கொள்ளாமல் திரும்பவே முடியாது. முஸ்லிம் மன்னர்களின் மனத்திற்குரிய மகாராணிகள், தம் கனவுகளை அடைகாத்த அந்தப்புரங்கள் இந்த மகாலில் இருக்கின்றன. கொஞ்ச நேரம் நீங்களும் ஒரு மன்னராக உலா வந்து பார்க்க ஒரு வசதி.

அமைவிடம்: மகாகவி பாரதிசாலை (பைகிராப்ட்ஸ் ரோடு), திருவல்லிக்கேணி, சென்னை – 600005. பார்வையிடும் நேரம் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை. விடுமுறை கிடையாது. அனுமதி

அரசு அருங்காட்சியகம்

பெற்றுப் பார்வையிட வேண்டும். தொலைபேசி: 28485861

வட்டார இருப்புப் பாதை காட்சி சாலை

சிறு வயது ஞாபகங்களில் இரயில் பயணங்களும், யானை பார்த்து ஆச்சரியப்பட்ட பொழுதுகளும் மறக்க முடியாதவை. இரயிலில் பயணம் செய்த நாம், அதன் வளர்ச்சியின் காட்சிக் கூடத்தைப் பார்க்காமல் இருந்தால் எப்படி? சென்னை பெரம்பூர் அருகே உள்ள இரயில் பெட்டி தொழிற்சாலையில், மரங்கள் சூழ்ந்த இயற்கையான சூழலில் அமைந்துள்ளது. உட்புறக் காட்சிக் கூடத்தில் எண்ணற்ற சிறு காட்சி அமைப்புகள், வகை மாதிரிகள், புகைப்படங்கள், அட்டவணைகள் ஆகியன இந்திய இரயில்வே துறையின் வளர்ச்சியையும், மேம்பாட்டையும் எடுத்துக் காட்டுகின்றன. இளையவர் முதல் முதியவர் வரை இந்தக் காட்சிச் சாலை உற்சாகப்படுத்தி ஆர்வம் தரக்கூடியது. குழந்தைகள் பார்த்து ரசித்த ஒரு சில பொம்மை இரயில்கள் மட்டுமல்ல, 50 ஆண்டுகளுக்கு முந்தைய பழைய இரயில் பெட்டிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அமைவிடம்: நியூ ஆவடி ரோடு, ஐ.சி.எஃப். பஸ் நிறுத்தம் அருகில், சென்னை—600 038. நுழைவுக் கட்டணம்: பெரியோர் ரூ.5 சிறுவர் ரூ.3 விடுமுறை திங்கள்கிழமை. நேரம் காலை 10 முதல் மாலை 6 மணி வரை தொலைபேசி: 26146267.

பிரம்மஞான சபை

தனிமையும் அமைதியும் தவமும் இடத்தில்தான் தத்துவம் பிறக்கும். விதையிலிருந்து உயிர்த்தெழுந்த பூமிப்பரப்பு முழுவதையும் விழுதுகளால் அரவணைத்துச் செழித்து நிற்கும் சென்னை, அடையாறு ஆலமரத்தைப் போலவே பழமையானது பிரம்மஞான சபை. அமெரிக்காவைச் சேர்ந்த ப்ளாவட்ஸ்கி சீமாட்டி மற்றும் கலோ, ஆல்காட் ஆகியோரால் நிறுவப்பட்டது. இதன் நோக்கம் மதம் மற்றும் தத்துவம் சார்ந்த ஆய்வுகளுக்கானது. 1892இல் அடையாறில் மரங்களடர்ந்த இயற்கைச் சூழல் அமைந்த இடத்துக்கு இச்சபை மாற்றப்பட்டது. பல நூற்றாண்டுகளைக் கடந்தும் பசுமை மாறாது உயிர்ப்புடன் இருக்கும் இந்த ஆல விருட்சத்தின் கிளைகளும், விழுதுகளும் 40,000 சதுர அடி பரப்பளவில் பரவியுள்ளன. இங்குள்ள நூலகம் பழம் பெருமைமிக்கது. பல அரிய நூல்கள் பாதுகாப்பில் உள்ளன. ஞானம் தேடும் மனிதர்களுக்கு இது ஓர் இயற்கையின் போதி மரம். இங்கு இளைப்பாறுவோர் எல்லாம் தத்துவ ஞானம் பெறுவார்கள்.

அமைவிடம்: அடையாறு, சென்னை—600 020. அனுமதி இலவசம். நேரம்: காலை 8.30 முதல் 10 மணி வரை. மதியம் 2 மணி முதல் 5 மணி வரை. ஞாயிறு விடுமுறை தொலைபேசி: 24912474.

டைடல் பார்க்

டைடல் பூங்கா

தகவல் தொழில்நுட்பத்தின் திசையில் தமிழகம் இருக்கிறது என்பதற்கு அத்தாட்சி சென்னை டைடல் பூங்கா ஆகும். இதுவொரு தமிழ்நாட்டு சிலிகான் பள்ளத்தாக்கு. இந்தச் சாலையே இப்போது புதுமணப் பெண் போல புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. உலகப் புகழ்பெற்ற கணினி நிறுவனங்களின் அலுவலகங்கள் இங்கு மையம் கொண்டுள்ளன.

மிக விரிந்த பரப்பில் உருவாகியுள்ள டைடல் பூங்கா, நவீன கட்டடக் கலை அழகின் அடையாளம், குட்டி நகரம் போல டேபிள் டென்னிஸ், பில்லியர்ட்ஸ், டென்னிஸ் என பல விளையாட்டு வசதிகளும் உள்ளன. கனரா வங்கி, ஹிக்கின்பாதம்ஸ் புத்தக நிலையம், உணவகம் என உள்ளுக்குள்ளேயே ஓர் உலகம். இந்தப் பூங்காவில் மலர்கள் மலர்வதில்லை. இங்கு மென் பொருட்களே விளைபொருட்கள்.



அமைவிடம் : தரமணி, சென்னை–600 113. அனுமதி பெற்று பார்வையிட வேண்டும்.

அரசு கவின்கலைக் கல்லூரி

சென்னையில் கலைக்காகவே ஒரு கல்லூரி. ஆங்கிலேயர்களின் கலை மனம் தந்த கலைப்பள்ளி இது. ஆரம்பக் காலத்தில் ஆங்கில ஆட்சியாளர்களுக்குத் தேவையான நாற்காலி , மேஜை போன்ற அலுவலகப் பயன்பாட்டிற்கான பொருட்களை கலையழகுடன் தயாரித்துக் கொண்டிருந்தது இந்தப் பள்ளி. பிற்காலத்தில் தனி ஓவிய, சிற்ப பாணியைத் தனக்கென உருவாக்கிக் கொண்டது. பசுமையான சூழலில், பழமை மாறாத கட்டடங்களுடன் கவின் கலையை மாணவர்களுக்கு அள்ளிக் கொடுக்கிறது. இந்தக் கல்லூரி வளாகமே ஒரு கலைப்படைப்பாக உருமாறி புதிய கலைஞர்களை செதுக்கித் தருகிறது. இது 1850ஆம் ஆண்டு டாக்டர் அலெக்ஸாண்டர் ஹண்டர் என்பவரால் நிறுவப்பட்டது. இக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றவர் சிற்பி ராய் சௌத்ரி. இந்தப் பொறுப்புக்கு வந்த முதல் இந்தியர் இவரே. அவரது காலத்தில் இந்தக் கல்லூரி தேசிய அளவில் புகழ்பெற்றது. சென்னையின் அடையாளமாக மாறிப் போய்விட்ட உழைப்பாளர் சிலையும், காந்தி சிலையும் ராய்சௌத்ரியின் கலை வண்ணத்தில் உருவானவை. சந்தானராஜ், முனுசாமி, தனபால், அல்போன்சா, ஆதிமூலம், ஆர்.பி. பாஸ்கரன், தெட்சிணா மூர்த்தி, சந்ரு போன்ற தமிழகத்தின் பிரபல கலைஞர்கள் இக்கல்லூரியில் பயின்றவர்களே. இங்குதான் இந்தியாவிலேயே முதன் முதலாகப் புகைப்படக் கலை வகுப்பு தொடங்கப்பட்டது.

அமைவிடம்: 31, பெரியார் ஈ.வே.ரா சாலை, பெரியமேடு, சென்னை–600 003.

கோட்டை அருங்காட்சியகம்

சென்னையில் உள்ள புனித ஜார்ஜ் கோட்டையில் தலைமைச் செயலகம் இருப்பது தெரியும். இங்குதான் அருங்காட்சியகமும் இருக்கிறது. வடக்குப் புறத்தில் அமையப் பெற்றுள்ளது. இதன் பின்னணியில் ஒரு சுவாரசியமான கதை புதைந்திருக்கிறது. ஒரு காலத்தில் கோட்டையில் பணியாற்றும் அதிகாரிகளின் அலுவலகமாக இருந்தது. பிறகு அது ஒரு வங்கியாக மாறியது. இதுவே 'மெட்ராஸ் பேங்'கின் முன்னோடி வங்கி. பின்னர் பம்பாய் மற்றும் பெங்கால் வங்கியுடன் இணைந்து 'இம்பீரியல் பேங்க்' என்ற பெயர் சூடிக் கொண்டது. இப்போது அதன் பெயர் 'ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா'. இதன் மாடியில் உள்ள நீண்ட அறை, பொது மக்களுக்கான பட்டுவாடா அறையாக இருந்திருக்கிறது. பிறகு கி.பி. 1796இல் மேற்கூரையில் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது. இதுதான் சென்னையின் முதல் கலங்கரை விளக்கம். இவ்வாறான வளர்சிதை மாற்றங்களின் இறுதியாக, 1948இல் அருங்காட்சியகமாக அது தன்னை மாற்றிக் கொண்டது.

அப்படியென்ன அற்புதங்கள் இங்கு இருக்கின்றன? சென்னையை உருவாக்கிய மாபெரும் மனிதர்களின் அசல் கையெழுத்து ஆவணங்கள், பழங்கால நாணயங்கள், வெள்ளிச் சாமான்கள், சீருடைகள், மூலப்படிகள்,

செதுக்கு வேலைப்பாடுகள் மற்றும் ஆரம்பகாலச் சென்னையின் கச்சாத்துப் பொருட்கள் இப்படி இந்தக் காட்சியகத்தில் பாதுகாக்கப்படும் பொருட்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இத்தனைக்குப் பிறகும் இன்னும் புறப்படாமல் இருந்தால் எப்படி ?

அமைவிடம்: புனித ஜார்ஜ் கோட்டை, காமராசர் சாலை, சென்னை–600 009. நேரம்: காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை. வெள்ளிக்கிழமை விடுமுறை. கட்டணம்:

வெளிநாட்டினர் – 5 டாலர், உள்நாட்டினர் – ரூ.5.

தேசிய கலைக் கூடம்

சென்னை எழும்பூரில் ஒரு குட்டி நாடாளுமன்றக் கட்டடம் போலத் தோன்றும் இது இந்தோ–இஸ்லாமிய கட்டடக் கலையின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு. இக்கட்டடம் முழுவதும் மணற்கல்லால் கட்டப்பட்டது. தங்கக் கலசத்தினுள்ளே வெள்ளிப் புதையல்களா ? இக் கட்டடமே ஒரு கலைப் புதையல்தான். 16 மற்றும் 18ஆம் நூற்றாண்டுக் கால மொகலாய ஓவியங்கள், வெண்கலக் கலைப் பொருட்கள் மற்றும் 10,13ஆம் நூற்றாண்டுகளின் கைவினைப் பொருட்களும் இங்குள்ளன. இக்கலைக் கூடத்தில் உள்ள பிரம்மா சிலை எல்லோரும் கட்டாயம் பார்க்க வேண்டிய ஒன்று.

அமைவிடம்: 486, பாந்தியன் சாலை, சென்னை–600 008. நேரம்: காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை. கட்டணம் வெளிநாட்டினர்–5 டாலர், உள்நாட்டினர் – பெரியோர் ரூ.15. சிறுவர் ரூ.10. கல்விச்சலுகை கட்டணம்: ரூ. 3. வெள்ளிக்கிழமை விடுமுறை. தொலைபேசி: 28193238 / 28193778. தொலைநகல்: 28193035.

பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டு

பார்வையின் நீளம் செல்லும் வரை தேங்கி நிற்கும் நீரைப் பார்ப்பதே பேரழகு. தமிழகத்தின் பிரபலமான அணைக்கட்டுகளில் இது குறிப்பிடத்தக்கது. ஆனைமலைத் தொடரில் அமைந்துள்ளது. இங்கு ஆறுக்கும் மேற்பட்ட ஆறுகளை உள்ளிணைக்கும் வரிசைத் தொடரான அணைக்கட்டுகள் மூலம், மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கடலைத் தேக்கிவைத்த அதிசயம்தான் அணைகள்.

டாப்ஸ்லிப்

ஆனைமலைக் குன்றின் உச்சியில் ஒரு சித்திரம்போல அமைந் திருக்கிறது. டாப்ஸ்லிப். பூமிப் பரப்பின் இயற்கையெழிலை ரசிக்க இதைவிட

வேறிடம் இல்லை. பொள்ளாச்சியிலிருந்து 37 கிமீ தொலைவிலும், கோவையிலிருந்து 50 கிமீ தொலைவிலும் உள்ளது. இங்கு தங்குவதற்கு சுற்றுலா மாளிகைகளும் உள்ளன.

ஜி.டி. நாயுடு தொழில்துறைக் கண்காட்சி

கோவையில் வாழ்ந்த மேதை ஜி.டி. நாயுடு. அவரது புதுமையின் கண்டுபிடிப்புகள்

ஆச்சரியமூட்டுபவை. இந்தக் கண்காட்சி, ஜி.டி. நாயுடு நிறுவியது. அவருடைய அறிவியல் ஆராய்ச்சியை சிறப்பிக்கும் பொருட்டு அவருக்கே இக்கண்காட்சி காணிக்கை யாக்கப்பட்டுள்ளது. நகரப் பேருந்தில் ஜி.டி. நாயுடு கண்காட்சி என்று கேட்க வேண்டும்.

திண்டுக்கல் கோட்டை

திண்டுக்கல் வரலாற்றின் திசைகள் செல்லும் கோட்டை தலையணை திண்டுபோல் இருப்பதால், இந்நகருக்கு திண்டுக்கல் எனப் பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது. மலையின்மீது 280 அடி உயரத்தில் கம்பீரம் காட்டும் இந்தக் கோட்டையை கி.பி. 1605இல் மதுரையை ஆண்ட முத்துகிருஷ்ண நாயக்கர் கட்டத் தொடங்கினார். அதன்பின் திருமலை நாயக்கர் பணிகளைத் தொடங்கி கி.பி.1659இல் நிறைவு செய்தார். பழம்பெரும் வரலாற்றின் அசையாத ஆவணமாக இருக்கிறது இக்கோட்டை. கி.பி. 1755இல் ஹைதர் அலி, தன் காதல் மனைவி பகருன்னிசாவையும், ஐந்து வயது மகன் திப்புவையும் ஆங்கிலேயர்களுக்குத் தெரியாமல் இங்குதான் மறைத்து வைத்தார். திப்பு சுல்தான் ஆட்சிக்காலத்தில் சையத் இப்ராகிம் என்ற அதிகாரியிடம் கட்டளையிட்டு, இந்தக்கோட்டையில் பல அறைகள் கட்டப்பட்டதாகவும், கோட்டையின் மதில்களை சீரமைத்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. மைசூர் போரில் 1790இல் திப்புசுல்தான் தோற்கடிக்கப்பட்ட பின் இக்கோட்டை ஆங்கிலேயப் படைகளின் கைகளில் வந்தது. இச்சிறு வரலாறு கோட்டையின் பிரமாண்டத்தை ரசிக்க உதவும். மன்னர்களின் ராஜபாட்டையில் ஒரு நாள் நீங்களும் நடந்துதான் பாருங்களேன். அனுபவம் புதுமை.

பத்மநாபபுரம் அரண்மனை

கன்னியாகுமரி செல்பவர்கள் பட்டியலில் பத்மநாபபுரம் அரண்மனை முதலிடத்தில் இருக்கும். திருவிதாங்கூரை ஆட்சி செய்தவர்களின் பழமை வாய்ந்த அரண்மனை. இது திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராக கி.பி. 1798 வரை திகழ்ந்தது. உள்பக்கத்தில் மட்டும் 6 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட பிரமாண்ட அரண்மனையில் போர்த்தளவாடங்கள் உட்பட பலவகையான பழங்காலப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. இங்குள்ள ராமஸ்வாமி ஆலயத்தில் இராமாயண இதிகாசத் திலிருந்து பல காட்சிகள் 45 பிரிவுகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. நவீன காலத்தில் பார்த்து மகிழக்கூடிய ஆதிகால அரண்மனை இது ஒன்றே, வாழும் வரலாறு.

பேச்சிப்பாறை அணை

இந்த அணையின் பெயரை நீங்கள் அடிக்கடி செய்திகளில் கேள்விப் பட்டிருப்பீர்கள். பார்த்துப் பரவசம் கொள்ள வேண்டிய நீர்ப்பரப்பு. மிகச் சிறந்த பொழுது போக்குத் தலம். இங்கு படகுப் பயணம் சென்று மகிழலாம். கன்னியா குமரியிலிருந்து 75 கி.மீ. தொலைவில் பேச்சிப்பாறை அணை நீரால் ததும்பிக் கொண்டிருக்கிறது.

எல்க் அருவி

கோத்தகிரியில் இருந்து 7 கி.மீ. தொலைவில், உயிலட்டி கிராமத்தின் கீழ்ப்புறம் உள்ளது இந்த அருவி. மழைக்காலத்தில் மட்டுமே இதில் தண்ணீர் வரும். படுகர் இன மக்களின் குடி இருப்பு வழியே இந்த இடத்துக்குச் செல்லும் சாலை ஊடுருவிச் செல்கிறது. இந்த இடத்திலிருந்து வடக்குப் பக்கமாக நகர்ந்தால் கூக்கல் பள்ளத்தாக்கின் அழகிய தோற்றத்தை ரசிக்க முடியும்.



டால்பின் நோஸ்

குன்னூரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் இருக்கும் இந்த இடத்திலிருந்து கேத்தரின் அருவியின் அற்புத அழகைக் கண்டு ரசிக்கலாம். இந்தக் காட்சி இலக்கில் நின்று காலை நேரத்தில் பார்த்தால் இயற்கை அழகின் இணையற்ற தரிசனத்தைக் காண முடியும்.

குடுமியான் மலை

இங்குள்ள சிவன் கோயிலில் சிறந்த சிற்பங்களும், பழமையான கல்வெட்டுகளும் உள்ளன. இவற்றில் ஒரு கல்வெட்டு மகேந்திர வர்ம பல்லவனின் இசை ஞானத்தையும், பிரிவதனி என்ற எட்டிழை வாத்தியத்தில் அவர் செய்த பரிசோதனைகளையும் பற்றி விவரிக்கிறது. இது புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

நார்த்தா மலை

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த இடம் முன்பு முத்தரையர் படைத்தலைவர்களின் தலைமையிடமாக இருந்துள்ளது. பழங்கால வட்ட வடிவக் கோயிலை முத்தரையர்கள் கட்டினார்கள் என்றால் விஜயாலய சோழேஸ்வரன் கோயிலை பிற்காலச் சோழர்களின் முதல் அரசனான விஜயாலய சோழன் கட்டியுள்ளான். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இக்கோயில்கள் பார்க்கப்பட வேண்டியவை. புதுக்கோட்டையில் இருந்து 17 கி.மீ. தொலைவில் நார்த்தா மலை இருக்கிறது.

சித்தன்னவாசல்

உலகப்புகழ் பெற்ற ஓவியர்கள் நிறைந்த குகைக் கோயில் இங்குதான் உள்ளது. இந்தக் குகைச் சுவரில் வரைந்துள்ள, அஜந்தா வகை ஓவியங்கள் ஓவியக் கலைஞர்களால் கொண்டாடப்படுபவை. நடுநாயகமாக வரையப்பட்டிருக்கும் ஓவியத்தில், ஒரு தாமரைக் குளம், அங்கு நடனமாடும் இரு கந்தர்வப் பெண்கள், குளத்திலிருக்கும் தாமரை மலரைக் கொய்துகொண்டிருக்கும் சிலர், சுற்றிலும் மீன்கள், அன்னப் பறவைகள் என காவியமாய் விரியும். 9 மற்றும் 10ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளும் இங்குள்ளன. சித்தன்னவாசல் சுற்றுப்புறத்தில் ஆதிகால இடுகாடுகளும், புதைக்கப்படாத முதுமக்கள் தாழிகளும் உள்ளன. இது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளது.



குன்றக்குடி கோயில்கள்

முருகனின் சிறப்பு வாய்ந்த எட்டுக்குடிகளில் இந்தக் கோயிலும் ஒன்று. காரைக்குடியில் இருந்து 10 கி.மீ. தொலைவில் இருக்கும் இந்தக் குன்றத்துக் கோயிலில் சண்முக நாதனாக முருகப்பெருமான் கோலோச்சுகிறார். கி.பி. 1,000இல் இந்தக் கோயில் கட்டப்பட்டதாக மயூரகிரி புராணம் கூறுகிறது. மருது பாண்டியர்களால் புதுப்பிக்கப்பட்டது. தைப்பூசம், பங்குனி உத்திரம், திருக்கார்த்திகை மற்றும் கந்தசஷ்டி திருவிழாக்கள் இந்தக் கோயிலில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

காரைக்குடி

நகரத்தார் என்று கூறப்படும் செட்டியார்கள் வாழும் செட்டி நாட்டுப் பகுதியின் தலைநகரம் போல் விளங்குவது இந்தக் காரைக்குடி. நகரத்தாரின் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு மாளிகை. மதில் போன்ற சுற்றுச் சுவர்களும், பளிங்குத் தரையும், சுதை ஓவியங்களும், வண்ணச் சித்திரக் கண்ணாடி சாளரங்கள்,

அலங்கார தொங்கு விளக்குகள், அழகான தேக்குமர வேலைப்பாடுகள் இப்படியாக இன்றும் கலைநயத்தோடு மிளிர்கின்றன இவர்களின் வீடுகள். விருந்தோம்பல் பண்பில் சிறந்த இவர்கள், கடல்கொண்ட பூம்புகாரை பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மனோரா கோபுரம்

1814ஆம் ஆண்டு மாவீரன் நெப்போலியன் தலைமையிலான பிரெஞ்சுப் படைக்கும், ஆங்கிலேயருக்கும் ஒரு கடல் போர் நடந்தது. இந்தப் போரில் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக சரபோஜி மன்னரின் படைகளும் போரிட்டன. அப்போது நெப்போலியனின் படை தோற்கடிக்கப்பட்டது. அந்த வெற்றியின் நினைவாக சரபேந்திரராஜ பட்டினம் கடற்கரையில் 120 அடி உயரமுள்ள கோபுரம் அமைக்கப்பட்டது. அறுகோண வடிவமுள்ள இந்தக் கோபுரத்தின் உச்சியை அடைய 120 படிகள் உள்ளன. 150 ஆண்டுகளாக உறுதியுடன் நிற்கிறது. பட்டுக் கோட்டையிலிருந்து 25 கி.மீ. தூரத்தில் உள்ளது.

பழவேற்காடு உப்பேரி / பறவைகள் சரணாலயம்

கடல் நீரும், பக்கிங்காம் கால்வாய் நீரும் ஒன்றுடன் ஒன்று கலக்கும் ஏரி இது. மீன்வளமும், இறால் வளமும் உள்ள ஏரி இது என்பதால் கடல் நீரை உள்வாங்குவதும், வெளித்தள்ளுவதுமாக இருப்பதால், இதை உப்பாறு என்று அழைக்கிறார்கள். இந்த ஏரியின் நீர்மட்டம் திடீரென்று உயர்வதும், தாழ்வதுமாக இருக்கும். இதை வத்தம், வெள்ளம் என்று இப்பகுதியில் உள்ள மீனவர்கள் அழைப்பார்கள். இங்கு கிடைக்கும் கட்டுநண்டு ஏற்றுமதி செய்யுமளவுக்குத் தரமானது. பழவேற்காடு ஏரி, ஒரு பறவைகள் சரணாலயமும் கூட. கி.பி. 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த டச்சுக்கல்லறை ஒன்றும் இங்கு உள்ளது. சென்னை அருகே உள்ள வித்தியாசமான சுற்றுலாத்தலம்.

செஞ்சிக் கோட்டை

சப்த கன்னிகளில் ஒன்றாக திகழும் செஞ்சியம்மனின் பெயரால் விளங்கும் இக் கோட்டை சுமார் 700 ஆண்டுகள் பழமையானது. இக்கோட்டை ஆனந்தக் கோனாரால் அமைக்கப்பட்டு பல அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்து பின்னர் பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் வசம் இருந்தது. தற்போது இக்கோட்டை மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பராமரிப்பில் உள்ளது. கிருஷ்ணகிரி, சந்திரகிரி மற்றும் ராஜகிரி ஆகிய மூன்று சீரற்ற மலைக்குன்றுகளை மாபெரும் செஞ்சிக் கோட்டையின் மதில்கள் அரவணைத்துச் செல்கின்றன. ராஜகிரி மலை மட்டுமே (800 அடி உயரம்) தனியாக எவற்றோடும் பொருந்தாமல் நிற்கும் குன்று. தற்போது கட்டப்பட்ட ஒரு பாலம் 20 மீ. வரை ஆழமுள்ள சுனையை இணைக்கிறது.

– நன்றி : **தமிழக சுற்றுலாத்துறை**

திருக்குறள் : பொதுமறை - புதுமறை

- அறிஞர் அண்ணா

திருவள்ளுவர் – நமக்கு அளித்துள்ள திருக்குறள் இப்போது ஒவ்வொருவருடைய நாவிலும்–நெஞ்சிலும்–நினை விலும்–இடம் பெற்றிருக்கிறது.

எல்லாரும் குறளை ஆதரிக்கிறார்கள்; போற்று கிறார்கள்.

திருவள்ளுவர் தமிழகத்திற்கு மட்டும் அல்லாமல், வையகம் முழுமைக்கும் வாழ்க்கைக்கு உரிய நெறியைத் தந்திருக்கிறார்.

அதனை நாம் உலகத்தின் பொதுச்சொத்து என்று எண்ணத்தக்க விதத்தில் பொதுக் கருத்தைப் பரப்ப வேண்டும்.

தமிழ் மக்கள் திருக்குறளைப் 'பொதுமறை' என்றும், இன்றைய தமிழர்கள் பெற்ற 'புதுமறை' என்றும் போற்றுகிறார்கள்.

இந்த நல்ல கருத்துக் கருவூலத்தை உலகத்தின் கவனத்திற்கு எடுத்துவைக்க நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

திருக்குறளின்–தமிழ் இலக்கியங்களின் – கருத்துகளை, ஓவியங்களாக–வரி வடிவங்களாக–பாடல்களாக–கூத்தாக– உருவாக்கி வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

(சென்னை–கோட்டை தலைமைச் செயலகத்தில் சூன் 9, 1967 நிகழ்ந்த திருவள்ளுவர் படத் திறப்பு விழாவில் முதலமைச்சர் பேறிஞர் அண்ணா ஆற்றிய உரை.*
** 'நம் நாடு' நாளிதழ் 10–6–1967.)*

உலக மொழிகளில் எல்லாம் திருக்குறள்

உலக மொழிகள் எல்லாவற்றிலும் திருக்குறளை மொழிபெயர்த்துப் பயன் படுத்துகிறார்கள்.

நாம் எல்லாரும் எதிர்பார்ப்பதை விட மேலாக வெளிநாட்டினர் திருக்குறளைப் பயன்படுத்த முனைந்து விட்டனர்.

திருவள்ளுவருக்குக் கிடைக்கும் இந்தச் சிறப்பை நீண்ட காலத்திற்கு முன்பே நாம் செய்திருக்க வேண்டும்; தவறி விட்டோம்.

இப்போது சோவியத்து நாட்டிலே உள்ளவர்கள் திருக்குறளைப் பயில்கிறார்கள். இங்கிலாந்து நாட்டில் உள்ளவர்கள் பயில்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னர் நான் புதுச்சேரிக்குச் சென்றிருந்த பொழுது,

பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் புத்தகத்தை என்னிடம் தந்தார்கள். அதன் நல்லறிவுக் கருத்துக்கள் நாட்டு மக்கள் அனைவராலும் போற்றப் படுகின்றன.

திருவள்ளுவர் விழா ஏன்?

திருவள்ளுவர் விழாதான் நம் வாழ்வு செம்மைப்பட அமையும் விழாவாக அமைய வேண்டும்.

திருவள்ளுவரைப் போல, தமிழர்களிலே நிறையப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். இளங்கோவின் 'சிலப்பதிகாரம்' நாடு அறியாதது அல்ல; சிலப்பதிகாரத்தில் வரும் 'கானல்வரிக்' கவிதை, உலகம் மறந்துவிடக் கூடியதும் அல்ல. இருந்தாலும்–

இரண்டு வரிகளுக்குள் வாழ்வுக்குத் தேவையான கருத்துகளை – எப்படி வாழவேண்டும் என்ற முறையை–வகுத்துக் கொடுத்த பெரியார் வள்ளுவர்தான்!

தமிழ்நாட்டில் இருந்த பெண்பாற் புலவர்களைப் போல் வெளிநாட்டில் எங்கும் நாம் கண்டதில்லை. இருந்தாலும் வள்ளுவரைப் போல் அவர்கள் சுவடி ஒன்றும் தரவில்லை.

ஆதலால் வள்ளுவர் விழாவினை மற்ற விழாக்களைப் போல் எண்ணாது, தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அரிய விழாவாகக் கருதவேண்டும்.

இந்தக் குவலயத்திற்கே குறளைத் தந்த தமிழர் சமுதாயம், குறள் நெறியின்படி வாழ்கிறதா என்றால்–இல்லை.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்

– என்று, 'உயர்வு பிறப்பிலே இல்லை; தான் செய்யும் தொழிலின் சிறப்பிலேதான் இருக்கிறது' என்பதைத் திருவள்ளுவர் சொல்லியும் இந்தச் சமுதாயம் சாதிப் பிடிப்பிலிருந்து இன்னும் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அதுமட்டும் மல்ல; 'சாதி இருந்தால் என்ன?' என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள்.

ஆகையால் விழா நடைபெறும் இந்த நேரத்தில் திருவள்ளுவர் சொன்ன கருத்துகளை நடை முறைக்குக் கொண்டுவர உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

இரஷியாவோடு போட்டியிடும் தலையாய செல்வம்

இன்றைய தினம், செல்வத்திலே–சீரடைவதிலே–கல்வி முன்னேற்றத்திலே–தொழில் துறையிலே–மிகவும் பின்தங்கியுள்ளோம்.

தமிழ்ச் செல்வம் யாரும் பெற முடியாத செல்வமாக இருக்கிறது. தமிழ்ப் பண்பாட்டுச் செல்வம் யாருக்கும் எந்த நாட்டுக்கும் கிட்டாத அளவிற்குக் கிடைத்திருக்கிறது.

இரஷ்யாவோடு நாம் போர்க் கருவிகளிலே போட்டியிட முடியாது; விஞ்ஞான வளர்ச்சியிலே போட்டியிட முடியாது.

ஆனால் இலக்கியத்திலே போட்டியிட முடியும். அப்படிப்பட்ட இலக்கியச் செல்வம் நம்மிடத்திலே இருக்கிறது.

அதில் தலையாய செல்வம்–திருக்குறள்.

அந்தக் குறள், வகுப்பறையில் மட்டும் அல்லாமல்–உங்கள் இல்லங்களில் மட்டும் அல்லாமல்–உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

குறளைக் கற்றுக் கொள்வதால்,
நீங்கள் செம்மைப்பட்டு–
நீங்கள் செம்மைப்படுவதால்,
நாடு செம்மைப்பட்டு–
நாடு செம்மைப்படுவதால்,
உலகு செம்மைப்படச் செய்ய வேண்டும்.

*(** சென்னை–இராணி மேரி கல்லூரியில் செப்டம்பர் 8, 1967 நிகழ்ந்த திருவள்ளுவர் விழாவில் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை.*

*** ஆதாரம்; 'நம் நாடு' நாளிதழ் 9–9–1967.)*

நிலத்தாய் சிரிக்கிறாள்

ஒரு நாட்டில் ஒன்று இருந்தால் மற்றொன்று இருப்பது இல்லை.

நம் 'தவத்திரு' நாட்டிலோ எல்லாவற்றையும் பூமி தன் மடியில் அடக்கி வைத்திருக்கிறது.

"தோண்டினால் உனக்கு வேண்டியதைத் தருகிறேன்" –என்று 'பூமி மாதா' கூறுகிறாள்!

கொஞ்சம் தோண்டினால் ஊற்று நீர்!

இன்னும் கொஞ்சம் தோண்டினால் சுண்ணாம்புக் கல்!

மேலும் சிறிது தோண்டினால் செம்பு–அதற்குப் பிறகு தங்கம்!

அதற்கும் அடியிலே தோண்டினால், தங்கத்துக் கெல்லாம் மேலான 'கருப்புத் தங்கம்' என்று பொருளாதார வல்லுநர்கள் போற்றும் நிலக்கரி!

இத்தனையும் தருவதற்குத் தயாராக இருக்கிறது நம் நிலம்.

இதனைத்தான் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பால் உணர்த்தியிருக்கிறார்; நிலத்தை மதிக்க வேண்டிய இன்றியமையாமையையும் வலியுறுத்தியிருக்கிறார்,

"இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்"

என்னும் குறள் மூலம்!

நம்மிடம் எல்லாம் இருந்தும்–

"எதுவும் இல்லையே!"

–என்று தலைகுனிவதைப் பார்த்துத்தான் 'பூமி மாதா' (நிலத்தாய்) சிரிப்பாள்!

ஒரு பெண் தங்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தால்–தமிழர்கள் அதைத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள்.

இதை அறிந்துதான், "பூமி மாதா சிரிப்பாள்" என்று வள்ளுவர் எழுதியிருக்கிறார்.

நமது நிலத்திலே வளம் இருப்பது தெரிகிறது. ஆனால் அதனைத் தோண்டி எடுக்கும் அதிகாரம் நம்மிடத்திலே இல்லை!

"சேலத்திலே இரும்பு இருக்கிறது" –என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

வள்ளுவர் கூற்றுப்படி–

இரும்பைத் தன் மடியிலே அடக்கி வைத்திருக்கும் கஞ்சமலை, நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது!

"தொழிற்சாலை வேண்டும் என்று துடிக்கிறாயே–இங்கே தோண்டி எடு இரும்பை"

–என்கிறது கஞ்சமலை!

(சென்னை ஆகஸ்டு 15, 1967, விடுதலை நாள் விழாவில்– முதல்வர் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை.*

** 'நம் நாடு', ஆகஸ்டு 23, 1967)*

இணையில்லா இலக்கிய வளம்

செழுமையான இலக்கிய வளம் நிறைந்த மொழி நமது மொழி–தமிழ் மொழி.

இதில் சிறிதும் ஐயப்பாடு கொள்ளத் தேவையில்லை.

உலகோர்முன் – அவர் எம்மொழியினராயினும் சரியே – எத்துணைக் கலையியல் வாய்ந்த எழுத்தாண்மைத் திறம் படைத்திட்ட நாட்டவராயினும் சரியே–நாம் தலைநிமிர்ந்து கூறிடலாம் அவரிடம்:

"எம்மொழி தமிழ் மொழி. மிகச் செழுமையான மொழி. கலைப் பண்பார்ந்த ஏட்டுக் கருவூல வளம்–காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியப் பகுதி ஏராளம் உண்டு எம்மிடம்–எமது செந்தமிழில்!" –என்று.

இது வெறும் புகழ்ச்சியல்ல–உண்மை! தற்பெருமைக் குற்றத்தினைப் பொருட்படுத் திடவே கூடாத தன்மைத்தான் தற்பெருமிதமும் கூட!

இலக்கிய உலகில்–எழுத்தாண்மைத் துறையில் தமிழர் தம் சாதனை மிகவும் எடுப்பானது–ஈடும் இணையும் அற்றதும் கூட!

எடுத்துக் காட்டு வேண்டுமா?

இதோ ஒரு பாடல்:

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று

இத்திறத்த எட்டுத் தொகை.

–இந்த ஒரு பாடலில் மட்டும் எட்டு நூல்கள் குறிப்பிடப்படுகின்றன. 'எட்டுத் தொகை' என்னும் ஒரு சிறப்புத் தொகுதியில் வருவன மட்டும் இவை–மெத்தச் சிறப்புடைத்தான நூல்கள் இவை.

மற்றத் தொகுதிகள்–தொகுப்புகள் பற்றிப் பேசிடலும் வேண்டுமோ!

உலகப் பேராசிரியர்

எவ்வளவு பெருமைப்பட்டுக் கொண்டாலும் தகும். தவறு ஏதும் இல்லை, நாமே பெருமிதப்பட்டுக் கொள்வதில்.

மானிடப் பண்பியல்புகளுக்கு ஓர் உறைவிடமாய்–வாழ்க்கை வழி, நெறி முறைகளுக்கான வழி காட்டியாய்–அமைந்துள்ளது திருக்குறள்.

"காலக் கூறுக்கு ஏற்ற இலக்கியம் திருக்குறள் அன்றி வேறு ஏது?"

–என்றும் நாம் கேட்டிடலாம், எவரைப் பார்த்தும்.

உலகெங்கணும் பறைசாற்றிடலாம்; அஞ்சிடத் தேவையில்லை.

"வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ்நாடு"

–நமது நாடு,

எதனால் இப்படிக் கூறினார் சி. சுப்பிரமணிய பாரதியார்?

அந்த வள்ளுவர், திருக்குறள் என்ற பொய்யாமொழியினை–வாழ்க்கை நெறிக் கோட்பாட்டு மறைதனைத் தீட்டியதால்தான்!

ஷெல்லி, பைரன், கீட்ஸ், கால்ரிட்ஜ், எமர்சன், பேக்கன் முதலிய ஆங்கிலப் பாவாணர்களும் பேரிலக்கிய நூலாசிரியர்களும் அளித்துள்ள நற்காவியங்களும், எழுத்தோவியங்களும் நமக்கு அந்நியம் ஆகுமா? அயலானவை தாமா?

'அந்நியம்' என்கிற சொல்லின் நேரிடையான பொருளில்தான் அவற்றையெல்லாம் கருதிட வேண்டுமா? ஒதுக்கிடவும் வேண்டுமா?

தமிழ் மறையாம் திருக்குறளைத் தீட்டிய திருவள்ளுவர், தமிழர் என்பதால் தமிழருக்கு மட்டுந்தான் வழிகாட்டியா?

"வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ்நாடு"

–என்று பாடிப் பூரித்து மகிழ்கின்றோமே, என்ன பொருள் அதற்கு?

ஷெல்லி போன்றோர் ஆங்கிலத்திற்கோ, ஆங்கில நாட்டாருக்கு மட்டுமோ உரித்தானவர் அல்லர்!

அதுபோன்றே திருவள்ளுவரும் தமிழுக்கோ–தமிழர்களுக்கு மட்டுமோ உரியவர் ஆக மாட்டார்.

அவர்கள் அனைவரும் உலகினுக்கே சொந்தம்!
உலகப் பெருமக்கள்–குடி மக்கள்–அவர்கள்!
உலகப் பேராசிரியர்களும் ஆவார்கள் அவர்கள்!

(1967–ல் பேரறிஞர் அண்ணா ஆற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புப் பேருரை.*

* ஆதாரம்: திரு. மு. நமசிவாயம் தொகுத்துள்ள *'சாமானியனின் சகாப்தம்'* நூல்.

பெருநெறி காட்டும் வழிகாட்டி நூல்

வள்ளுவர் தந்த திருக்குறள் தமிழர்க்கு மட்டும் அல்லாமல், பண்புடன் வாழ விரும்பும் அனைவர்க்கும் ஒரு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

திருக்குறள் பூஜா மடத்துக்கு மட்டும் தயாரிக்கப்பட்ட ஏடு அன்று; புனைந்துரைகள் நெளியும் புராணம் அன்று; வாழ்விலே, தூய்மையை—அவரவரும், தத்தமது திறனைச் சரியாகப் பயன்படுத்தி, மற்றவர் வாழ்வின் மேம்பாட்டினையும் மதித்து ஒழுகுவதன் மூலம் பெறக்கூடியது என்ற பெருநெறியைக் காட்டும் நூலாகும்.

திருவிழாக்களையும், தீர்த்த மகிமைகளையும், திருப்பல்லாண்டுகளையும், திரு அவதாரங்களையும்—இவற்றின் பிற பதிப்புகளான வெண்பொங்கல், இனிப்புச் சோறு எனும் இன்ன பிறவற்றினையும் மக்களுக்கு வழங்கும் அழுக்குக் கருத்துரைகள் கொண்ட ஏடுகளையே தமிழ்நாடு கொண்டாடி வருகிறது. காரணம் பலப்பல. விளைவோ—வாழ்வில் வேதனை; சமூகத்தில் சச்சரவு; நாட்டிலே நலிவு!

நாம் இதுகாறும் அத்தகு ஏடுகளின் பிடியிலிருந்து நாடு விடுபட வேண்டும் என்பதற்காகப் பணிபுரிந்து வந்தோம். அப்பணி தொடர்ந்தும் நடந்து வருகிறது.

அப்பணியுடனும் இப்போது நாம் வள்ளுவர் தந்த திருக்குறளை ஒவ்வோர் இல்லத்திலும் குடியேறச் செய்தாக வேண்டும்; ஒவ்வொருவர் மனத்திலும் அவருடைய அற உரைகள் பதியச் செய்ய வேண்டும் என்ற சீரிய பணியினை மேற்கொண்டு உள்ளோம்.

குறள் ஏந்திச் செல்வோம்

நாம்—நாவலரும் பாவலரும் கூடிடும் நல் மணிமாடத்திலே அல்ல உலவுவது; உரையாடுவது! 'நாதனைக் கண்டோம்; எம் நாவில் அவர் சூலம் பட இம்மெய்யறிவு கொண்டோம்' என்று இயம்பிடும் அருள் விற்பனையாளர்களின் அணி மாடங்களை நாம் அணுகுவது இல்லை.

மக்கள் இத்தகையவர்களிடம், மறைந்து கிடக்கும் இம் மாணிக்கத்தை—திருக்குறளைக் காட்டும் மகத்தான பணியினை, நாம் மேற்கொண்டுள்ளோம்.

நமது பணி வெற்றி பெற்றால்தான், மக்களின் உடைமையாகும்—இந்தத் தமிழ் அறிவு களஞ்சியம்.

நமது பெரும் பணி மூலமே, மக்களுக்கு, வாழ்க்கையிலே சந்தேகத்தை நீக்கவும், போக்கவும், நேர்மையை நிலை நாட்டவும் உதவும் இப் பெருநூலின் உண்மைப் பொருள் தெரிய முடியும்.

குறள் ஏந்திச் செல்வோம்—நாடு, நகரமெங்கும்; பட்டி, தொட்டிகளில் எல்லாம்! பண்பாடு—எது என்பதை மக்கள் அறியச் செய்வோம்!

அறம், பொருள், இன்பம் எனும் அரிய முப்பொருளை மக்கள் உணர மட்டுமல்ல: நுகரவும் பணியாற்ற வேண்டும்.

புதிய பணி இது; ஆனால் நமது பழைய பணியின் தொடர்ச்சிதான்—முற்றிலும் புதிதன்று!

அப்பணிக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு—குறளின் அருமை, பெருமை பற்றி அறிஞர்கள் கூறியுள்ள கருத்துரைகளை எண்ணிப் பார்ப்பது முக்கியமான முதல் வேலையாகும்.

உள்ளுவரோ மநுவாதி?

பேராசிரியர் சுந்தரனார் பெரும்புலவர். அவர், வள்ளுவரின் திருக்குறளைப் பற்றிய அருமை பெருமையினை அறிவிக்கப் பல கூற வேண்டாம்; முக்கியமானதைச் சுட்டிக் காட்டினால் போதும் என்று எண்ணி—

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி?

என்று பாடியுள்ளார்.

இந்த 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' என்னும் முறையினைக் காலம் கூடத் தகர்க்காதபடி, அவ்வப்போது உரம் ஊட்டி வருவனவே—புராண, இதிகாசங்கள், அவற்றை நம்பியதாலேயே நாடு நலிவுற்றது.

நாட்டின் நலிவு நீங்கி, மக்கள் நல்வாழ்வு பெறுவதற்காக வள்ளுவர் குறளை, மறுவற நன்கு

உணர்ந்தார் ஆதல் வேண்டும் மக்கள்.

வள்ளுவர் அனைத்துப் பிரச்சினைகளையும் ஆராய்ந்து அரிய உண்மைகளை வெளியிட்டிருக்கிறார்.

கடவுள் கொள்கை, நாடு, அரசு, இல்வாழ்க்கை எனும் பல பகுதிகளாக உள்ள குறளின் முழு நோக்கம்—மக்கள் அற நெறியில் நிற்க வேண்டும் என்பதேயாகும். ஏனெனில், அவர் கூறியபடி அறத்தால் வருவதே இன்பம்.

இந்த அறநெறியைப் பரப்பும் பணியினை மேற்கொள்ளும் தமக்கு உறுதுணையாக, அறிஞரின் கருத்துரைகள் உதவுகின்றன.

வாழ்க வள்ளுவர்!

திருக்குறளின் அருமையினை எடுத்துரைத்த அறிஞர் பலர், பல மொழிகளிலே குறள் மொழி பெயர்க்கப்பட்டு, அதன் பெருமை கடல் கடந்தும் சென்று பரவியுள்ளது.

எனினும் தமிழர் மனைகளிலே குறள் உண்டோ? பஞ்சாங்கம் இருக்கும்; பாரதக் கதை இருக்கும்; இராமாயணமும் இருக்கும்; அல்லி அரசாணி மாலையும் இருக்கும்; அபிமன்யு வீரமும் இருக்கும்; அறநெறி கூறும் அருமைத் திருக்குறள் இருக்குமா? இல்லையே! ஏன்?

பண்புடைத் தமிழரின் மனப் புண்ணும்—பயனில் நூல்களை மட்டுமே அறிந்ததால் மக்கள் மனத்திலே மூண்டு கிடக்கும் மருளும் – போக்கப்பட வேண்டும்.

வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி!

*(** 'திராவிடநாடு' கிழமை இதழ், சனவரி 14, 1949.)*

பட்டை தீட்டிய வைரம்

திருக்குறள் இன்று பல்வேறு மொழிகளில் ஆக்கப்பட்டு உலக அரங்கில் உலா வருகிறது. இந்த அளவு வெற்றி, வேறு எந்தத் தமிழ் நூலுக்கும் கிடைத்தது இல்லை.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தரணிக்கெல்லாம் நன்னெறி கூறும் நூல். நாளாக, நாளாக—சூழ்நிலை மாற மாற—திருக்குறள், புதிய விளக்கங்களை, விரிவான கருத்துகளை நமக்குத் தரும் ஆற்றல் வாய்ந்தது! அதன் ஆழ்ந்த பொருளை அறிய ஆராய்ச்சி செய்வது இன்றியமையாதது.

வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய ஆராய அதில் பல புத்தம் புதிய அருமையான கருத்துக்கள் புலப்படும்.

இனித் திருக்குறளைப் பற்றி விரிவுரைகள் ஆற்ற வேண்டிய அவசியம் இல்லை. வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களை எவ்வாறு பயன்படுத்துவது என்று ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டியதுதான் தேவை.

பல்கலைக்கழகத்தில் தனித்துறை

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. அந்தக் காலத்தில் வேறு நாடுகளில் இயற்றப்பட்ட எந்த நூலிலும், குறளில் உள்ளதைப் போன்ற கருத்துக்கள் காணப்படவில்லை.

பிற நாடுகளில் மக்கள் காட்டு மிராண்டிகளாக இருந்த அந்தக் காலத்திலேயே தமிழர்கள் நல்ல பண்பாடு மிகுந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதைத்தான் திருக்குறள் காட்டுகிறது.

திருக்குறளைப் பற்றிப் பெருமையாகப் பேசும் நம்மிடம் மூடப் பழக்க வழக்கங்கள் இருப்பதைப் பார்க்கும் வெளிநாட்டவர் நம்மைப் பற்றி ஐயப்படுவார்கள். அதனால்தான் திருக்குறளுக்கு உலகில் கிடைக்க வேண்டிய அளவு பெருமை கிடைக்கவில்லை.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்'

—என்ற குறளையும் போற்றிக்கொண்டு, சாதி முறைகளையும் கைவிடாமல் இருப்பது வாழ்க்கை நெறிக்குப் பொருத்தமாக இராது; குறளை நாம் உண்மையாகவே போற்றுவது ஆகாது!

*(** சென்னை, மயிலாப்பூரில் 1967 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில் முதலமைச்சர் பேறிஞர் அண்ணா ஆற்றிய சிறப்புரை.*

*** 'நம் நாடு' நாளிதழ்.*
அக்டோபர் 16, 1967.)

பிசிராந்தையார்

- கலைஞர்

குளத்து மீனைக் கொடிதனில் நீந்தச் செய்து
களத்தினிலே வெற்றிகளைக் குவித்திட்ட பாண்டி நாட்டு மக்களுக்கு

உளத்திலொரு வருத்தமுண்டு; அஃதென்னவெனில்
வளத்தைப் பெருக்காமல் வரி பெருக்கி வருமானம் பெருக்க முனையும்

வாள் மீசைக்காரன் அறிவுடை நம்பிப் பாண்டியனின்
வளைந்திட்ட ஆட்சிக்கோலை நிமிர்த்திட வேண்டுமென்பதேயாகும்!

நாட்டு நிலையை எடுத்துரைத்துப் பாண்டி மன்னன் திருந்திடவே –
நீட்டோலை கொண்டு பலர் அவனைச் சந்திக்கச் சென்று
கால் வலித்துத் திரும்பிவிட்டார்!

ஆடலரங்கம், இசையரங்கம்; அத்தாணி மண்டபத்தில்! அரசியுடன்
ஊடலரங்கம், கூடலரங்கம், அனிச்சமலர் மஞ்சத்தில்!

ஏடு கொள்ளா இன்பத்தில் திளைத்திடலே
நாடு காக்கும் முறையென்று; நாலைந்து பேர்வழிகள்

அரசுத்துறையோர் அமர்ந்து கொண்டு
அறிவுடைநம்பியினை அடுத்தடுத்துக் கெடுக்கலானார்!

அரசன் எதைச் சொன்னாலும் ஆமாம் என்று
அவசரமாய்த் தலையாட்டி; அடடா! அருமை அருமையென

பாராட்டிப் போற்றிப்புகழ்ந்து அவனை இன்பச்சேற்றில்
தேரோட்ட வைத்து ஆட்சியினை வசமாய்ச் சிக்கவைத்தார்!

அற்ற குளத்து அறுநீர்ப்பறவை போன்றார் – சில
உற்றார் உறவினரும் அதுதான் சமயமென்று; தாம்

கற்ற வித்தை அனைத்தும் காட்டி நாட்டோரை வஞ்சிக்கும்
குற்றங்கள் கணக்கின்றிப் பெருக்கலானார்!

சோலைவனப் பாண்டிநாடு சொந்த நலம் நாடுவோரால்
பாலைவனப் பூமியாகும் எனப்பயந்த சான்றோர் பலர்;

காலைக்கதிர் உதித்தெழுந்து காரிருளும் தொலைவதற்கே
கடமையாற்ற முனைந்திடுவீர் எனக் கவிஞர் ஒருவரிடம் வேண்டி நின்றார்!

பிசிர் எனும் பாண்டிநாட்டுச் சிற்றூரில்
பிறந்திட்ட ஆந்தை எனும் பெயருடையார் அக்கவிஞர்!

பிசிராந்தையார் என்று பெருமைமிகு வரலாற்றேட்டில்
பீடுநடைபோட்டு நட்புக்கோர் இலக்கணமாய் வாய்ந்தவராம்!

கோப்பெருஞ்சோழன் எனும் மன்னனை நேரில் பாராமலே அவன்
மாப்புகழ் கேள்வியுற்றுத் தன்னையவனுக்கு
நண்பராய் வரித்துக் கொண்டவராம்!

சொந்தநாடாம் பாண்டிநாட்டில் சோர்வுற்று மக்கள் எலாம்
நொந்துமிக இன்னலுற்றுத் தள்ளாடும் நிலைமாற்றத்
தன்னால் முடியுமென நம்பிக்கை தெரிவித்துத் துணிந்து
மண்ணாளும் அறிவுடை நம்பியினைச் சந்திக்கப் புறப்பட்டார்!

பார்வேந்தனாம்நம்பி; பாவாணர் பிசிராந்தை வரும் செய்தி கேட்டு
பாவேந்தரை மனம் கோணச் செய்தல் பெருங்கேடாய் முடியுமென அஞ்சி,

தமிழுக்கு மரியாதை செய்கின்ற பண்பாடு குன்றாத காரணத்தால்
தமிழ்க்கவியைத் தகுதியுடன் வரவேற்றுத் தலைதாழ்த்தி வணக்கம் செய்தான்!

"செந்தமிழுக்கு நீ செய்கின்ற சிறப்புக்கு மகிழ்ச்சியெனினும்
செங்கோலைக் கொடுங்கோலாய் மாற்றுதல் நன்றோ மன்னா?

பந்தங்கள், சொந்தங்கள் எனச் சொல்லிக்கொண்டு – தீப்
பந்தங்களாய்ச் சுடுகின்றார் உன்பக்கமிருப்போர்; நாட்டோரை! நல்லோரை!

அரசனை அன்றாடம் இன்பப்பொழுது கழிக்கச் செய்துவிட்டு
அரசியலைத் தமதாக்கி விளையாடும் அரசுத்துறையோர் தம்மை;

அடையாளம் தெரிந்துகொளல் வேண்டும் வேந்தே! உன்
அழிவுதனைத் தடுத்திடவும் அதனினும் மேலாக

அழியாமல் என்றும் நமதுநாட்டு நற்பெயரைக் காத்திடவும்
அறிவுரை சில கூறிடவே வந்துள்ளேன்; ஏற்பாயோ?" எனக்கேட்டு,

"காற்றடிக்கும் திசையினிலே கவிப்பாய் விரித்துப் படகோட்டி
போற்றிப் புகழ்ந்துகொண்டே தீங்குகளை மறைத்துச் சிலர்
போதுமான பரிசுகளைப் புவியாள்வோர்பால் பெற்றுச்செல்வர்!– நானோ; உன்பால்
வாதுசெய்து நின்னாட்சிதனை வகைப்படுத்த வந்துள்ளேன்;
சீறிடாதே!" என்றுரைத்தார்.

"கல்லும் கசிந்துருகத் தமிழ்பாடும் கவியரசே!
அல்லும் பகலும் எனைச் சூழ்ந்திருப்போர்;

அறிவுரை எதுவும் கூறித் திருத்துவதற்குத் தகுதியின்றி
'ஆம்' என்றே அனைத்துக்கும் தலையசைத்துத் தரமிழந்து போனார்!

செறிவுநிறைத் திறம் வாய்ந்த பெரியீர் நீவிர்; இந்தச்
செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் செம்மைகாக்க வந்துள்ளீர்!
அறிவுடைநம்பியென எனக்குப் பெயர் மட்டும் இருந்தென்ன பயன்?
அரசுக்குத் தேவை; இயற்றலும் ஈட்டலும் காத்து வகுத்தலுமன்றோ?

இதனை மறந்து நடக்கின்ற ஆட்சிதனைக் கடிந்து
இடிப்பாரையில்லாத ஏமரா மன்னனாக இருந்துவிட்டேன்!

எடுத்துரைப்பீர்; என்ன செய்யவேண்டும் நான் ? நீவிர்
தொடுத்துவைக்கும் அறிவுரையைத் தொழுதேற்றுச்
சூடிக்கொள்வேன்'' என்றான்.
''மன்னா கேள்! ஒரு மாவுக்குக் குறைந்த நிலமாயினும்
மகசூல் கண்டு நெல்லை அறுவடை செய்து வந்து; அதனைக்

கவளம் கவளமாக யானைக்கே தருவதாயினும்; நல்ல
கவனமுடன் செயல்பட்டால் அவ்வுணவு பலநாளைக்கு ஆகிவரும்!

அஃதன்றி;
நிலத்துக்குள் நீயே சென்று மேய்ந்துகொள்க என
நீள் துதிக்கை யானைக்கு உரிமை தந்தால்—பெருங்

கழனியின் நெல்மணிகள் யானையின் வாய்க்கு மட்டுமின்றி
காலுக்கும் தலைநாணி; மதிபட்டுக் கழனியே படுபாழாகும்!

இரை கொள்ளும் யானைக்கே இவ்விலக்கணம் பொருந்துமென்றால்
இறை கொள்ளும் அரசுக்கும் இதுவே பொருத்தமன்றோ ?

தரையிலும் மீன் வாழுமென்று தண்ணீரை விட்டு நீ எடுக்கச்
சொன்னால்;
தடுத்துரைக்க வலுவின்றி தலையாட்டும் பதுமைகளாய்;

அமைச்சர்களும், அரசுத்துறைப் பொறுப்பாளர்களும்
அமைந்துவிட்ட காரணத்தால் – அறிவில் நீ மெலிந்துவிட்டாய் மன்னா!

தொடர்கதையாய் இக்கதையே நீண்டுவிட்டால் – துன்பம்
படர்கதையாகித் தொன்மைமிகு சீர்வாய்ந்த சங்கத்திருநாடு
தாழ்ந்துபோகும்!
மக்களை வாட்டி வருத்தி வாங்குகின்ற வரிப்பொருள்தான் ஆட்சியின்
குறியென்றால்
மதயானை புகுந்த வயல்போல யாருக்கும் நலமின்றி மண்மேடாகும்
நாடு! அறிக!'' என்றார்!

''விருந்தெனக் கவிபாடி எனை மேலும் கேளிக்கையில்
வீழ்த்துகின்ற பரிசில் கவிஞர் சிலர் போலன்றி – நீவிர்

மருந்தெனக் கவிதந்து என் மனம் மாற்றிப் போட்டுவிட்டீர்!
திருந்தினேன் இன்று முதல்; உமது திருவடிகள் அரண்மனையில் பட்டதாலே!''
என்றான் மன்னன்;
வென்றார் புலவர்!

''காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே,
மாநிறைவு இல்லதும், பன்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,



கோடி யாத்து, நாடுபெரிது நந்தும்;
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்,
தானும் உண்ணான், உலகமும் கெடுமே!"

(புறநானூறு : பாடல் : 184,
பாடியவர் : பிசிராந்தையார்)

பொருள் விளக்கம்:
காய்நெல் = காய்ந்த நெல்
மா = நிலத்தின் அளவுகளில் ஒருவகை செறு = கழனி
தமித்து = தனியாக நந்தும் = தழைக்கும்.
மெல்லியன் கிழவனாகி = அறிவால் வேந்தன் மெலிந்து.
வரிசை அறியாக் கல்லென் சுற்றம் = தரமறியாமல் (அரசன்)
விரும்புவதையே தாமும் கூறுகிற ஆரவாரமிகுந்த சுற்றத்தார்.
பரிவுதப = அன்புகெட.
பிண்டம் நச்சின் = பொருளை விரும்பினால். இறை = வரி



பேசுமொழி தமிழ்மொழி என்றதாலும்; பேசியவர்
பிசிராந்தைப் பெருமகனார் என்றதாலும்

மாசு மருவின்றி இனி ஆட்சி நடக்குமென
மன்னன் உறுதிமொழி தந்ததோடு

தந்திட்ட மொழி தவறாது காத்திடவும் செய்தான்
தரணியிலே தன்புகழ் பூத்திடவும் செய்தான்.

அறிவுரைநம்பிக்கோர் அறிவு விளக்காக அமைந்திட்ட
தெளிவுடைச் செந்தமிழ்ப் பேரொளியாம் பிசிராந்தை;

சோழநாட்டு வேந்தன் கோப்பெருஞ்சோழன்பால்
சொல்லாலே நெய்வதற்கு இயலாத அன்புதனைக் கொண்டிருந்தார்.

கவிபுனையும் ஆற்றல், கற்றாரைப் போற்றுகின்ற பாங்கு,
புவியெங்கும் மெச்சுகின்ற கொடைத் திறம்,

கண்ணிமை போல் நாட்டுக்குக் காவல்,
தண்ணிலவை மிஞ்சுகின்ற தகைசால் உள்ளம்;

கோப்பெருஞ்சோழனிடம் குடிகொண்ட இக்குணங்கள்
குளிர்புனல் இதயக் கவிஞரை ஈர்த்தது மிகவே!

பிறந்த இடமாம் பிசிர் எனும் ஊரில் – நிழல்
அடர்ந்த தோப்பில் நெறியுடைக் கவிஞர் ஒருநாள்;

ஆய்வுக்குரிய பல்பொருள் குறித்து – சிந்தனை
அசைபோட்டவாறு, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

அப்போது அன்னச் சேவல் ஒன்று இறக்கைகள் விரித்து
ஆகாயவெளியிற் பறந்து செல்வதைக் கண்டார் புலவர்!

ஆருயிர் நண்பன் சோழனைக்குறித்துப் பாடலொன்று;
யாத்திடும் ஆசை நிறைவேற வேண்டுமென்று,

அன்னச் சேவலை மையமாய் வைத்து – அழகுறப்பாடல்
கன்னல் தமிழில் கற்பனையூற்றாய் எழுதினார் புலவர்!

"அன்னச் சேவலே! அன்னச் சேவலே!" என அழைத்து
இன்னலுற்றுள்ள தன் நெஞ்சைத் திறந்து காட்டி,

மன்னவன் பெருங்கோ கிள்ளியெனும் கோப்பெருஞ்சோழனை
இன்னமும் காணும் வாய்ப்பினைப் பெறவில்லையே யென்ற

மனப்புயல் ஒருபுறம், அடக்கிக்கொண்டு – அவன்
மாப்புகழ்பற்றி எடுத்துரைத்தார்!

கோக்காமல் முத்துக்கள் மாலையாவதில்லை – ஆனால்
பார்க்காமலே சோழனும் புலவரும் நட்பின் ஆரமாய்த் திகழ

தமிழே மணியாய் – தமிழ் உணர்வே இழையாய் ஆனதுவாம்!
தடந்தோள் சோழனின் கொடையும் அன்பும் பாட்டின் கருவாய்
அமைந்ததுவாம்!



"அன்னச்சேவலே! அன்னச்சேவலே! நீயோ
கன்னிக் குமரியின் முனையிலேயிருந்து

அயிரைமீனைக் கொத்திய அலகுடன் – வெகு
உயரம் விண்ணில் பறந்தவாறு,

பனிமலை நிறைந்த வடக்கு திசைக்குப்
பயணம் செய்கிறாய்; நின் பயணம் வெல்க!

கடக்கும் வழியில் என் கண்மணிச்சேவலே! – பகை
அடக்கும் சோழன் தலைநகர் உளது!

கோழியூர் எனப்படும் உறையூர் நகரே – எனது
கோப்பெருஞ்சோழனுக்குரிய தலைநகர்!

மேழிச்செல்வம் கோழைபடாது எனும் கொள்கையுடனே
மேன்மையாய் நாட்டைக் காக்கும் மன்னவன்!

வலக்கரம் வழங்குவது இடக்கரம் அறியாமல்
வழங்கிடும் தென்னவன்!

வழியில் நீயும் நின் பெடையுடன் சென்றால் – சோழன்
விழியில் அன்பின் ஒளியினைக் காண்பாய்!

இடையில் எவரும் தடுத்து நிறுத்தினால்
பெடையுடன் நீயும் திரும்பிடல் வேண்டாம்!

இறைவனாம் சோழன் செவியில் விழுமாறு
உறையூர்க் காவலர்பால் உரக்கக் கூறிடு!

ஆந்தையார் எனும் புலவர் வாழ் பிசிர் எனும் ஊரைச்
சார்ந்தோர் நாங்கள் எனச் சாற்றுவாயாகில்;

அரசனே ஓடிவந்துமை வரவேற்று வாழ்த்தி
அணிமணி பலவும் நின் பேடைக் களிப்பான்!

ஏனெனில் அத்துணை நட்பு அவனுக்கென்னிடம் உண்டு
தேன் எனில் தெவிட்டிவிடும்; இதுவோ எம் இருவரிடை
என்றுமே தெவிட்டாத நட்பு."

*

"அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்
நாடுதலை அளிக்கும் ஒண்முகம் போலக்
கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலை யாம் கையறுபு இனையக்,
குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி,
வடமலைப் பெயர்குவை ஆயின், இடையது
சோழநன் னாட்டுப் படினே, கோழி
உயர்நிலை மாடத்துக், குறும்பறை அசைஇ
வாயில் விடாது கோயில் புக்கு, எம்
பெருங்கோக்கிள்ளி கேட்க, 'இரும்பிசிர்
ஆந்தை அடியுறை' எனினே, மாண்ட நின்

இன்புறு பேடை அணியத், தன்
அன்புறு நன்கலம் நல்குவன் நினக்கே'' –

(புறநானூறு: பாடல்: 67 பாடியவர்: பிசிராந்தையார்)

பொருள் விளக்கம்:

ஆடுகொள் வென்றி ஆடுபோர் = கொன்று குவிக்கும்
போர்க் களத்தில் வெற்றிவாகை சூடுகிற.
கையறுபு இனைய = செயலற்று வருந்திட.
அயிரை = ஒருவகை மீன்.
குறும்பறை = பேடையெனப்படும் பெண்பறவை.
மாண்ட = மாட்சிமையுடைய.
நன்கலம் = அணிகலன்.

ஆந்தையார் சொற்கேட்டு அன்னச் சேவலார் – சோழ
வேந்தனிருக்குமிடம் சென்றாரோ இல்லையோ;

ஆருயிர் நண்பன் சிறப்பைச் செதுக்கிய மனநிறைவுடன்
அன்பு மனைவியிடம் புலவர் அதனைப் பாடிக்காட்டி மகிழ்ந்தார்!

''அன்னச் சேவல் கற்பனை மிக அருமை'' என்றுரைத்தவாறு
அன்னம் படைத்திட்டாள் துணைவி; அவருக்கும்
பேரக்குழந்தைகட்கும்!

''முல்லை வரிசை இரண்டிங்கே சிரிக்கின்ற காட்சி பாராய்'' என்றார்!
வில்லையொத்த புருவம் விரித்து ''எங்கே ?'' எனக் கேட்டாள்
துணைவி!

''பாவையுந்தன் பாளைச் சிரிப்போடு – இதோ
பச்சரிசிச் சோற்றின் சிரிப்பையுந்தான் முல்லையென்றேன்'' என்றார்!

''பார்த்துப் பேசுங்கள் கொஞ்சம்; பக்கத்தில் பேரக் குழந்தைகள்''
என்றாள்! ''நமது மகன்;
வார்த்தெடுத்த வைரச்சிலைகளுக்கு இம்மொழி புரிய வயது போதாது!

வளர்ந்த மகன், மனைவியுடன் வயலுக்குச் சென்றுளான் – அவர்கள்
வருவதற்கு நேரமாகும்; அஞ்சாதே!'' என்றார்.

''வந்துவிடுவார் இப்போது கொஞ்சாதீர்'' என எச்சரித்தாள்!
– உடன்
வாய் மூடிக்கொண்டார் புலவர்; அவள் வடித்திட்ட சோற்றாலே!
– அது

போய்த் தொண்டையிலே அடைத்ததாலே
புரையேறிப் புலவர் தவித்தார்!

தையலோ தாவிப்பாய்ந்து கணவன் தலையிலே ஒரு தட்டுத்தட்டிக்
கையினால் நெஞ்சைத் தடவிக் கொடுத்தபோது தழுவினார்; நழுவி
விட்டாள்!

கலகலவென ஒலிக்கின்ற சதங்கைபோலக் காதல் முதியோர்
களிப்பு மிகக் கொண்டவாறு சிரித்துவிட்டார்!

கரும்பின் அடிப்பாக இனிப்பைப்போல் மழலை கொட்டி – பிஞ்சுக்
கைகளையே தட்டிக்கொண்டு பேரன் பேர்த்தி சிரிக்கலுற்றார்!

மடையுடைத்தாற்போல் பொழிந்த மகிழ்ச்சிக்குத் திடுமென
தடைவிதித்தாற் போல் செவியில் விழுந்தது ஒரு செந்தழல் செய்தி!

உறையூர் வேந்தன் கோப்பெருஞ்சோழனை எதிர்த்து – அவன்
உயிராய்ப் போற்றிய மைந்தர்கள் படை எடுத்தனர் என்றும்,

கிள்ளைமொழித் தமிழால் கவிபுனையும் சோழ மன்னவனோ
பிள்ளைகளின் செயலால் பெருந்துயரில் ஆழ்ந்திட்டான் என்றும்

வெள்ளை மலர் உள்ளத்தான் வேறு வழியே இன்றி
வீரவாளைக் கரமேந்திக் களம் காண எழுந்திட்டான் என்றும்

தந்தைக்கும் மைந்தர்க்கும் மூண்டுவிட்ட போராட்டம் குறித்த
விந்தைச் செய்தியினைக் கேட்டுப் பிசிராந்தைப் புலவர்

சந்தையில் தொலைத்துவிட்ட பொருளாயிற்றே தமது மகிழ்ச்சி
எனக் கூறி
சிந்தை மிக நொந்து புறப்பட்டார் சோழநாடு!

'தமிழினத்தார் தன்மானம் மிக்குடையார் – பகைவர்க்குத்
தலைதாழ்த்தும் நிலை வந்தால் தயங்காமல் உயிர் துறப்பார்!

இமிழ் கடல் தாண்டியும் புகழ் மணம் பரப்பி – நல்ல
அகில், மிளகு, முத்து வாணிபம் புரிவார்!

இலக்கிய மேதைகள், இனிய நற்கவிஞர்கள்
இயற்கையைப் போற்றுவர், எழில் மாடம் அமைப்பர்!

இனத்தின் மேன்மை ஏட்டில் நாட்டுவர்
இறைமாட்சி தவறாது இந்நிலமிசை ஆள்வர்!

கல்தோன்றி மண்தோன்றாப் பழங்காலத்தின்
முன்தோன்றி மூத்த குடிமக்களும் தமிழரே ஆவர்!

எல்லாம் சரிதான்; ஆனால் ஒன்று –
பொல்லா உட்பகைப் புயலில் சிக்கி

கொல்லாமற் கொல்லும் வேற்றுமையென்னும்
குழியினில் வீழ்ந்திடும் குணங்கொண்ட இனமும் தமிழினமே!

இவ்வாறு எண்ணமிட்டு நடந்திட்ட பிசிராந்தை – சோணாட்டுத்
தகராறு குறித்துத் தகவலறிய நடுவழியில் முற்பட்டார்!

கோப்பெருஞ்சோழன் அமைத்திட்ட ஊர்ப் பொது மன்றமொன்றில்
கூடியுள்ளனர் அவ்வூர்ச் சான்றோர் எனக் கேள்வியுற்று

வார்த்தையில் அடங்காப் பரபரப்புடனே இதயம் துடிக்கப்
போர்ப்புகை அணைந்ததா என்றறிய அங்கு சென்றார்.

பொத்தியார், பூதநாகனார், நத்தத்தனார் மற்றும்
புல்லாற்றூர் எயிற்றியனார் எனும் புலவர் பெருமக்கள்

மன்றத்திலிருந்து குதித்தோடி வந்து, பிசிராந்தையாரை
மார்புறத் தழுவி "வருவீர் வருவீர்" என வாழ்த்திக் களித்தனர்!

"அங்கம் பதறி அகம் பதறி வந்துள்ளேன் அய்யா
சிங்கத்துக்கும் அதன் குட்டிகட்கும் மூண்ட போர்

என்ன ஆயிற்று ?" என வினாக்குறியாய் நின்றார் புலவர்!
"ஏதொன்றும் தீங்காய் முடிந்திடவில்லை கேளீர்!

இன்னலொன்று தோன்றிற்று அதனை இந்தப் பெருமகன்
மின்னலெனப் பாய்ந்து சென்று தடுத்துவிட்டார்

குஞ்சுகள் மிதிப்பதாலே கோழியும் பதைக்கலாமோ எனக் கேட்டு
கொஞ்சு தமிழ்க் கவிதையாலே கோப்பெருஞ்சோழனையே
குளிர்வித்துப்

போர் நிறுத்தம் செய்வதற்குக் காரணமான
புல்லாற்றூர் எயிற்றியனார் இவர்தான்" என்று

பொத்தியார் அறிமுகம் செய்துவைத்தார்!
பூரிப்பால் பிசிராந்தை துள்ளலானார் – பின்னர்;

நாத் திறம் கொண்ட நற்புலவர் கூட்டமதில்
பாத் திறம் காட்டிப் பலரும் கருத்துக்கனி உதிர்த்திட்டார்.

ஒரு கவிஞர் பிசிராந்தையாரை நோக்கி "புலவீர்!
கருமை நிறம் மாறாத தலைமுடியும் தாடியும்; உமக்கு

அகவை அறுபதுக்கு மேலாகியும் கூட அப்படியே
அணுக்கூட நரைக்காமல் இருப்பது எப்படியோ ?" எனக் கேட்டார்!

"விளக்குகிறேன் காரணத்தை கேட்பீர் அய்யா! – குடும்ப
விளக்காக வாய்த்துள்ளார் மனைவி எனக்கு!

விளைவுதனைக் கழனியிலே பெருக்குகின்ற மகனோ
ஒருசிறிதும்
வளைவுதனைக் கொள்கையாகக் கொள்ளாத காளை!

அளவறிந்து அவன் பெற்றான் இருபிள்ளை; இரண்டுமே
அறிவார்ந்த அழகு தமிழ் மழலைக்கிள்ளை!

வளமான நெஞ்சுக்குள் வாஞ்சை நிறைத்து – எனது
உளமறிந்து செயல்புரியும் ஊழியரும் உண்டெனக்கு!

சிலந்தி வலை நூலினும் மெல்லிய சிறு தவறுகூட
செங்கோலின் மீது படரக்கூடாதெனச் சூளுரைத்துச்

சீலமுடன் நடக்கின்ற ஆட்சியினைப் பெற்றுள்ள
சிறப்பும் உண்டு எந்நாட்டு மக்களுக்கு!

அடியேன் பிறந்த அழகுமிகு சிற்றூர் பிசிர் எனும் பதியில்
ஆன்றோரும் சான்றோரும் பெரும்பாலும் நிறைந்துள்ளார்!

இத்தனை பெருமையும் ஒருசேரப் பெற்ற மகிழ்வால்
முத்தனைய நிறங்காட்டி என் முடியினிலே நரைதிரை
எதுவும்

முற்றுகையிடுவதற்கு முனையவில்லை – முடியவில்லை!
கற்றறிவாளரே! கவலையில்லா வாழ்க்கையினால்



கிடைத்திட்ட பலன் இது "வென்று பகன்றிட்ட பாவலரின்
இதயம்
உடைத்திட்ட செய்தியொன்று அப்போது வந்ததங்கே!

கிழக்குதித்த சூரியன்போல் நாடாண்ட சோழ மன்னன்;
தனக்குதித்த பிள்ளைகளின் எதிர்ப்பாலே மனமுடைந்து

வடக்கிருந்து உயிர் விடுவதற்குச் சென்றான் என்று
மடல்கத்தி போல ஓலையொன்றைக் கண்டார் கவிஞர்!

"இக்கணமே புறப்பட்டு இல்லம் சென்று விடைபெற்றுத்
திரும்புகின்றேன்
இலக்கணமாய் நட்புக்கு வாழ்ந்த நாங்கள் இறப்புலகில்
பிரிவதில்லை!
வடக்கிருக்கச் சென்றுள்ள சோழனிடம் கூறிடுவீர்! – அவன்
அருகிருக்கப் பிசிராந்தை விரைவில் வருவானென்று!"

இதைச் சொல்லிப் புலவர் ஏறு இலையினின்றுதிர் பனிநீர்போல
இமை இரண்டில் விழிநீர் ததும்பப்

பதைப்புடனே பாண்டிநாடு பயணமானார்;
பாசமிகு மனைவிமக்கள் பேரன் பேர்த்தியிடம் விடைபெறுவதற்கே!

*****

"யாண்டு பலவாக நரையில ஆகுதல்
யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான், காக்கும்; அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே".

(புறநானூறு: பாடல்: 191
பாடியவர்: பிசிராந்தையார்)

(கலைஞரின் சங்கத்தமிழ் நூலிலிருந்து....)

நாடுகளும் நாணயங்களும்

ஒவ்வொரு நாடும் உள்நாட்டு வெளிநாட்டு வணிகப் பரிமாற்றங்களுக்கு நாணயங்களை அச்சடித்து வெளியிட்டு வருவது நீண்ட கால வழக்கமாக இருந்து வருகிறது. எல்லா நாடுகளுமே தங்களின் அடையாளமாக பல்வேறு வடிவங்களில் நாணயங்களை வெளியிட்டு வருகின்றன. தற்போது சில நாடுகளில் புழக்கத்தில் இருந்து வரும் நாணயங்கள் பின்வருமாறு :–

நாடு		நாணயம்
இந்தியா	–	ரூபாய்
அமெரிக்கா	–	டாலர்
ஆஸ்திரேலியா	–	டாலர்
ஏமன்	–	ரியால்
எத்தியோப்பியா	–	பிர்
அல்ஜீரியா	–	தினார்
அல்பேனியா	–	லெக்

நாடு		நாணயம்
அங்கோலா	–	க்வான்ஸா
அர்ஜென்டைனா	–	ஆஸ்ட்ரால்
ஆப்கானிஸ்தான்	–	ஆப்கானி
இந்தோனேஷியா	–	ரூபியா
இஸ்ரேல்	–	ஷேக்கல்
உகாண்டா	–	ஷில்லிங்
எகிப்து	–	பவுண்ட்

நாடு		நாணயம்
அய்ஸ்லாந்து	–	குரோனா
ஓமன்	–	ரியால்
கம்போடியா	–	ரியால்
கனடா	–	டாலர்
கியூபார்	–	பெஸோ
கத்தார்	–	ரியால்
லூம்பியா	–	டாலசிஸ்
கிரீஸ்	–	டிராக்மா
இங்கிலாந்து	–	பவுண்ட்
கினியா	–	பிராங்க்
கியானா	–	டாலர்
குவைத்	–	தினார்
கென்யா	–	ஷில்லிங்
வடகொரியா	–	வொன்
கொலம்பியா	–	பெஸோ
சிங்கப்பூர்	–	டாலர்
பாகிஸ்தான்	–	ரூபாய்
பரூண்டி	–	பிராங்க்
பஹ்ரெய்ன்	–	தினார்
சிரியா	–	பவுண்ட்
சிலி	–	பெஸோ
சீனா	–	யுவான்

நாடு		நாணயம்
சூடான்	–	பவுண்ட்
சைப்ரஸ்	–	பவுண்ட்
ரஷ்யா	–	ரூபிள்
சோமாலியா	–	சோமலி ஷில்லாங்
சௌதி அரேபியா	–	ரியால்
தய்வான்	–	புதுதய்வான் டாலர்
தாய்லாந்து	–	பாட்
தான்சானியா	–	ஷில்லிங்
துருக்கி	–	லிரா
தென் ஆப்பிரிக்கா	–	ராண்ட்
பங்களாதேஷ்	–	தாகா
மியான்மர்	–	கையட்
பனாமா	–	பால்போவா
பாமாஸ்	–	டாலர்
பிரான்சு	–	பிராங்க்
பிரேஸில்	–	குருஸாடோ
பிலிப்பைன்ஸ்	–	பெஸோ
பின்லாந்து	–	மார்க்கா
பெல்ஜியம்	–	பிராங்க்
பொலிவியா	–	பெஸோ
மலேஷியா	–	ரிங்கிட்
மடகாஷ்கர்	–	பிராங்க்

நாடு		நாணயம்
மாலத்தீவுகள்	–	ரூப்பியா
மால்ட்டா	–	லிரா
மெக்ஸிகோ	–	பெஸோ
மொராக்கோ	–	திர்ஹறம்
ஹோன்டுராஸ்	–	லெம்பீரா
ஹெயித்தி	–	கௌர்டி
லெபனான்	–	பவுண்ட்
லைபீரியா	–	டாலர்

நாடு		நாணயம்
சுவிட்சர்லாந்து	–	பிராங்க்
ஸ்பெயின்	–	பெஸெட்டா
ஸ்வீடன்	–	குரோனா
சிம்பாப்வே	–	டாலர்
ஹங்கேரி	–	ஃபோரின்
லிபியா	–	தினார்
லாவோஸ்	–	கிப்
லக்ஸம்பர்க்	–	பிராங்க்

ஜெர்மனி	–	டஷ்ச்மார்க்
ஜப்பான்	–	யென்
ஜமைக்கா	–	டாலர்
ஜோர்டான்	–	தினார்
இலங்கை	–	ரூபாய்

யுகோஸ்லேவியா	–	தினார்
வர்ஜின்தீவுகள்	–	யூ.எஸ்.டாலர்
டென்மார்க்	–	க்ரோன்
துனிஷியா	–	தினார்
ருவாண்டா	–	பிராங்க்
ருமேனியா	–	லயூவ்
நைஜீரியா	–	நெயிரா
நைகர்	–	பிராங்க்
நேப்பாளம்	–	ரூபாய்
நெதர்லாண்ட்	–	கில்டர்
நியூசிலாந்து	–	டாலர்
நார்வே	–	க்ரோன்
மொரிஷியஸ்	–	ரூபாய்
மொஸாம்பிக்	–	மெட்டிக்கல்

★

உயிர் தொழில் நுட்ப வளர்ச்சி வேகம்

இரெ.குமரன்

அறிவியல் ஒரு புதிய உலகைப் படைக்கும் முயற்சியில் வெகுவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. அறிவியல் இயற்கையின் இருப்பையும் இயல்பையும் கூட மாற்றி அமைத்து விடும் போலிருக்கிறது. நீரும் நிலமும் வானமும் காற்றும் தீயும் அறிவியல் ஆய்வுப் பரப்பின் எல்லைகளாக, இலக்குகளாக அமைந்துள்ளன. அறிவியல் என்னும் ஆலமரம் பரந்து விரிந்துள்ளது. ஆனால், அதன் நிழல் அச்சம் தருகிறது. அறிவியல் வளர்ச்சியின் ஒரு பகுதியாக ஆபத்தும் வளர்ந்து வருகிறது. அறிவியலின் உண்மைகளையும் நன்மைகளையும் விஞ்ஞானிகள் அடிக்கடி மறு பரிசீலனை செய்ய நேரிடுகிறது. இன்றும்கூட இயற்கையும் இயற்கையின் அதி உன்னத பொருளாகிய மனிதனும் விஞ்ஞானிகளிடம் வினாவும் விளக்கமும் கேட்டவண்ணம் இருப்பதை அறியலாம். அறிவியலின் ஆதிக்கம் அளவிடற் கரியது என்றாலும் அது தடுமாறுகிறது.

அறிவியல் முன்னேற்றத்திற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் இடையிலான பிணைப்பு வலுவிழுந்து வருகிறது.

அழிக்கப்பட்டு விட்டதாகக் கருதிய பல ஆட்கொல்லி நோய்கள் இன்று மீண்டும் தலை தூக்குகின்றன. எய்ட்ஸ், அறிவியலுக்கு அறை கூவல் விடுத்து வருகிறது.

அறிவியலின் எதிர் விளைவுகளும் பின் விளைவுகளும் மனித சமுதாயத்தை அச்சுறுத்தி வருகின்றன. உலகளாவிய நிலையில் வேகமாக வளர்ந்து வரும் உயிர் தொழில்நுட்ப முன்னேற்றங்களினால் மனித சமுதாயத்தின் நிலை என்னவாகும்? கேள்விக்குறியாக இருக்கிறது.

உயிர் தொழில் நுட்பவியல்

"அறிவியல் மற்றும் பொறியியல் கொள்கைகளைப் பயன்படுத்தி மனித

> "உயிர் தொழில் நுட்பத்தின் வேகமான வளர்ச்சியை 'ஓர் அறிவியல் புரட்சி' என்றே சொல்லலாம். உயிர் தொழில் நுட்பத்தின் இன்றைய வளர்ச்சி மனித சமுதாயத்திற்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. மலிவான மூலப் பொருட்களிலிருந்து அதிக மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்வது உயிர் தொழில் நுட்பத்தின் நோக்கமாகும்."

"மரபணு மாற்ற முறையில் தோற்றுவிக்கப்படும் நோயற்ற மனிதனும் உருவாக்கப்பட்ட மனிதனும் உலா வரும் நாள் வெகு தொலைவில் இல்லை. எதிர்காலத்தில் கருவின் உருவைத் திரையில் பார்த்து அதிலுள்ள குறைபாடுகளைத் தெரிந்து கொள்ளலாம், நோய்கள் வராதபடி கருவிலேயே திருத்தங்கள் செய்யலாம் அல்லது உடலியல் பண்புகளை உயர்த்தலாம். மேலும் அறிவாற்றல், நினைவாற்றல் ஆகியவற்றைக் கூட மேம்படுத்தலாம். "

சமுதாயத்திற்குத் தேவையான பொருட்களை உயிர்கள் மூலமாக உற்பத்தி செய்து நன்மை விளைவிப்பதே உயிர் தொழில் நுட்பவியலாகும்''.

உயிர் தொழில் நுட்பத்தின் வேகமான வளர்ச்சியை 'ஓர் அறிவியல் புரட்சி' என்றே சொல்லலாம். உயிர் தொழில் நுட்பத்தின் இன்றைய வளர்ச்சி மனித சமுதாயத்திற்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. மலிவான மூலப் பொருட்களிலிருந்து அதிக மதிப்புடைய பொருட்களை உற்பத்தி செய்வது உயிர் தொழில் நுட்பத்தின் நோக்கமாகும்.

"உயிர் தொழில் நுட்பம் பொருள்களையும் தாவரங்களையும் விலங்குகளையும் உருவாக்கு வதற்கு அல்லது மாற்றமைவு செய்வதற்கு அல்லது நொதித்தல் கழிவுப் பொருள் பக்குவப்படுத்துதல் போன்ற குறிப்பிட்ட பயன்பாடுகளுக்கு நுண்ணுயிர்களை உருவாக்குவதற்கு உயிருள்ள உயிர்களை அல்லது அந்த உயிர்களின் பொருள்களைப் பயன்படுத்தும் உத்தி''.

உயிர் தொழில் நுட்ப வளர்ச்சி

உயிர் தொழில் நுட்ப உத்தி மிகவும் தொன்மை வாய்ந்தது. கிறித்து பிறப்பதற்கு முன்பே 'ஈஸ்ட்'–ஐப் பயன்படுத்தி மது தயாரித்தனர். இன்று இதன் படிப்படியான வளர்ச்சியின் மூலம் உயிரினங்களின் அடிப்படை அலகான ஜீன்கள் செயல்படும் முறையை அறிந்து அவற்றை உயிரினங்களிடையே மாற்றி மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் ஒரு புதிய பரிணாமத்தை வழங்க முற்படுகிறது.

உயிர் தொழில் நுட்பம், மருத்துவம், மருந்தாக்கம், விலங்கு நலவாழ்வு (எம்ப்ரியோ டிரான்ஸ்ஃபர் தொழில் நுட்பம்) உணவுத் தொழிற்சாலை, வேளாண்மை, வேதிப்பொருட்கள், எரிசக்தி போன்ற துறைகளில் சிறந்து விளங்குகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மாசுக்கட்டுப்பாடு ஆகியவற்றிலும் இத்தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

நோக்கம்

உயிர் தொழில் நுட்ப வளர்ச்சியில் மனித இன மேம்பாடும் உணவு உற்பத்தியும் புதிய தொழில் நுட்பத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மரபணு மாற்றம்

மனித மரபியல் உயிர்மத்தின் வரைபடத்திற்கு விஞ்ஞானிகள் இறுதி வடிவம் கொடுத்து வருகிறார்கள். மரபணுக்களின் தன்மைகள், செயற்பாட்டுத் திறன்கள், பெருகும் முறைகள் ஆகியன குறித்த ஆய்வு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.

மரபணு மாற்ற முறையில் தோற்றுவிக்கப்படும் நோயற்ற மனிதனும் உருவாக்கப்பட்ட மனிதனும் உலா வரும் நாள் வெகு தொலைவில் இல்லை. எதிர்காலத்தில் கருவின் உருவைத் திரையில் பார்த்து அதிலுள்ள குறைபாடுகளைத் தெரிந்து கொள்ளலாம்,

ஃபிரான்சிஸ் கால்ட்டோன் (1822–1911)

ஜோ–ஹின்–டியோ

நோய்கள் வராதபடி கருவிலேயே திருத்தங்கள் செய்யலாம் அல்லது உடலியல் பண்புகளை உயர்த்தலாம். மேலும் அறிவாற்றல், நினைவாற்றல் ஆகியவற்றைக் கூட மேம்படுத்தலாம்.

இனத்தை மேம்படுத்தி வளப்படுத்தும் இந்த ஆய்வு முறையைத் தொடங்கி வைத்தவர் பிரிட்டிஷ் விஞ்ஞானி ஃபிரான்சிஸ் கால்ட்டோன் (1822–1911) (யூ (நல்ல) ஜினோஸ்–பிறப்பு, இனம்). இத்துறை மனித இனத்தை மேம்படுத்துவதைக் குறிக்கும்.

மரபணு ஆய்வில் இந்தோனிசியா அறிவியலறிஞர் ஜோ–ஹின்–டியோ மற்றும் 1968–இல் அமெரிக்காவில் மனித மரபணுவை இணைப்பாக்கம் செய்த இந்தியர் ஹர்கோவிந்த கொரானா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

டி.என்.ஏ.யின் ஒரு பகுதியாகிய மரபணு தனியாகவோ மற்றவற்றுடன் இணைந்தோ இருக்கும். ஒரு மரபணு குறிப்பிட்ட ஒரு பண்பிற்குக் குறியீடு அளிக்கிறது. இப்பண்பு ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகிறது. ஓர் உயிரிலிருந்து மரபணுக்களைப் பிரித்தெடுத்து இன்னொரு உயிரினுள் புகுத்தப் பயன்படும் தொழில் நுட்பம் (மரபணுப் பொறியியல்) இன்று வளர்ந்துள்ளது. இத்தொழில் நுட்பத்தால் மரபணுக்களை மாற்றியமைத்துப் புதிய பண்புகளை உருவாக்க முடியும். இதனால் புதிய உயிரினங்கள் உருவாக்கப் படுகின்றன.

ஸ்காட்லாந்திலுள்ள ரோசலின் நிறுவனத்தில் 1996–இல் படியாக்கம் செய்யப்பட்ட 'டோலி' ஆட்டுக்குட்டி பிறந்தது. இந்தத் தொழில் நுட்பம் மனிதனைப் படியாக்கம் செய்வதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது. ஓர் ஆளை மரபணு முறையில் படியாக்கம் செய்தால் அந்த ஆளின் உடலியல், உளவியல் பண்புகளை உயர்த்தவோ மாற்றவோ முடியும்.

இந்தத் தொழில் நுட்பத்தில் பிரிட்டன் முன்னோடியாக விளங்குகிறது. படியாக்கம் வாயிலாகக் கருமுளைகளை உருவாக்கிப் பல தீவிர நோய்களைக் குணப்படுத்த முடியும். மனிதக் கருமுளையில் படியாக்கம் செய்வதற்கு முதன் முதலாக அனுமதி அளித்த நாடு பிரிட்டன்தான். மனிதப் படியாக்கத்தை 1990இல் இயற்றப்பட மனிதக் கருவூட்டல் மற்றும் கருமுளையியல் சட்டம் ஏற்கெனவே தடை செய்யப்பட்டுள்ளது என்று பிரிட்டன் கூறுகிறது. எனினும் அந்தச் சட்டம் 14 நாட்கள் வரை முதிர்ந்த மனிதக் கருமுளைகள் மீதான ஆய்வை அனுமதிக்கிறது. மலட்டுத் தன்மையை நீக்கவும், பிறவிக் கோளாறுகளைக் கண்டறியவும், உறுப்பு மாற்றங்கள் செய்யவும் நீரிழிவு போன்ற பல நோய்களுக்கு மருத்துவம் செய்யவும் அந்தச் சட்டம் அனுமதிக்கிறது. மரபணுப் பொறியியல் மூலம் குறையுடைய மரபணுவைக் கண்டறிந்து அவற்றில் நல்ல மரபணுக்களைச் செலுத்தி மரபணு நோய்களைத் தீர்க்க முயற்சி நடக்கிறது.

“இயற்கையின் அருமையை மனிதன் உணர்ந்து கொண்டான். அளவுக்கு மீறி இயற்கை வதைக்கப்படுவதால் மனித சமுதாயம் சீரழிந்து வருகிறது. காடழித்தல், சுரங்கம் தோண்டுதல், மிருகங்களைக் கொல்லுதல் போன்றவற்றால் பல நச்சுக் கிருமிகள் வெளியேறி மனித சமுதாயத்தை அச்சுறுத்துகின்றன. ”

அறிவியல் அச்சம்

அறிவியல் கண்டுபிடிப்புகள் மீது மனிதனுக்கு அச்சம் தோன்றியுள்ளது. அறிவியல் நன்மை தருவது போலத் தோன்றித் தீமையை நிரந்தரமாக்கி விடுகிறதோ என்ற அய்யம் இயல்பாக எழுகிறது. இந்த அய்யம் உயிர் தொழில் நுட்பத்தையும் விட்டு வைக்கவில்லை. அறிவியலுக்கும் அறவியலுக்கும் இடையே ஒரு மாபெரும் போராட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

மனிதப் படியாக்கம் மனிதனின் தனித் தன்மையைச் சீர்குலைப்பதாகும் என்று எண்ணுகின்றனர். எதிர்கால மனிதனின் அடிப்படைப் பண்பியல்புகளை முன்னரே வரையறுப்பது அவனது மரபணுப் பாரம்பரியத்தைப் பாதிக்கிறது. மேலும், “மனித மரபணுக்குழுமத்தைத் ‘தூய்மையாக்க’ முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு தலைமுறையிலும் புதிய மரபணு முரண்பாடுகள் உருவாகின்றன. மரபணுப் பொறியியல் என்பது ஓர் உள்ளார்ந்த ஆபத்தான முயற்சி. ஏனென்றால் எதிர்காலத்தில் நமது சந்ததியினருக்கு எந்த மரபணுக்கள் தேவைப்படும் என்பதை ஊகித்தறிய இயலாது” என்கின்றனர். மரபணு முறையில் மாற்றமைவு செய்ய நுண்ணுயிர் எதிர்வினை இன்னும் அறியப்படவில்லை. சுற்றுச்சூழல் மீது அவற்றின் பாதிப்பு எத்தகையதாக இருக்கும் என்றும் தெரியவில்லை.

மனிதப் படியாக்கத்தின் அறவியல் அச்சுறுத்தல் சமூக உறவுகளையும் குடும்ப உறவுகளையும் பாதிக்கும் என்று அஞ்சப்படுகிறது. தாவரங்களில் நோய் எதிர்ப்பு மரபணுக்களைப் புகுத்துவது கவலையளிக்கிறது என்கிறது கிரீன்பீஸ் இயக்கம்.

இத்தொழில் நுட்பத்தில் மேலோங்கி நிற்கும் வணிக நோக்கம் மனித சமுதாயத்தின் அறிவியல் அச்சத்தை வலுப்படுத்துகிறது.

‘டோலி’ படியாக்கம் தோன்றியவுடன் ஜெரோன் என்ற அமெரிக்க நிறுவனம் படியாக்கத் தொழில் நுட்ப உரிமையையும் அதனைக் கொண்டு உற்பத்தி செய்வதற்கான உரிமையையும் விலைக்கு வாங்கிவிட்டது. மரபணு மாற்று முறையில் நோய் குணப்படுத்தலும் உறுப்புகள் உற்பத்தியும் வணிகமயமாகி விடும். அறிவியலின் வணிக நோக்கு மனித சமுதாயத்திற்குத் தீங்காகத்தான் முடியும்.

‘தகுதியற்றவர்கள்’ பிறப்புக்கு எதிராகக் கட்டாயக் கருத்தடை செய்ததைப்போல, ஸ்கேன் சிசுக் கொலைக்குக் காரணமானதுபோல உயிர்தொழில் நுட்பம் அமைந்துவிடக் கூடாது.

கணினி அறிவியலுக்கு ‘வைரஸ்’ இணையத்திற்கு ‘இருண்ட பக்கங்கள்’, புதிய மருத்துவமுறையில் ‘பக்க விளைவுகள்’, பசுமைப் புரட்சியில் ‘இயற்கைச் சீரழிவு’, உயிர் தொழில் நுட்பத்தில் ‘ஆந்த்ராக்ஸ்’ என அறிவியல் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டே இருக்கிறது.

இயற்கையைத் தேடி

பசுமைப் புரட்சியின் கோரப்பிடியில் மனிதனும், மண்ணும் சிக்கி மடிந்தன. நிலமும் நீரும் வளமிழந்தன. பசியைப் போக்கப் பசுமைப்புரட்சி செய்தவர்கள் பட்டினியால் மடிந்தனர். இதன் விளைவுதான் இன்று புதுச்சேரியில் உருவாகியிருக்கும் ‘உயிரின மண்டலப் பண்ணை முறை; உயிரியல் இடுபொருட்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்யப்படுகிறது.

உலகில் 300 கோடி மக்களின் உணவுப்பொருள் அரிசி. உணவு உற்பத்தி பெருகியிருந்தபோதும் 80 கோடி மக்களுக்கு உணவில்லை. இன்னும் 50 ஆண்டுகளின் மேலும் 300 கோடி மக்களுக்கு உணவு உற்பத்தி செய்தாக வேண்டும். இந்தச் சாதனையை மரபணு மாற்றுத் தொழில் நுட்பத்தால் நிகழ்த்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"மரபணு முறையில் மாற்றமைவு செய்த பயிர்கள் பேரளவு தொழில் முறை வேளாண்மைக்கு மட்டுமே சாதகமானவை. சிறிய உழவர்களுக்கும் தெற்கு நாடுகளுக்கும் பாதகம் விளைவிப்பவை" என்று வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர். அமெரிக்கா மட்டும் உலகில் 70% மரபணு மாற்றுப் பயிர்களை உருவாக்குகிறது. மரபணு மாற்றமைவும் பயிர்கள் மான்சாண்டோ நிறுவனத்தின் வணிகப் பொருளாகிவிட்டது.

மேற்கு ஆப்பிரிக்க ஆய்வாளர்கள் மரபியல் மாற்றம் ஏதும் செய்யாமல் 'நெரிகா' என்னும் புதுவகை அரிசியைக் கண்டுபிடித்துள்ளனர். இது கடுமையான சூழலுக்கு ஏற்றது; பூச்சி எதிர்ப்பாற்றல் கொண்டது. செயற்கை உரம் தேவையில்லை; குறைந்த அளவு நீர் போதும்; அதிக விளைச்சல் கிடைக்கும்.

இயற்கையின் அருமையை மனிதன் உணர்ந்து கொண்டான். அளவுக்கு மீறி இயற்கை வதைக்கப்படுவதால் மனித சமுதாயம் சீரழிந்து வருகிறது. காடழித்தல், சுரங்கம் தோண்டுதல், மிருகங்களைக் கொல்லுதல் போன்றவற்றால் பல நச்சுக் கிருமிகள் வெளியேறி மனித சமுதாயத்தை அச்சுறுத்துகின்றன.

'மேற்பரப்பு மண்ணின் ஒரு கிராமில் 10 கோடி முதல் 100 கோடி வரை பாக்டீரியாக்களும் 1,000 முதல் 10,000 வரை பல்வேறு உயிரினங்களும் அடங்கியுள்ளன'. இவற்றில் 10% மட்டுமே விஞ்ஞானிகளால் ஆராயப்பட்டுள்ளன. ஒரு நுண்ணுயிரி, எந்தெந்த வழிகளில் எந்தெந்தச் சூழ்நிலைகளில் வெற்றிகரமாகத் தரைக்குள் புகுந்து அங்கே தங்கியிருந்து பணியினைச் செய்கிறது என்பதற்குப் போதிய தகவல்கள் இல்லை. இதனால் நோய்களைக் கண்டறிவதிலேயே சிக்கல் எழுந்து விடுகிறது. தடுக்க முற்படுமுன் பல உயிர்கள் பலியாகி விடுகின்றன.

1485–இல் இங்கிலாந்தில் 20,000 பேரைப் பலிகொண்ட நோய்க்கு வியர்வை நோய் என்று பெயர்.

1950–களில் அர்ஜண்டைனா பாம்பாஸ் பகுதியில் ஜீனின் நச்சுக்கிருமி தோன்றியது.

1967–இல் கண்டுபிடிக்கப்பட்ட பைலோ வைரஸ் (மார்பர்க்); இன்று வரை மருந்தில்லை.

1990–இல் எய்ட்ஸ் எச்.ஐ.வி. 1 வைரஸ் ஆப்பிரிக்க மனிதக் குரங்குகள் மூலம், 120 இலட்சம் மக்களைப் பலிகொண்டுள்ளது.

1994–இல் இந்தியாவில் 'பிளேக்' நோய் பரவியது.

2001–இல் டெங்கு காய்ச்சல் பரவியது. பலர் பலியாயினர்.

இந்த நச்சுக் கிருமிகளின் கோரத் தாண்டவத்தில் மதிப்புமிக்க மனித உயிர்கள் மடிந்து போகின்றன. இந்த இழப்பு இயற்கையைச் சீண்டியதன் விளைவு.

விண்ணும் மண்ணும் மனிதனும் மரமும் செடியும் கொடியும் விலங்கும் பறவையும் காற்றும் கடலும் யாவும் இயற்கையே. இயற்கை மனித சமுதாயத்தை நலமுடனும் வளமுடனும் வாழ வைக்கும் ஆற்றல் உடையது. மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ முற்பட வேண்டும். இயற்கையின் இருப்பையும் இயல்பையும் பாதுகாப்பது மனித சமுதாயத்தின் கடமை. மக்கட்தொகைக் கட்டுப்பாடும் மாசுக் கட்டுப்பாடும் இன்றியமையாதவை. அறிவியல் வாழ்க்கை முறை இயற்கையை நோக்கி இட்டுச் செல்வதை மனித சமுதாயம் உணரத் தொடங்கி யுள்ளது.

உயிர் தொழில் நுட்பத்தின் இன்றைய வளர்ச்சி நிலை மனித சமுதாயத்திற்குத் தேவையானது என்பது தெளிவாகத் தெரிகின்றது என்றாலும், எதிர்கால விளைவுகள் எத்தகைய சமுதாயத்தை உருவாக்கும் என்பதில் ஐயமும் கவலையும் மேலோங்கி நிற்கின்றன.

(நன்றி : உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்)

★ ★ ★

உடல்நலன் பேண சில ஆலோசனைகள்

1. கோடைகால வெப்பம் அதிகமாக இருப்பதால் ஏற்படும் உடல் பாதிப்புகள் எவை? அவற்றிலிருந்து எப்படி தப்பிப்பது?

பாதிப்புகள் : தலைவலி, உடல்வலி ஏற்படுதல், தலைசுற்றல், வலிப்பு மயங்கி விழுதல், மூர்ச்சையாகுதல், சில நேரங்களில் மரணம் கூட நிகழலாம்.

தடுப்பு முறை :

★ சூரிய ஒளியிலுள்ள புறஊதாக் கதிர்களின் தாக்கம் மதியம் 1 மணியளவில் மிக அதிகமாக இருப்பதால், நடுப்பகல் 12 மணி முதல் மதியம் 2 மணிவரையில் பாதுகாப்பில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்கலாம்.

★ சுத்தமான தண்ணீர், மோர், இளநீர், எலுமிச்சை, உப்பு கலந்த நீர் போதுமான அளவு அவ்வப்பொழுது குடிப்பது அவசியம்.

★ பருத்தி ஆடை அணிவது, தலையில் வெப்பத்தாக்கம் ஏற்படாதவாறு குடை மற்றும் பருத்தியிலுள்ள "தலைக்கவசம்" சூழ்நிலைக்கேற்றவாறு அமைத்துக் கொள்ளலாம்.

2. பாதுகாப்பற்ற குடிநீர் மூலம் பரவும் நோய்கள் என்ன? நோய் வராமல் தடுப்பது எப்படி?

பாதிப்புகள்: பாதுகாப்பற்ற குடிநீரை குடிப்பதால் மஞ்சள்காமாலை, டைபாய்டு, வயிற்றுப்போக்கு, காலரா, எலிக்காய்ச்சல் போன்ற வியாதிகள் வரலாம்.

தடுப்புமுறை:

★ நன்றாக கொதிக்க வைத்து ஆறிய தண்ணீர் பாதுகாப்பானது.

★ குளோரின் கலந்த தண்ணீர் பாதுகாப்பானது.

★ சுத்திகரிக்கப்பட்டு விற்கப்படும் தண்ணீர் பாதுகாப்பானது.

3. பால் மூலம் பரவும் வியாதிகள் என்ன? தடுப்பது எப்படி?

பாதிப்புகள்: டைபாய்டு, காசநோய், சீதபேதி, ஆன்ந்த்ராக்ஸ் போன்ற வியாதிகள் வரலாம்.

தடுக்கும் முறை:

★ நன்கு கொதிக்க வைத்த பால் மற்றும் கிருமிநீக்கம் செய்யப்பட்ட பால் ஏற்றது.

★ பசும்பால் தவிர்க்கவும்.

4. இறைச்சி மூலம் பரவும் வியாதிகள் என்ன? எவ்வாறு தடுக்கலாம்?

பாதிப்புகள்: "நாடாப்புழு" போன்ற ஒட்டுண்ணிகளால் ஏற்படும் பல நோய்கள் வர வாய்ப்புள்ளது.

தடுப்பு முறை

★ மாட்டிறைச்சி, பன்றிறைச்சி இவைகளை நன்றாக வேகவைத்து உண்ண வேண்டும்.

★ அரை வேக்காட்டினை தவிர்த்தல் வேண்டும்.

5. காய்கறிகள், கீரைகள், பழங்கள் மூலம் நோய் பரவ வாய்ப்புள்ளதா?

ஆம், வாய்ப்புள்ளது. காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்களில் நோய்வராமல் தடுக்கக்கூடிய பல நுண் சத்துக்கள் நிறைய உள்ளன. இருப்பினும் அவைகள் விளையும் நிலம், நுகர்வோருக்கு வந்தடையும் விதம் போன்றவற்றால் இவைகள் அசுத்தமாக வழியிருப்பதால், காய்கறிகள், கீரைகளை சமைப்பதற்கு முன் சுத்தமான தண்ணீரில் நன்றாக கழுவிய பின் பயன்படுத்த வேண்டும். தோல் நீக்காமல் உட்கொள்ளக்கூடிய பழங்களை சுத்தமான தண்ணீரில் கழுவிய பின்னரே உட்கொள்ள வேண்டும்.

6. குழந்தைகளுக்கு தடுப்பூசி மற்றும் சொட்டுமருந்து வழங்குவதன் மூலம் எந்தெந்த வியாதிகளை தடுக்கலாம் ?

தடுப்பூசி மூலம் பல வியாதிகளைத் தடுக்கலாம். தீவிரத்தாக்குதல் வராமல் குழந்தைகளைக் காக்கலாம். போலியோ சொட்டுமருந்து வழங்குவதன் மூலம் "இளம்பிள்ளை வாதம்" வராமல் தடுக்கலாம். தடுப்பூசி மூலம் காசநோய், டிப்தீரியா, கக்குவான், தட்டம்மை, டெட்டனஸ், B-மஞ்சள் காமாலை, மூளைக்காய்ச்சல் போன்ற கொடிய நோய்களிலிருந்து பாதுகாக்கலாம்.

7. கொசுக்கடியினால் பரவும் டெங்கு காய்ச்சல் மற்றும் சிக்குன்குன்யா போன்ற நோய்கள் பரவாமல் தடுக்க மக்கள் செய்ய வேண்டியது யாது ?

சுற்றுப்புறச் சுகாதாரம் மேம்படும் வகையில் நம் வீடுகளைச் சுற்றி நீர் நிரம்பக்கூடிய வகையில், ஆங்காங்குள்ள தேங்காய் ஓடு, உடைந்த மண்பாண்டங்கள், வாளி, பிளாஸ்டிக் வாளி, ரப்பர் டியூப், பாலிதீன் உறை, காபி, டீ குடித்துப் போடப்பட்ட பிளாஸ்டிக், பேப்பர் கப் இவைகளை ஒட்டு மொத்தமாக சேகரித்து அப்புறப்படுத்துவதன் மூலம், டெங்கு காய்ச்சல், சிக்குன் குனியா போன்ற நோய்களை பரப்பும் கொசு உற்பத்தியைத் தடுப்பதன் மூலம் நோய் வராமலும், பரவாமலும் தடுக்கலாம். மேலும் பாத்திரங்கள், குடங்கள் மற்றும் சிறு தண்ணீர்த் தொட்டிகள் இவைகளில் 5 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீரை கீழே கொட்டி பாத்திரங்களை நன்கு தேய்த்து கழுவி வெயிலில் காயவைக்க வேண்டும். இதன் மூலம் நோய் பரவாமல் தடுக்கலாம்.

8. நாம் நம் கைகளை சோப்புப் போட்டு, நன்கு கழுவவேண்டியதன் அவசியம் என்ன ?

கழிப்பறையைப் பயன்படுத்திய பின்பும், உணவினை தயார் செய்வதற்கு மற்றும் உணவு பரிமாறுவதற்கு முன்பும், கைகளை சோப்புப் போட்டு நன்றாக கழுவ வேண்டும். இதன்மூலம், மஞ்சள் காமாலை, சீதபேதி, வயிற்றுப்போக்கு, டைபாய்டு போன்ற வியாதிகள் மற்றவர்களுக்கு பரவாமல் தடுக்கலாம்.

9. "மாரடைப்பு நோய்" வராமல் எப்படித் தடுக்கலாம் ?

- ★ புகைப் பழக்கத்தை உடனே நிறுத்தவும்.
- ★ கொழுப்பு நிறைந்த இறைச்சி வகை உணவு, பாஸ்ட்புட், தேங்காய் சட்னி, எண்ணெய், நெய் தவிர்க்கவும்.
- ★ காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை தேவைக்கேற்றவாறு சாப்பிடலாம்.
- ★ சர்க்கரை வியாதி மற்றும் இரத்தக் கொதிப்பு நோய்க்கு உரிய சிகிச்சையினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.
- ★ தினம் உடல் உழைப்பு, உடற்பயிற்சி, நடைப்பயிற்சி அவசியம்.
- ★ இரத்தத்தில் கொழுப்பின் அளவு அதிகரிக்காமல் கண்காணித்தல்.

10. "ருமாட்டிக் காய்ச்சல்" எப்படி ஏற்படுகிறது ? இதன் அறிகுறிகள் என்ன ? இதனால் ஏற்படும் விளைவினை தடுப்பது எப்படி ?

ருமாட்டிக் காய்ச்சல் ஒருவகை "பாக்டீரியா"க்களினால் (பீட்டா–ஹீமோலைடிக் ஸ்ட்ரெப்டோகாக்கய்) வருகிறது. காய்ச்சல், மூட்டுவலி, மூட்டுவீக்கம் இதன் அறிகுறிகளாகும். ருமாட்டிக் காய்ச்சல் தாக்குதலுக்குப்பின் இருதயம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. இதனால் இருதயநோய் ஏற்படுகிறது.

தடுக்கும் முறை:

- ★ காய்ச்சல், மூட்டுவலி, மூட்டுவீக்கம் என்பது பல்வேறு வியாதிகளின் அறிகுறிகள் என்பதால், முதலில் இது எந்த வியாதி என்பதை அறியும் பொருட்டு– மருத்துவரிடம் காண்பித்து பரிசோதனை மூலம் தெரிந்து கொண்டபின், தொடர் சிகிச்சைப் பெற வேண்டும்.
- ★ தொண்டைப்புண், பல்சொத்தை, டான்சிலைட்டிஸ் போன்ற தொந்தரவுகளுக்கு மருத்துவரிடம் காண்பித்து முறையான சிகிச்சையினைப் பெறவேண்டும்.
- ★ சுத்தமான குடிநீர் பருகவேண்டும். ★

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம்

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இஆப,
முதன்மைச் செயலர்/ஆணையர்,
தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு

தோற்றம்

இந்தியாவின் முதல் சர்வேயர் செனரல் ஆன ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த காலின் மெக்கன்சி (1754-1821), முனைவர் லேடன், இந்தியாவில் பிறந்த ஆங்கிலேயரான திரு சி.பி. பிரௌன் (1798-1884) ஆகியோர் தொகுத்து வைத்த ஓலை மற்றும் தாட் சுவடிகளே அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் தோற்றத்திற்குக் காரணமாகும். இவர்கள் தொகுத்த சுவடிகளில் இலக்கியம், வரலாறு, தத்துவம், அறிவியல், கைபீதுகள் எனப்படும் வட்டார வரலாறுகள், கல்வெட்டுகள் முதலிய பொருட்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, உருது, அரபு, பாரசீகம் முதலிய மொழிகளில் உள்ளன. இச்சுவடிகள் தற்போதைய ஆந்திர மாநிலம் மற்றும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வரலாறு மற்றும் பண்பாட்டுச் சிறப்புகளைக் கொண்டுள்ளன.

மெக்கன்சியின் தொகுப்பு

காலின் மெக்கன்சி என்பவர் கி.பி.1783-இல் இந்தியாவிற்கு வருகை தந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஒரு பொறியியல் பிரிவின் பணியாளராக அவர் இங்கு பணியாற்றினார். பழங்கணக்குகள், இந்திய வரலாறுகள், கீழ்த்திசை மொழிகள் ஆகியவற்றில் மிகுந்த ஆர்வம் உள்ளவராக இருந்தார். அவர் ஏராளமான சுவடிகள், வரை படங்கள், நாணயங்கள் ஆகியவற்றைச் சேகரித்தார். தமிழ்நாடு தொடர்பானது மட்டுமல்லாது சிலோன், சாவா ஆகிய பகுதிகள் தொடர்பாகவும் அவருடைய தொகுப்புகள் இருந்தன.

கி.பி. 1818-இல் காலின் மெக்கன்சி, சர்வேயர் செனரலாக பதவி உயர்வு பெற்றார். இவர் தமது தொகுப்புகளை கல்கத்தாவிற்குக் கொண்டு சென்றார். அங்கு மேலும் பல சுவடிகளை, தான் மறையும் வரை சேகரித்தார்.

இவருடைய மொத்தத் தொகுப்புகளையும் 10,000 பவுண்டுகளுக்கு கிழக்கிந்திய கம்பெனியார் விலைக்கு வாங்கினர். மெக்கன்சியின் தொகுப்பை மூன்று பகுதிகளாகப் பிரித்து, ஒரு பகுதியைச் சென்னைக்கும், இன்னொரு பகுதியைக் கல்கத்தாவிற்கும், மூன்றாவது பகுதியை இலண்டனிற்கும் அனுப்பினர்.

லேடனின் அத்தொகுப்பில், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிச் சுவடிகள் இருந்தன. அவற்றை சி.பி. பிரௌனின் முயற்சி காரணமாக கிழக்கிந்தியக் கம்பெனி, லேடனின் மறைவுக்குப் பிறகு, விலைக்கு வாங்கி இந்தியாவிற்குக் கொண்டு வந்தது.

லேடனின் தொகுப்பு

பேராசிரியர் லேடன் என்பவர் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த (1803-1811) மொழியியல் அறிஞர் ஆவார். இவருடைய

தொகுப்பு இலண்டனில் உள்ள இந்தியா அலுவலகத்திற்கு இருந்ததை சி.பி.பிரௌன் கி..பி.1837-இல் கண்ணுற்றார். லேடனின் அத்தொகுப்பில், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிச் சுவடிகள் இருந்தன. அவற்றை சி.பி. பிரௌனின் முயற்சி காரணமாக கிழக்கிந்தியக் கம்பெனி, லேடனின் மறைவுக்குப் பிறகு, விலைக்கு வாங்கி இந்தியாவிற்குக் கொண்டு வந்தது.

பிரௌனின் தொகுப்பு

சி.பி. பிரௌன் என்பவர் ஆந்திர மாநிலத்தில் மாவட்ட ஆட்சித்தலைவராகவும், சென்னைப் பல்கலைகழக கழக மன்றச் செயலாளராகவும் (1843), சென்னை கல்லூரி நூலகக் காப்பாட்சியராகவும் (1848) இருந்தார். இவர் தொகுத்த தெலுங்கு, தமிழ் மற்றும் வடமொழிச் சுவடிகளைக் கிழக்கிந்திய கம்பெனி விலைக்கு வாங்கி, 1855-இல் இந்தியாவிற்கு அளித்தது.

வளர்ச்சி

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் முழுக்கட்டமைப்பில் கி.பி.1869-இல் தொடங்கப்பட்டது. மெக்கன்சியின் தொகுப்பு, கிழக்கிந்தியக் கம்பெனியின் தொகுப்பு, பிரௌன் தொகுப்பு ஆகிய மூன்று தொகுப்புகளும் 1870-இல் சென்னை மாநிலக் கல்லூரியில் ஒரே தொகுப்பாக வைக்கப்பட்டது. அப்போது மாநிலக் கல்லூரியில் வடமொழிப் பேராசிரியராக இருந்த திரு. பிக்போர்டு என்பவர் அச்சுவடிகளுக்கு விரிவட்டவணை தயாரிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

இன்றியமையாத இலக்கிய வரலாற்றுச் சுவடிகளை அச்சிடுமாறும் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். 1876-இல் மேலும் பல புதிய சுவடிகளை சேரிக்குமாறும் படியெடுத்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதற்கிணங்கப் பல்வேறு சுவடிகள் காலந்தோறும் சேகரிக்கப்பட்டன.

இருப்பு

மேற்கண்டவாறு தோற்றம் கண்ட அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகமானது தற்போது மிகச் சிறந்த முறையில் வளர்ந்து, கீழ்வருமாறு மொத்தம் 72,314 சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

மொழி	ஓலை	தாள்	மொத்தம்
தமிழ்	10,783	5,775	16,558
வடமொழி	38,282	11,473	49,755
தெலுங்கு	806	1,426	2,232
கன்னடம்	182	72	254
மராத்தி	-	967	967
உருது	-	184	184
அரபு	-	407	407
பாரசீகம்	-	1,396	1,396

ஓரிய,பாலி, சிங்களம், பர்மியம்	127	-	127
வட்டார ஆவணங்கள்	-	434	434
மொத்த சுவடிகள்	**50,180**	**22,134**	**72,314**

மேற்படி சுவடிகள் அல்லாமல் தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிச் சுவடிகள் மொத்தம் 7,000; மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்ட போது, ஆந்திர, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தற்போது இந்நூலகத்திலுள்ள குறிப்புதவி நூற்கள் மொத்தம் 25,373 கீழ் வருமாறு அமைந்துள்ளன:-

தமிழ்	5,442
வடமொழி	7,320
தெலுங்கு	1,875
கன்னடம்	700
மராத்தி	137
மலையாளம்	444
அரபு	230
பாரசீகம்	265
உருது	705
ஆங்கிலம்	6,926
பிரெஞ்சு, செர்மனி மற்றும் ஐரோப்பிய மொழிகள்	194
இந்தி	130
விவர அட்டவணை	805
அகராதிகள்	182
வங்காளம்	18
மொத்தம்	**25,373**





செயல்பாடுகள்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தின் தலையாய பணிகள் கீழ்வருமாறு:-

1. சுவடி சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல்
2. சுவடிகளை வகைப்படுத்தலும் அட்டவணைப்படுத்தலும்
3. அரிய சுவடிப் பதிப்பும், அட்டவணைப் பதிப்பும்
4. பருவ இதழை ஆண்டுதோறும் வெளியிடுதல்
5. அச்சு நூற்கள் மற்றும் பருவ இதழ்கள் சேகரித்தல்
6. கல்வியாளர்களுக்குச் சுவடி விவரங்களை அளித்தல்

வெளியீடுகள்

இதுவரை பதிப்பிக்கப்படாத அரிய சுவடிகளை பதிப்பித்து வெளியிடும் பணியினை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (ம) ஆய்வு மையம் 1952-ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறது. அவ்வகையில் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் இதுவரை வெளி வந்துள்ள 458 வெளியீடுகள் கீழ்வருமாறு:-

மொழி	வெளியீடு களின் எண்ணிக்கை	அட்டவணை களின் எண்ணிக்கை	மொத்தம்
தமிழ்	98	35	133
வடமொழி	58	70	128
தெலுங்கு	36	24	60
கன்னடம்	21	8	29
மலையாளம்	28	6	34
மராத்தி	2	2	4
இசுலாமிய மொழிகள்	25	11	36
பருவ இ.தழ்	34	-	34
மொத்தம்	**268**	**156**	**458**

மேற்படி 458 நூற்களில் இலக்கியம், இலக்கணம், மருத்துவம் தொடர்பான நூல்கள் இடம் பெற்றுள்ளன.

உலகெங்குமுள்ள சுவடி ஆய்வாளர்கள் குறிப்பிட்ட சுவடி குறித்த விவரங்களை அறிய உதவுவது விவர அட்டவணை (Catalogue) ஆகும். எனவே இம்மையத்திலுள்ள பன்மொழிச் சுவடிகளுக்கு இதுவரை 156 விவர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு ஆய்வாளர்களுக்கு பலன் அளித்து வருகிறது. மீதியுள்ள சுவடி களுக்கு விவர அட்டவணை தயாரிக்கும் பணி இம்மையத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பருவ இதழ்

தமிழ், தெலுங்கு, வடமொழி, உருது ஆகிய மொழிகளில் பதிக்கப்பெறும் சில சுவடி நூற்களைத் தாங்கி பருவ இதழை வெளியிட்டு வருகிறது.

1948-ஆம் ஆண்டு இப்பருவ இதழின் முதற் தொகுதியின் முதற்பகுதி வெளியானது. 2008-ஆம் ஆண்டு தொகுதி எண் 35 வெளியிடப்பட்டுள்ளது. இப்பருவ இதழ்களின் வாயிலாக அருங்கலச் செப்பு, ஆத்திசூடி வெண்பா, ரிஷிவந்தக் குறவஞ்சி, இலக்கண தீபம், கட்டி மகிபன் பள்ளு, சித்திர மடல், பிரபந்த மரபியல் முதலிய சிறு சுவடிகள் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

அண்மைக்கால செயல்பாடுகள்

இம்மையத்திலுள்ள 49,755 வடமொழி சுவடிகள் அனைத்தும் புதுதில்லியிலுள்ள இந்திராகாந்தி தேசிய கலை மையத்தால் நுண்படச் சுருளில் (Microfilm) பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வடமொழிச் சுவடிகளை இம்மையத்திடம் முன் அனுமதி பெற்று இந்திராகாந்தி தேசிய கலை மையத்திடமிருந்து பிலிம் வடிவில் பெற வழி ஏற்பட்டுள்ளது.

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர் அவர்களின் சீரிய முயற்சி மற்றும் வழி காட்டுதலின்படி 2005 முதல் தொல்லியில் துறையின் நிழற்படக் கலைஞர் மூலம் தமிழ் சுவடிகளை டிஜிட்டல் கேமிரா வழி நுண்படம் (Digital) படுத்தும் பணி தொடங்கப்பட்டு இதுவரை 93,000 சுவடிப் பக்கங்கள் நுண்படம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசியச் சுவடி குழுமம் (National Mission for Manuscripts) வழி 1882 சித்த மருத்துவச் சுவடிகளும், செம்மொழி ஆய்வு மையம் மூலம் சங்க இலக்கியச் சுவடிகள் 6000 பக்கங்கள் நுண்படம் எடுக்கப்பட்டு இதன் குறுந்தகடுகள் (CD) பெறப்பட்டுள்ளது.

பாதுகாப்பு

நூலகத்தில் ஓலைச் சுவடிகள் மற்றும் தாட் சுவடிகள் தூசி அகற்றியும் இரசாயனப் பொருட்கள் இட்டும், குளிர்சாதனம் செய்யப்பட்டுள்ள பெரியதொரு அறையில் பாதுகாக்கப்படுகின்றன. இருப்பறையில் 1997-இல் குளிர்சாதன வசதி செய்யப்பட்டது.

சிதிலமான தாட்சுவடிகள் மற்றும் அச்சு நூற்கள் வழுக்குத்தாள் கொண்டு செப்பனிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஆய்வுப் பணிக்கு உதவி

சுவடிகள் மற்றும் அரிய அச்சு நூற்கள் கல்வியாளர் அனைவருக்கும் கட்டணம் எதுவுமின்றி நூலகத்தில் அமர்ந்து படிப்பதற்கு வழங்கப்படுகின்றன. ஆய்வு மாணவர்களுக்கும், அச்சிட்டு வெளியிடுவோர் களுக்கும் சுவடிகளைப் படியெடுத்துக் கொள்ளவும் ஒளியச்சுப்படி வழங்கவும் நிலைமைக்கு ஏற்றவாறு அனுமதி வழங்கப்படுகிறது. நூலகத்தின் ஒளியச்சுக்கருவி 1997-இல் வாங்கப்பட்டது. நூலகத்தின் வெளியீடுகள் அனைத்தும் 25 விழுக்காடு கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

இருப்பிடம்

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தின் முதல் மாடியில் அமைந்துள்ளது.

அரசு விடுமுறை நாட்கள் மற்றும் வெள்ளி, சனி ஆகிய வார விடுமுறை நாட்கள் தவிர்த்து, ஏனைய எல்லா நாட்களிலும் காலை 10-00 மணி முதல் மாலை 5-45 வரை இந்நூலகம் செயல்படுகிறது.

பழங்கலைப்பொருட் பதிவுப்பணி

இந்திய வரலாற்று வரைபடத்தில் மிகப்பெரிய இடத்தினைத் தமிழகம் பெற்றுள்ளது. அதற்கான காரணம் தமிழ்நாட்டிலுள்ள விலைமதிப்பற்ற கலைச்செல்வங்கள். இக்கலைச் செல்வங்கள் அனைத்தும் கோயில்களில் பெட்டகமாகப் போற்றப்பட்டு வந்துள்ளன. இருப்பினும் காலத்தின் மாற்றத்தாலும், கலைப்பொருளின் விலைமதிப்பாலும் அவை அழிக்கப்படுவதும் கடத்தப படுவதுமாக இருக்கும் நிலையினை மாற்ற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு "Antiquities and Art Treasures Act 1972" என்ற சட்டம் இயற்றப்பட்டு, 1973-இல் விதிகள் உருவாக்கப்பட்டது. 1974-ஆம் ஆண்டு இச்சட்டத்தின்கீழ் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை பதிவு செய்யும் பணியினை மேற்கொண்டது. இதற்கான நிதிஒதுக்கீடு மத்தியத் தொல்லியல் துறை வழங்குகிறது. இப்பணியாகத் தமிழகத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பழமையான கலைப்பொருட்களான செப்புத்திருமேனிகள், கற்சிற்பங்கள், தந்தப்பொருட்கள், ஓவியங்கள் மற்றும் உதிரியான கோயிற் கட்டட அங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்து வருகின்றது. பணியின் தொடக்கத்தில் சென்னை, தஞ்சாவூர், சிதம்பரம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் பதிவு அலுவலர் அலுவலகங்கள் இயங்கின. தற்போது சென்னை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் மட்டுமே பதிவு அலுவலர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இப்பழங்கலைப் பொருட்கள் பெரும்பான்மையும் கோயில்களில் செப்புத்திருமேனிகளாக இருப்பதால் தமிழகத்தின் கோயில்கள் அனைத்திலுமுள்ள செப்புத் திருமேனிகளையும், தனியார் வசமுள்ள கலைப்பொருட்களையும் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. கோயில்கள் மற்றும் தனியாரிடமிருந்து படிவம் 7-லான விண்ணப்பங்கள் உரிய கலைப்பொருள் 3 பிரதி நிழற்படங்களுடன் பெறப்படும். இவ்விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பெற்று 100 ஆண்டுகட்கு முற்பட்ட கலைப் பொருளாயின் படிவம் 8-இல் மூன்று சான்றிதழ்கள் தயாரிக்கப் பெற்று 1. உரிமையாளர் 2. மத்தியத் தொல்லியல் துறை 3. தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை பதிவு அலுவலர் அலுவலகம் என மூன்று வழங்கப்படும்.

இப்பணி செய்வதன் மூலம் 1. கலைப்பொருட்கள் களவு போனால் கண்டுபிடிக்க எளிதாக இருக்கும். 2. வெளிநாடுகளுக்குக் கடத்தப்படாமல் தவிர்க்கப்படும். எனவே இப்பணி மிகவும் இன்றியமையாத பணியாகும்.

இந்திய முழுவதும் செய்யப்படும் பதிவுப்பணியில் தமிழ்நாடுதான் முதலிடம் பெறுகிறது என்பதும் பெருமைக்குரிய செய்தியாகும். தமிழ்நாட்டில் இதுவரை 43,418 பழம்பொருட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,049 பழம்பொருட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் இப்பணி மிகச்சீரிய பணியும் முதன்மைப் பணியும் ஆகும் என்பதில் ஐயமில்லை.

* * *

வேலைவாய்ப்பளிக்கும் விஷுவல் கம்யூனிகேஷன் கல்வி

– மா.ஆண்டோபீட்டர்

ஊடகங்களின் (Media) மூலமாகப் பெறப்படும் எண்ணற்ற தகவல்களே ஒருவருக்கு ஓய்வையும், இன்பத்தையும் அளிக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன் ஓய்வையும், இன்பத்தையும், பொழுதுபோக்கையும் நம் இல்லத்தை விட்டுப் பிற இடத்திற்குச் சென்று தேடினாலேயே நமக்குக் கிடைக்கும் சூழல் இருந்தது. தற்போது ஹோம் தியேட்டர், சினிமா, டெலிவிஷன், இன்டர்நெட் ஆகிய ஊடகங்களின் மூலமாகப் பொழுதுபோக்குகளை நம் வீட்டிலேயே சுவைக்கலாம். நாம் விரும்பியதைப் பார்த்திட ஒவ்வொரு வீட்டிலும் குடும்பத்தினரிடையே போட்டா போட்டி நடைபெறுகிறது. ஒவ்வொரு படைப்பிலும் சிந்தனையும், அழகும் கொட்டிக் கிடப்பதாலேயே ஊடகத்துறைக்கு இன்று மவுசு கூடியுள்ளது. ஊடகத்துறையின் இவ்வளர்ச்சியால் எண்ணற்ற வேலைவாய்ப்புகளும், தொழில் வாய்ப்புகளும் பெருகியுள்ளன. படித்தவன், படிக்காதவன் என அனைவரும் உலக அளவில் நல்ல ஊதியத்துடன் வேலைவாய்ப்பைப் பெறுவது ஊடகத்துறையில்தான் என்று சொல்ல வேண்டும்.

ஊடகத் துறையில் இதழ்கள், செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா, இன்டர்நெட் ஆகியன முக்கியவையாகக் கருதப்படுகின்றன. இவற்றில் இதழ்களும் செய்தித்தாளும் அச்சு ஊடகமாகும். வானொலி, தொலைக்காட்சி, சினிமா ஆகியன மின்னணு ஊடகமாகும். இன்டர்நெட் கணினி ஊடகமாகும். பல்வேறு ஊடக நிறுவனங்கள் ஆயிரக்கணக்கில் உலகெங்கும் உதித்துள்ளன. இந்திய மொழிகளில் தமிழிலேயே அதிக அளவில் அச்சு, தொலைக்காட்சி மற்றும் இன்டர்நெட் ஊடகங்கள் பெருவாரியாக உள்ளன. பழைய தொழில்நுட்பமான அச்சு ஊடகமும், நவீனத் தொழில்நுட்பமான இன்டர்நெட் ஊடகமும் உலக அரங்கில் முன்னணியில் இருந்தாலும், தொலைக்காட்சி ஊடகத்திற்குப் பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது. தொலைக்காட்சி ஊடகத்தில் நல்ல வேலை பெறுவதை இளைய தலைமுறையின்

லட்சியமாகக் கருதுகிறார்கள். இன்றைய சிறார்கள் முதல் இல்லத்தரசிகள் வரை தொலைக்காட்சி ஊடகத்திற்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

கனவுகளும், ஆசைகளும்

இன்றைய இளைய தலைமுறை தொலைக்காட்சி ஊடகத்தில் பணியாற்றிடத் துடித்துக்கொண்டே இருக்கின்றனர், தொலைக்காட்சியில் செய்தியாளர் ஆக கிராபிக்ஸ் ஸ்பெஷலிஸ்ட் ஆக இயக்குநர் ஆக ஒளிப்பதிவாளர் ஆக தயாரிப்பாளர் ஆக துடித்துக்கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் ''விஷீவல் கம்யூனிகேஷன்'' கல்வியைப் படிக்க வேண்டும் என்ற ஆசை மிகப்பெரிய அளவில் உருவாகியுள்ளது.

ஒவ்வொருவர் மனதில் உதித்த கருவை, கதாப்பாத்திரத்தை. கதையை, படைப்பை, காட்சி வடிவில் படைக்க விஷுவல் கம்யூனிகேஷன் பாடங்களே அடிப்படையாகும். வண்ணமிகு காட்சி, குடும்பச் சித்திரம், காதல் டூயட், புரட்சிச் சிந்தனைகள், சமூக தாக்கங்கள், இயற்கை நீரோட்டங்கள், செய்திகள், திரைப்படங்கள், குறும்படங்கள், கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் என அனைத்து விசுவல் ஆக்கங்களை ஒலிஒளி ஆக்கத்தோடு படைத்திட விஷுவல் கம்யூனிகேஷன் பாடங்கள் அவசியம் தேவையாகும்.

நடிகர் சூர்யா, விஜய், ஜெயம்ரவி, நடிகை அபர்ணா ஆகியோர் விஷுவல் கம்யூனிகேஷன் படித்தவர்களே. சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், ஆபாவாணன், ஆர்.வி.உதயகுமார், மெட்டிஒலி திருமுருகன், திருச்செல்வன் ஆகியோர் மற்றும் பல தொலைக்காட்சி மற்றும் சினிமா பிரபலங்கள் தங்களுடைய கல்வியறிவால் சுலபமாகத் தங்கள் வாழ்வில் பெருவளர்ச்சி கண்டுள்ளனர். தமிழக அரசின் செய்தித்துறை நடத்தும் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் படித்தவர்கள் திரைப்படத்துறைக்கே சென்றுள்ளனர். விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பைக் கற்போர் பிரிண்ட் மீடியா, வீடியோ மீடியா, சாட்டிலைட் சேனல், சினிமா, கார்ட்டுன், அனிமேஷன், கேம்ஸ் தயாரிப்பு ஆகிய துறைகளில் வேலைவாய்ப்பைப் பெறமுடியும். கனவையும், கற்பனைத் திறனையும் கொட்டி இந்த ஓராண்டு விஷுவல் கம்யூனிகேஷன் பயிற்சியைக் கற்றாலே நாம் படைப்பாக்கத் துறையில் எதையும் வெல்ல முடியும்.

விஷுவல் கம்யூனிகேஷன் கல்வி

மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் கற்பனைத்திறனை அதிகரிக்க மல்டிமீடியா, ஜர்னலிஸம், போட்டோகிராபி, வீடியோகிராபி, பிராட்காஸ்ட் மீடியா மற்றும் வீடியோ புரொடக்ஷன் ஆகிய பயிற்சிகளைப் பல ஆண்டுகளாகச் சென்னை லயோலாக் கல்லூரி, சாஃப்ட்வியு விஷுவல் கம்யூனிகேஷன், ஏசியன் காலேஜ், வைஷ்ணவா காலேஜ், எஸ்ஆர்எம் பயிற்சி நிறுவனம் ஆகியன நடத்தி வருகின்றன. பத்திரிகை, தொலைக்காட்சி மற்றும் விளம்பரத்துறையில் வேலைவாய்ப்பை அளித்திடும் விஷுவல் கம்யூனிகேஷன் கோர்ஸ் சர்வதேசத் தரத்திற்கு இணையாக நடத்தப்படுகிறது. சாஃப்ட்வியு விஷுவல் கம்யூனிகேஷன் மையம் சிறந்த மீடியா பாடத்திட்டத்திற்காக ஐஎஸ்ஓ தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும்,

பல்வேறு மீடியாக்கள் இருந்தாலும் தொலைக்காட்சி விஷீவல்களாக மக்களைச் சென்றடையும் போது அனைவரின் மனதிலும் எளிதில் பதிந்து விடுகிறது. தமிழ் மீடியத்தில் இப்பயிற்சிகள் நடத்தப்படுவதால் தகவல்கள் கடைக்கோடியில் இருக்கும் கிராமப்புற மக்கள் வரை வெகுசுலபமாகச் சென்றடைய உதவுகிறது. ஆகவே இப்பயிற்சியினை கற்றுக் கொள்ளும் மாணவர்களின் எண்ணங்கள், சிந்தனைகளைச் சமுதாயத்திற்கு உலகத்திற்கு படம் பிடித்துக் காட்ட இப்பயிற்சி வகுப்பு அடித்தளம் அமைக்கிறது.

தரம் வாய்ந்த ஆசிரியர் குழு, பிரபல அறிஞர்கள், பத்திரிகையாளர்கள், வல்லுநர்கள் போன்ற அனுபவம் வாய்ந்த வழிகாட்டிகளின் துணையோடு மாணவர்களைத் தகவல் தொடர்பின் அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்வதுதான் இந்தப் பயிற்சியின் சிறப்பம்சமாகும். டிவி, ரேடியோ, இதழ்கள், இன்டர்நெட், பத்திரிகைகள் மற்றும் திரைப்படத்துறை என அனைத்து ஊடகங்களிலும் உள்நுழைந்து பணிபுரியும் ஒரு வாய்ப்பாக இந்த டிப்ளமோ கோர்ஸைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இக்கல்வியில் எழுத்துப்பயிற்சி, கலையாற்றல், மீடியா பயன்பாடுகள், போட்டோகிராபி, வீடியோகிராபி, ஆடியோ–வீடியோ எடிட்டிங், கிராபிக்ஸ், திரைப்படத் தயாரிப்பு ஆகிய அனைத்தும் நடத்தப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன், சிறந்த மாணவர்களுக்கு வேலைவாய்ப்பும் சுலபமாக கிடைக்கிறது. கம்ப்யூட்டரில் செய்முறைப்பயிற்சி செய்திட நவீன லேப்டாப் கம்ப்யூட்டரையும் மாணவர்கள் பயன்படுத்தி அறிவை வளர்க்கலாம்.

தொலைக்காட்சி நிறுவனத்தினர் விஷுவல் கம்யூனிகேஷன் படித்த மாணவர்களை ஏன் வேலைக்கு அமர்த்துகிறார்கள்?

- நல்ல கருத்தாக்கமுள்ள நிகழ்ச்சியைத் தயாரித்து அளிப்பார், மற்றும் தங்கள் தொலைக்காட்சிக்குப் புதிய சிந்தனையை அளிப்பார்கள் என்னும் எண்ணத்தில் வேலையில் அமர்த்துகிறார்கள்.

- விஷுவல் கம்யூனிகேஷன் படிக்கும் இளம் மாணவர்களின் கருத்துகள் மக்கள் மனதை மாற்றிடும் என்ற காரணத்திற்காக பணியில் அமர்த்துகிறார்கள்.

- செய்திப் பிரிவில் விஷுவல் கம்யூனிகேஷன் மாணவர்கள் இலட்சிய வெறியுடன் செயல்படுவதால் சமுதாய மாற்றங்களை வெகுவிரைவில் கொண்டுவருவர் என நம்புகின்றனர்.

- தொலைக்காட்சி சீரியல்கள் மற்றும் சிறுகதைகள் குடும்ப உறுப்பினர்களை கவருகின்றன. இந்நிகழ்ச்சியைத் தயாரிக்க அனுபவமும், படைப்பாக்கமும் உடைய இளம் சிந்தனையாளர்களையே தொலைக்காட்சி நிறுவனங்கள் நியமிக்கின்றன.

- தொலைக்காட்சி நிருவாகத்தில் அலுவலகப் பிரிவு, நிகழ்ச்சி தயாரிப்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகள் உள்ளன. இந்த நிருவாக பிரிவுகளுக்கான மேலாண்மையைச் செய்திட விஷுவல் கம்யூனிகேஷன் அறிவு மிகவும் தேவையாகும்.

❖ நல்ல கருத்துள்ள மற்றும் சுவையான நிகழ்ச்சிகளை உருவாக்கிட வெளிப்புறப் படப்பிடிப்பு அவசியமாகும். வெளிப்புறப் படப்பிடிப்புகள் தேர்வு, அதுகுறித்த தேவைகள் மற்றும் அதற்கான பட்ஜெட் ஆகியவற்றைத் தயாரிக்க விசுவல் கம்யூனிகேஷன் மாணவர்களின் கல்வி அறிவு அவசியமாதலால் அவர்களைப் பணியில் அமர்த்த வேண்டிய தேவை உள்ளது.

❖ ஆவணத் திரைப்படங்கள், குறும்படங்கள், கிராபிக்ஸ்கள் அனைத்துத் தொலைக்காட்சி சேனல்களுக்கும் பெருமை சேர்க்கின்றன. இப்பணிகளைப் புதிய சிந்தனையுடன் இயக்க விஷுவல் கம்யூனிகேஷன் மாணவர்களால் முடியுமெனத் தொலைக்காட்சியுலகம் நம்புகிறது.

இவ்வாறு இளம் ரத்தமும், துடிப்பும் தங்களுக்குத் தேவை எனச் சிந்திக்கும் ஒவ்வொரு தொலைக்காட்சி நிறுவனமும் விஷுவல் கம்யூனிகேஷன் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கிறார்கள்.

எங்கு வேலை கிடைக்கும்,
என்னென்ன வேலை கிடைக்கும் ?



திரைப்படத்துறை, தொலைக்காட்சித்துறை, வீடியோ கல்வி தயாரிப்பாளர்கள், ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ், கிராபிக்ஸ் டிசைனர், கார்ட்டூன் கம்பெனிகள், கம்ப்யூட்டர் கேம்ஸ் தயாரிப்பாளர்கள், விளம்பர மையங்கள் மற்றும் வீடியோ பயன்பாட்டுக் கூடங்களில் விஷுவல் கம்யூனிகேஷன் வேலைவாய்ப்புகள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. விஷுவல் கம்யூனிகேஷன் துறையில் 6,000 ரூபாய் முதல் 30,000 ரூபாய் வரை சாதாரணமாக ஊதியம் பெறுகிறார்கள். இரவு பகல் பாராது, எந்நேரமும் பணியாற்றும் தகுதியுள்ளோருக்குப் பணி வாய்ப்புகள் ஏராளமாகவுள்ளன. தொழில்வாய்ப்புகளும் பெரிய அளவில் இத்துறையில் உள்ளன. பிரபல ஆங்கிலத் திரைப்படங்கள் பெரும்பாலும் சென்னையிலேயே தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இயக்குநர் / புரோகிராம் புரோட்யூசர் : ஆவணத் திரைப்படங்கள், குறும்படங்கள், நிகழ்ச்சிகள், செய்திகள் மற்றும் பல்வகை விவாத நிகழ்ச்சிகளைத் தயாரிக்க இன்று பெரும்பாலான தொலைக்காட்சி நிறுவனங்களில் விஷுவல் கம்யூனிகேஷன் மாணவர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கிறார்கள். வீடியோகிராபி, கதைக்களம், கருத்துக்களம், படைப்பாக்கத் திறன், பட்ஜெட் ஆகியவற்றின் அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. தொலைக்காட்சி மற்றும் பிரிண்ட் மீடியாவில் தங்கள் திறமையை வளர்த்த பலர் இன்று தமிழ்த் திரையுலகில் பிரபல இயக்குநராகியுள்ளனர், என்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

வி.எஃப்.எக்ஸ் ஆர்ட்டிஸ்ட்: இப்பணியிலுள்ளவர்கள் வீடியோ தொகுப்பு, உருவ அமைப்பு மற்றும் கதை அமைப்பிற்கு ஏற்றபடி வீடியோ ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் (V.S.C) தயாரிக்க வேண்டும். இதற்கு கிராபிக்ஃஸ் அறிவோடு எஃபெக்ட்ஸ் அளிப்பதற்கான கலைஅறிவையும் பெற்றிருக்க வேண்டும். திரைப்படக்காட்சி, கதாபாத்திரம் மற்றும் கிராபிக்ஸ் எஃபெக்ட்ஸைப் பின்னிப் பிணைத்து தத்ரூபமாகச் செய்யும் சிந்தனையாற்றல் தேவையாகும். இதற்கு மாயா, கம்பஷன்,

பிரிமியர் மற்றும் ஃபயர் ஆகிய மென்பொருட்களில் நல்ல தேர்ச்சியும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். பன்னாட்டு சினிமா கம்பெனிகளில் வேலைவாய்ப்பைப் பெறலாம்.

சினிமாடோகிராபர் : அனைவரின் மனதிலும் நல்ல ஒளிப்பதிவாளராக வேண்டும் என்ற ஆசை பெரிய அளவில் உள்ளது. கேமிராவின் மூலமாக அழகையும், படைப்பையும் மெருகூட்டி எவரையும் நாம் கவர முடியும். போட்டோகிராபி, ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் மற்றும் வீடியோகிராபி துறையில் நாம் நம்மைப் பட்டைதீட்டி இத்துறையில் வாய்ப்பைப் பெறலாம். பாலுமகேந்திரா, அசோக்குமார், தங்கர்பச்சான் ஆகியோர் சினிமாடோகிராபி மூலமாகப் பிரபலமாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வீடியோ எடிட்டர்: வீடியோ கேமிராவில் சூட்டிங் செய்த பைல்களின் நீளத்தைக் கூட்ட மற்றும் குறைக்க, கிராஃபிக்ஸை வீடியோவில் சேர்க்க, எழுத்துகளை டைட்டிலிங் செய்ய, இசையைப் புகுத்த, முக்கியமாக வீடியோக்காட்சியை நேர்த்தியாக அடுக்க வீடியோ எடிட்டரின் பணி தேவையாகிறது. வீடியோ எடிட்டர் கதையின் அடித்தளத்தை ஆழமாக அறிந்து செயல்பட்டால் காட்சிகளைச் சிறப்பாகச் செய்யலாம். வீடியோ மற்றும் ஆடியோ துறையிலுள்ள மென்பொருட்களின் கட்டளைகளை நுட்பமாக அறிந்திருக்க வேண்டும்.

கேபிள் டி.வி ஆபரேட்டர்கள்: இன்று தமிழகத்தில் கிராமந்தோறும் வளர்ந்து வரும் வீடியோ துறை கேபிள் டி.வி வணிகமாகும். கேபிள் டி.வி தொழிலுக்கு வீடியோ எடிட்டிங் மற்றும் ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் செய்வதற்குப் பெரிய அளவில் பணியாட்கள் தேவைப்படுகிறார்கள். இத்துறையில் பிரகாசிக்க போட்டோஷாப், பிரிமீயர், கம்பஷன், 3டி ஸ்டியோ மேக்ஸ் ஆகிய மென்பொருட்களின் அறிவைப் பெற்றிருக்க வேண்டும். விவல் கம்யூனிகேஷன் டிப்ளோமா அறிவை நாம் பெற்றிருந்தால் சொந்தமாகத் தொலைக்காட்சி சீரியல்களைத் தயாரிக்கலாம்.

கார்ட்டூன் ஆர்ட்டிஸ்டுகள்: விஷுவல் கம்யூனிகேஷன் டிப்ளோமாவில் முழுமையாக அனிமேஷன் கற்றவர்கள் அயல்நாட்டு கார்ட்டூன் கம்பெனிகளில் வேலை பெறலாம். 3டி– தொகுப்புகளான 3டி மேக்ஸ், மாயா, போட்டோஷாப், கேரக்டர் ஸ்டுடியோ, பிளாஷ் ஆகியவற்றில் கூடுதல் திறன் இருத்தல் வேண்டும். கார்ட்டூன் உருவத்தின் பாவங்களையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தும் திறன் அவசியமாகும்,

விஷுவல் வடிவமைப்பாளர்: பொதுவாக, கூர்மையாக வரைதலில் ஆர்வம் கொண்டிருப்பவர்களுக்கு இப்பணி மிகவும் ஏற்றது. வடிவமைப்பில் இருக்கும் திறமை இப்பணிக்குக் கூடுதல் பலமாகும். விளம்பர நிறுவனங்களில், மென்பொருள் டிசைனிங், சி.டி டிசைனிங் கம்பெனிகளில் வேலை பெறலாம். இவை தவிர புரோகிராமிங் திறமை பெற்றிருந்தால், வடிவமைப்பின் போது ஸ்கிரிப்டிங் செய்ய உதவியாக இருக்கும். கம்ப்யூட்டர் வாயிலான விசுவல் டிசைனர்கள் நல்ல கலை இயக்குநர்களாகவும் மாறியுள்ளார்கள்.

கிராபிக்ஸ் / அனிமேஷன் புரோகிராமர்கள்: ஒரு பொறியியல்/தொழில்நுட்பப் பட்டம் தேவை. கம்ப்யூட்டரில் படித்தோர் சி, சி++, ஜாவா, டைரக்ட் எக்ஸ் ஓப்பன் ஜிஎல், டைரக்டர், ஃபிளாஷ், அக்ஷன் ஸ்கிரிப்ட் ஆகியவற்றைத் தெரிந்திருக்க வேண்டும். இவர்களுக்கு மொபைல் போன்களில் பயன்படுத்தும் அனிமேஷன் துறைகளிலும் வாய்ப்புகள் பெருகியுள்ளன.

கம்ப்யூட்டர் கேம்ஸ் வடிவமைப்பாளர்: பொதுவாக ஓவியம் வரைதலில் ஆர்வம் கொண்டிருப்பவர்களுக்கு இப்பணி மிகவும் ஏற்றது. வடிவமைப்பு, ஆர்க்கிடெக்சர் போன்றவற்றில் இருக்கும் திறமை இப்பணிக்குக் கூடுதல் பலமாகும். இவை தவிர புரோகிராமிங் திறமை பெற்றிருந்தால், வடிவமைப்பின் போது ஸ்கிரிப்டிங் செய்ய உதவியாக இருக்கும். இதுபோன்ற திறன்களும் திறமையும் இருந்தாலும், கேம் டெவலப்மெண்டில் தீராத ஆர்வம் கொண்டிருப்பதும் கற்பனை வளம் மிகுந்த மனத்தைக் கொண்டிருப்பதும் அவசியமாகும்.

(கட்டுரையாளர், சாப்ட்வியூ கம்யூனிகேசன் நிறுவனம் மூலமாக விஷுவல்கம்யூனிகேசன் கல்வியைக் கற்பித்து வருபவர்.) (இணையதள முகவரி : www.softview.in).

தமிழுக்குத் தொண்டு செய்த பெருமக்கள்

(தமிழுக்குத் தொண்டாற்றிய தமிழறிஞர்களின் நூல்களை தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியுள்ளது. அப்பெருமக்கள் குறித்த தகவல்கள் இப்பகுதியில் தொடர்ந்து வழங்கப்படவுள்ளது.)

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், சிதம்பரத்தில் 2.4.1903 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது பெற்றோர் சடையப்ப தேசிகர் – பாலம்மாள் ஆகியோராவர். 1928ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுத் தேர்ந்த, ச. தண்டபாணி தேசிகர், திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியபோது இவரது மாணவராக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பேராசிரியராக திகழ்ந்த ச. தண்டபாணி தேசிகர் தமிழிலும் வடமொழியிலும் பெரும் புலமை பெற்றவராவார். தமிழக அரசின் திருவள்ளுவர் விருதினை 1988ஆம் ஆண்டில் பெற்ற இவருக்கு, இந்திய அரசு பத்மபூஷன் விருது அளித்துச் சிறப்பித்தது. 'பத்மபூஷன்' விருதுபெற்ற முதல் தமிழறிஞரான ச. தண்டபாணி தேசிகர் 25.4.1990ஆம் ஆண்டு காலமானார்.

இவரது படைப்புகள் வருமாறு :–

I. பிரபந்தங்கள்:

1. கமலாம்பிகை பிள்ளைத் தமிழ் (2 நூல்கள்), 2. அபயாம்பிகை பதிகமும் பிள்ளைத் தமிழும், 3. அபிராமி அந்தாதி (விரிவுரையுடன்), 4. நடராஜ சதகம், 5. அமுதகடேசர் பதிகம்.

II. திருமுறைகள்:

6. திருஞான சம்பந்தர் – முதல் திருமுறை – உரை – (துல கல்வெட்டு ஆராய்ச்சியுடன்), 7. திருவாசகம் – குறிப்புரை ஆய்வு முன்னுரையுடன் 8. திருவாசகம் பஞ்சாக்கிர விளக்கம் எனும் பேருரையுடன் 9. திருக் கோவையார் உண்மை விளக்கம், பேரின்ப உரை. 10. காரைக்கால் அம்மையார் – அற்புதத் திருவந்தாதி. 11.திருமந்திரம் – பாயிரம் முதல் எட்டாந்தந்திரம் முற்பகுதி வரை – உரையுடன் (18 பகுதிகள்)

III. புராணங்கள்:

12. கடம்பவன புராணம் ,13. கோயிற் புராணம், 14. கும்பகோணத் தல புராணம்

IV. சித்தாந்த சாஸ்திரங்கள்:

15. முத்தி நிச்சயப் பேருரை, மிருகேந்திர மொழிபெயர்ப்புக்கு உரை. 16. ஞானாவரன விளக்கம் – படி எடுத்து திருத்தம் செய்து குறிப்புரை எழுதியது.

V. இலக்கணங்கள்:

42. நன்னூல் விருத்தியுரை – விளக்கங்கள் – ஆய்வு முன்னுரைகளுடன். 43. பாயிர விருத்தி – முதற் சூத்திர விருத்தி – குறிப்புரைகளுடன். 44. தருக்க சங்கிரகம் & இராமருத்நீயம்

மொழிபெயர்ப்பு சிவஞான சுவாமிகள் மொழிபெயர்ப்புக்கு குறிப்புரைகள்.

VI. சிற்ப நூல்கள்:

45. கணபதி 22 படங்களுடன், 46. முருகன் 30 படங்களுடன், 47. ஆடல்வல்லான், 241 படங்களுடன்.

VII. திருக்குறள் உரைவளம்:

48. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், 49. திருக்குறள் உரைக்களஞ்சியம் – பாயிர வியல். 50. திருக்குறள் உரைக்களஞ்சியம் – இல்லறவியல் – 1983.

VIII. திருக்குறள் ஆய்வு நூல்கள்:

51. கம்பரும் வள்ளுவரும், 52. காப்பியங் களில் திருக்குறள், 53. திருக்குறளில் மெய்ப்பொருள் சுவடுகள், 54. திருக்குறள் அழகும் அமைப்பும்

IX. அகராதி:

55. சங்க இலக்கிய சொற்களஞ்சியம் (Complete word index in SANGAM Literature with meaning) (அ முதல் ஔ முடிய)

செம்மல் வ.சு.ப.மாணிக்கனார்

தமிழ்ச்செம்மல் எனப் போற்றப்பெறும் வ. சுப. மாணிக்கனார், புதுக்கோட்டை மாவட்டம், மேலைச்சிவபுரி எனும் சிற்றூரில் 9.4.1917 அன்று பிறந்தார். சுப்பையா–தெய்வானை ஆகியோர் இவரது பெற்றோர் ஆவர். இவரது இயற்பெயர் அண்ணாமலை. இளமையிலேயே பெற்றோரை இழந்த வ. சுப. மாணிக்கனார் மேலைச்சிவ புரியிலேயே தமிழ் கற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்ற இவர், அப்பல்கலைக்கழகத்திலேயே விரிவுரையாளராக ஏழு ஆண்டுகள் பணியாற்றினார். தமிழுக்கு அளப்பரிய தொண்டாற்றிய வ.சுப மாணிக்கனார், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றியுள்ளார். திருக்கோவில் களில் தமிழ் வழிபாடு நடத்தப்பெற போராடிய தமிழ்ச் செம்மல் வ.சுப. மாணிக்கனார் 24.04.1989 அன்று காலமானார். இவரது மறைவுக்குப்பின், தமிழக அரசின் திருவள்ளுவர் விருது இவருக்கு அளித்துச் சிறப்பிக்கப்பட்டது. இவரது படைப்புகள் வருமாறு :–

நாடகங்கள்

1. மனைவியின் உரிமை 2. நெல்லிக் கனி 3. உப்பங் கழி 4. ஒரு நொடியில்

கவிதை

5.கொடை விளக்கு 6.மாமலர்கள் 7.மாணிக்கக் குறள்

ஆராய்ச்சி

8. வள்ளுவம் 9.தமிழ்க் காதல் 10. சிந்தனைக்களங்கள் 11. ஒப்பியல் நோக்கு 12. கம்பர் 13. தொல்காப்பியக்கடல் 14. திருக்குறட் சுடர் 15. சங்க நெறி 16.இலக்கியச் சாறு

பிறவகை

17.தலைவர்களுக்கு 18. இரட்டைக் காப்பியங்கள் 19. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 20.இலக்கிய விளக்கம் 21.தொல்காப்பியப் புதுமை 22. உரை நடைத் திருக்குறள் 23.ஏழினந்தமிழ் (உரை) 24. எந்தச் சிலம்பு 25.சேரத்தன் அறப்பட்டயங்கள்

English

26. The Tamil concept of Love 27. A Study of Tamil Nadu 28. Collected Papers 29.Tamilogy



முத்தமிழ்க் காவலர் செந்தமிழ்மாமணி பேராசிரியர்
முனைவர் சி.இலக்குவனார்

தமிழறிஞர் சி. இலக்குவனார், தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், வாய்மை மேடு என்னும் ஊரில் 17.11.1909 அன்று பிறந்தார். இவரது பெற்றோர் பெயர் சிங்காரவேலர்–இரத்தினம் அம்மையார் ஆகும். தனது ஊரிலேயே திண்ணைப்பள்ளிக் கல்வியும் ராசாமடத்தில் நடுநிலைக் கல்வியும் கற்ற இவர், திருவையாறு அரசர் கல்லூரியில் முதல் மாணவராகத் திகழ்ந்து புலவர் பட்டம் பெற்றார். எம்.ஓ.எல் பட்டமும், பின்னர் தொல்காப்பியம் குறித்த ஆய்வுக்காக முனைவர் பட்டமும் பெற்றார். தமிழுக்கு இணையாக ஆங்கிலத்திலும் புலமைபெற்ற சி. இலக்குவனார், தாம் பயின்ற திருவையாறு அரசர் கல்லூரி உள்ளிட்ட பல கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி, பின்னர் தமிழ்த் துறைத் தலைவர், கல்லூரி முதல்வர் என உயர் பதவிகளைப் பெற்று தமிழுக்குப் பெருமை சேர்த்தார். ‘குறள்நெறி’ என்ற இதழ் வாயிலாக தமிழ்ப்பணி ஆற்றி வந்த சி. இலக்குவனார் 3.9.1973 அன்று காலமானார். இவரது படைப்புகள் வருமாறு :–

அ. கவிதைகள்

01. எழிலரசி 02.தமிழிசைப் பாடல்கள் 03. மாணவர் ஆற்றுப்படை 04.துரத்தப்பட்டேன் 05. அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து

ஆ. கதைகள்

06. உழைப்பால் உயர்ந்தேன் (குறள் விளக்கக் கதை பொதிபாடல்) 07. வானொலிக் கதைகள்

இ. ஆராய்ச்சி நூல்கள்

08. தொல்காப்பிய ஆராய்ச்சி 09. பழந் தமிழ் 10. இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் (சங்க காலம்)

ஈ. விளக்கவுரைகள்

11. மாமூலனார் காதல் காட்சிகள் (சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்) 12. தொல் காப்பிய விளக்கம் 13. சிவஞானசித்தியார் உரை (கையெழுத்துச் சுவடி)

உ. வாழ்க்கை வரலாறு

114.கருமவீரர் காமராசர்

ஊ. தன் வரலாறு

15. என் வாழ்க்கைப் போர் (இளமைப்பருவம்)

எ. திருக்குறள் விளக்க நூல்கள்

16. எல்லாரும் இந்நாட்டு அரசர் 17. அமைச்சர் யார்? 18. திருக்குறள் எளிய பொழிப்புரை 19. வள்ளுவர் கண்ட இல்லறம் அல்லது காதல் வாழ்க்கை 20. வள்ளுவர் வகுத்த அரசியல்

ஏ. கல்வியியல் நூல்

21. தமிழ் கற்பிக்கும் முறை

ஐ. ஆங்கில நூல்கள்

22. Origin and Growth of Tamil 23. The Making of Tamil Grammar 24. A Brief Study of Tamil Words 25. The Chronology of Tamil Grammarians 26.Semantemes and Morphemes in Tamil Language (1957) 27. Tamil Language - Introduction (1959) 28.Tamil Language - Phonetics (1959) 29.Tamil Language - Semantics (1959) 30. Tamil Language - Syntax (1959) 31.Tamil Language (1961) 32. Tholkoppi yam in English with critical Studies (Kuralneri Veliyeetagam, Madurai 1963)

★ ★ ★

தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்

கல்வெட்டு ஆராய்ச்சி வித்தகர் எனப் போற்றப்பட்ட தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், தஞ்சாவூர் மாவட்டம், திருப்புறம்பயம் எனும் ஊரில் 15.08.1892 அன்று பிறந்தார். இவரது பெற்றோர் பெயர் வைத்தியலிங்கப் பண்டாரத்தார் – மீனாட்சி அம்மையார் என்பதாகும். இளமையில் திண்ணைப் பள்ளியிலும் பின்னர் புளியஞ்சேரி உயர்தரத் தொடக்கப்பள்ளியிலும் பயின்றார். பள்ளியில் படித்துக்கொண்டிருந்த நாட்களில் இருந்து கல்வெட்டுக்களைப் படித்தறிய ஆர்வம் கொண்டு அவற்றைப் படித்தறிந்தார். அவற்றின் வழி தமிழ் இலக்கிய வரலாற்றை வியந்து தமிழ்ப் பணியாற்றினார். தமிழ் இலக்கியம் மட்டுமல்லாது, தமிழ் இலக்கணத்திலும் நன்கு புலமைபெற்று விளக்கியவர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் என்பது சிறப்புக்குரியதாகும். குடந்தையில் சில காலம் தலைமைத் தமிழாசிரியராகவும் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் 10 ஆண்டுகள் விரிவுரையாளராகவும் பணியாற்றிய இவரின் கல்வெட்டு ஆராய்ச்சியைப் பாராட்டி 1956இல் "ஆராய்ச்சிப் பேரறிஞர்" எனும் பட்டம் வழங்கப்பெற்றது. வரலாற்று ஆய்வும் தமிழ் பணியும் செய்த தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் 02.01.1960 அன்று காலமானார். இவரது படைப்புகள் வருமாறு :–

01. தொல்காப்பியப் பாயிரவுரை 02. முதற் குலோத்துங்கன் 03. பாண்டியர் வரலாறு 04. சோழர் வரலாறு (3 பகுதிகள்) 05. செம்பியன் மாதேவி 06. கல்வெட்டுகளால் அறியப் பெறும் உண்மைகள் 07. காவிரிப் பூம்பட்டினம் 08.இலக்கிய வரலாறு (250–600) 09. 13, 14, 15 நூற். கருணாகரத் தொண்டைமான் 10. பெறற்கரிய பெரும் புலவர்

★ ★ ★

பல்கலைப்புலவர்

கா.சுப்பிரமணிய பிள்ளை

பல்கலைப் புலவர் எனவும் புலவர் கா.சு. பிள்ளை என்றும் அழைக்கப்பெற்ற புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை, திருநெல்வேலியில் 22.11.1888 அன்று பிறந்தார். இவரது தந்தையார் பெயர் காந்திமதி நாதன்; தாயார் பெயர் மீனாட்சி அம்மையார்.

இவர் இளமையில் தனது தந்தையாரிடமே தமிழையும், ஆங்கிலத்தையும் கற்றார். தமிழ்ச் சொற்களுக்குப் பொருள்களும் அகராதிகளான நிகண்டுகளில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த கா. சு. பிள்ளை 1905 இல் மதுரை தமிழ்ச் சங்கம் நடத்திய தேர்வில் முதன்மையாகத் தேர்வுபெற்று பரிசு பெற்றவராவார். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் முதுகலைப்பட்டம் பெற்றதோடு முதுகலை சட்டம் பயின்று தேர்ந்ததால் எம். எல். பிள்ளை எனவும் அழைக்கப்பட்டார். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரி யராகப் பணியாற்றிய இவர், 1934ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி தமிழுக்குத் தொண்டாற்றினார். இடையராது தமிழ்ப்பணி ஆற்றிய இந்தத் தமிழறிஞர் 30.4.1945 அன்று

காலமானார். இவரது படைப்புகள் வருமாறு :–

01. தமிழ் இலக்கிய வரலாறு 02. உலகப் பெருமக்கள் பதினால்வர் வரலாறு 03. நால்வர் வரலாறு 04. அப்பர் வரலாறு 05. திருஞான சம்பந்தர் வரலாறு 06.சுந்தர மூர்த்தி நாயனார் வரலாறு 07. மாணிக்கவாசகர் வரலாறு 08. சேக்கிழார் சுவாமிகள் சரித்திரமும் பெரிய புராண ஆராய்ச்சியும் 09.தாயுமான சுவாமிகள் வரலாறும் நூலாராய்ச்சியும் 10.பட்டினத்தார்கள் வரலாறும் நூலாராய்ச்சியும் 11. குமரகுருபர அடிகள் வரலாறு 12.சிவஞான முனிவர் வரலாறும் நூலாராய்ச்சியும் 13. மெய்கண்டாரும் சிவஞான போதமும் 14. திருஞான சம்பந்தர் தேவார இயற்கை பொருளழகு 15. இறையனார் சுகப்பொருள் 16. பழந்தமிழர் நாகரீகம் 17.தொழிநூற் தொகையும் தமிழ் மொழியமைப்பும் 18.அறிவு விளக்க வரலாறு 19. திருச்சோலையார் துறை விளக்கம் 20. செகப்பிரியர் வரலாறும் நாடக கதைகள் 21. இந்து சமயங்களின் சுருக்க வரலாறு 22. திருநான்மறை விளக்கம் 23. சைவ சித்தாந்த விளக்க சுருக்கம் 24. முருகன் பெருமை 25. சைவச் சடங்கு – விளக்கம் 26.மெய்கண்ட நூல்களின் உரைநடை 27. தமிழர் சமயம் 28. சிவஞான போத மொழிப்புரை 29. தியானமும் வாழ்க்கை உயர்வும் 30. கடவுளும் வாழ்க்கை நலமும் 31. உலக நன்மையே பூருவன் வாழ்வு 32. மக்கள் வாழ்க்கை தத்துவம் 33. வாழ்க்கை இன்பம் 34. உடல் நூல் 35. வான நூல் 36.சிவப் பிரகாசம் – ஆங்கில மொழிபெயர்ப்பு 37. நீதி நெறி விளக்கம் – ஆங்கில மொழிபெயர்ப்பு 38. Metaphysics of the Saiva Siddhanta System 39. A Short Sketch of the Hindu Religion 40. A Note on Hindu Religion Endowment Bill 41.Tamil Blooms 42. Nature of Thevaram and ancient Tamil Scripture 43. பொருட் சட்டம் 44. பதிவு விதி 45. குற்றச் சட்டம் 46. இந்திய தண்டனைத் தொகுதி 47. Principles of Criminology 48.Lectures on the Indian Penal Code

*****



பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்

பல்கலைச் செல்வர் எனப் போற்றப்பெறும் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் 08.01.1901 அன்று சென்னையில் பிறந்தார். இவரது தந்தை பெயர் பொன்னுசாமி, இளம் வயதிலேயே தமிழ் மீது ஆர்வம் கொண்டு தேர்ந்த தமிழறிஞர்களிடம் தமிழ் கற்றார். ஒப்பிலக்கியத் துறைக்கு வித்திட்டு "பன்மொழிப் புலவர்" எனும் பட்டத்தைத் தமது 36ஆம் வயதிலேயே இவர் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி பின் அப்பல்கலைக் கழகத்திலேயே மொழியியல் துறையைத் தோற்றுவித்து அதன் முதல் இயக்குநராகவும் பணிபுரிந்தார். திருக்குறள், சங்க இலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரம் ஆகிய தெள்ளு தமிழ் நூல்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் 27.08.1980ஆம் ஆண்டு காலமானார்.

இவரது படைப்புகள்

01.	1929	கோயிலை இடிப்பதா ? கொண்டு திருத்துவதா ?
02.	1929	இராமாயணப் போராட்டம்
03.	1930	வள்ளுவரும் மகளிரும்
04.	1935	அன்புமுடி
05.	1944	கால்ட்வெல் ஐயர் இயற்றிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (தமிழாக்கம்)

06.	1944	சூளாமணி (பதிப்பு); உரைநடையோடு–1962
07	1946	மனோதத்துவ சாத்திரம் (முதல் பகுதி)
08.	1948	மனோதத்துவ சாத்திரம் (இரண்டாம் பகுதி)
09.	1954	தமிழா, நினைத்துப் பார்
10.	1954	நற்றிணை நாடகங்கள்
11.	1954	நீங்களும் சுவையுங்கள்
12.	1954	வள்ளுவர் கண்ட நாடும் காமமும்
13.	1954	மகாபுராண அம்மானை (பதிப்பு)
14.	1955	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்
15.	1955	பிறந்தது எப்படியோ ?
16.	1957	சம்பந்தரும் சமணரும்
17.	1961	கவிஞர் இரவீந்திரநாத தாகூர்
18.	1961	கானல் வரி
19.	1961	சமணத் தமிழ் இலக்கிய வரலாறு
20.	1961	சயாமில் திருவெம்பாவை திருப்பாவை
21.	1961	குலசேகரர்
22.	1961	குடிமக்கள் காப்பியம்
23.	1962	தமிழ் மணம்
24.	1965	கல்விச் சிந்தனைகள்
25.	1966	நாடகக் காப்பியங்கள்
26.	1968	பாட்டிலே புரட்சி
27.	1971	தொல்காப்பியம் – சொல்லதிகாரப் பதிப்பு
28.	1973	தமிழ்மொழி வரலாறு (தமிழாக்கம்)
29.	1973	தமிழும் பிற பண்பாடும்
30.	1975	வாழும் கலை
31.	1977	மொழியல் விளையாட்டுக்கள்
32.	1978	தாய்லாந்தில் திருவெம்பாவை திருப்பாவை
33.	1978	தேனிப்பு
34.	1980	அன்னீத நாடகம் (பதிப்பு)
35.	1981	பத்துப்பாட்டு ஆய்வு (புறம்)
36.	1981	தமிழ் இலக்கிய வரலாறு; சங்க காலம்
37.	1982	உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு
38.	1985	மாற்றிலக்கணம்
39.	2000	தமிழ் இலக்கிய வரலாறு (தமிழாக்கம்)
40.	2000	தமிழ்க் களஞ்சியம் (கலைக் களஞ்சியக் கட்டுரைகள்)

English Books (Prof. T.P.M.)

41.	1961	Collected Papers of Prof. T.P. Meenakshisundaran
42.	1961	Lectures on Saiva Siddanta
43.	1965	Papers on Linguistics and Literature of T.P. Meenakshisundaran
44.	1965	A History of Tamil Language
45.	1965	A History of Tamil Literature
46.	1966	The Pagent of Tamil Literture
47.	1969	Philosophy of Tiruvalluvar
48.	1974	Advaita inTamil
49.	1974	Foreign Models in Tamil Grammer
50.	1976	Tamil - A Bird's Eye View
51.	1977	Aesthetics of Tamils
52.	1977	Lectures on Some Aspecrts of Indian Social Philosophy

* * *

வான இயல் ஆராய்ச்சியாளர்
யோஹான் கெப்பிலர்

நாம் வாழும் பிரபஞ்சம் முழுவதற்கும் நமது பூமியே நடுமையமாக உள்ளது என்று முற்காலத்தில் பலரும் நம்பி வந்தார்கள். வானத்தில் காணும் சூரியனும், சந்திரனும், ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களும், பூமியைச் சுற்றி, சுழன்று வருகின்றன என்று அக்காலத்தோர் நினைத்து வந்தார்கள். பூமி நிலையாக உள்ளது. அசைவற்றது என்பதைப் பற்றி அவர்களுக்கு யாதோர் ஐயமும் இல்லை. இந்தக் கொள்கைதான் ஐரோப்பாவில் உள்ள அறிஞர் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வந்தது.

இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால், கிரேக்க நாட்டினராகிய அரிஸ்டாட்டிலும், அவரைப் பின்பற்றியவரும் எகிப்து நாட்டில் வாழ்ந்தவருமான டாலெமியும், நமது பூமியே பிரபஞ்சத்தின் நடுநிலை என்னும் கொள்கையை மிகவும் உறுதியாக வற்புறுத்தி வந்ததுதான். அரிஸ்டாட்டில் கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர். டாலெமி கிறிஸ்துவின் காலத்துக்குச் சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பின் வாழ்ந்தவர். இவர்கள் இருவருடைய காலத்துக்கும் முற்பட்ட பித்தாகரஸ் என்பவர் சூரியன்தான் நமது பிரபஞ்சத்தின் நடுநிலை என்றும், பூமி நடுநிலை அன்று என்றும், பூமியும், கோள்களும், சூரியனைச் சுற்றி ஓடுகின்றன என்றும் கூறியிருந்தார். ஆயினும் அரிஸ்டாட்டிலின் மீது கிரேக்கர்கள் மாபெரும் மதிப்பு வைத்திருந்தார்கள். ஆதலால் அவர்கள் பித்தாகரஸின் கொள்கைகளைப் பொருட்படுத்தவில்லை. அரிஸ்டாட்டிலைப் பின்பற்றி டாலெமியின் கொள்கையே சரியான கொள்கை என்று அவர்கள் எண்ணினார்கள்.

இந்தக் கொள்கை தவறான கொள்கை என்றும், சூரியனைச் சுற்றியே பூமியும். மற்றக் கோள்களும் ஓடுகின்றன என்றும், பிற்காலத்தில் துணிந்து வெளியிட்டவர் கோப்பெர்னிக்கஸ் என்பவர். இவர் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். போலந்து நாட்டினர். இவரது காலத்துக்குப் பின் காலீலியோவும், கெப்பிலரும், இவருடைய கொள்கையைப் பின்பற்றி, அதற்குத் தக்க ஆதாரங்களை அளித்த பின்புதான். ஐரோப்பாவில் அக் கொள்கை மக்களிடையே பரவலாயிற்று.

கெப்பிலர் என்பவர், 1571ஆம் ஆண்டிலே டிசம்பர் மாதம் 21ஆம் தேதியன்று, ஜெர்மனி நாட்டிலே வேர்ட்டென்பெர்க் என்னும் மாகாணத்திலுள்ள வைல் என்னும் ஊரில் பிறந்தவர்.

அவர் பிறக்கும்போதே நோயாளியாகப் பிறந்தார். அவருக்குச் சுமார் நான்கு வயதாக இருக்கும்போது வைசூரி நோய் கண்டு அவர் பிழைத்ததே மறு பிறப்பாகி விட்டது. அதன் பயனாக, ஏற்கெனவே பலவீனமாக இருந்த அவருடைய உடல் முன்னிலும் வலிமை குறைந்து. தளர்ந்து விட்டது. கண் பார்வை சற்றே மழுங்கி விட்டது. கைத்திறனும் ஊனமடைந்து விட்டது.

இவ்வளவு சிரமங்களையும் பொருட்படுத்தாமல், கெப்பிலர் தம் ஊரிலுள்ள சிறு பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார். அங்கும் தொடர்ந்து படிக்க முடியாமல் போய்விட்டது. கெப்பிலரின் தந்தை, தம்முடைய மகனுடைய படிப்பை நிறுத்திவிட்டு, அவனைக் கள்ளுக்கடையில் குடியர்களுக்குக் கள்ளை வார்க்கும் வேலையில் அமர்த்தினார்.

பின்பு, கெப்பிலருக்குப் பன்னிரண்டு, பதின்மூன்று வயதாயிருக்கும்பொழுது, அவருடைய தகப்பனாருடைய நண்பர்கள் சிலர் ஒன்றுசேர்ந்து, அவருக்கு உதவி புரிந்து, கெப்பிலரை அக் கள்ளுக்கடையை விட்டு நீக்கினார்கள். மதபோதகர்கள் நடத்தி வந்த பள்ளிக்கூடத்தில் அவரைச் சேர்த்தார்கள். அவரை ஒரு மதகுருவாக ஆக்க வேண்டும் என்பது அவர்களுடைய நினைப்பு. கெப்பிலர் அதில் சேர்ந்து, மிகவும் ஆவலோடு படித்தார். அப்போது அவருக்கும் அதுவே நல்ல வாழ்க்கைத் தொழில் என்று தோன்றிற்று. கணித இயலில் தேர்ச்சி பெற்றார்.

அவருடைய பதினாறாவது வயதில் அவர் ட்வீபிங்கென் பல்கலைக்கழகக் கல்லூரியில் படிக்கச் சென்றார். அவர் மத விஷயங்களைப் படித்து, மதபோதகர் ஆகவேண்டும் என்பது அவருடைய குடும்பத்தினரின் நோக்கம். ஆனால் அப்போது அக்கல்லூரியில் கணித இயல் ஆசிரியராக இருந்த மாஸ்ட்டிலின் என்பவர்

கெப்பிலருக்குக் கணிதத்தில் இருந்த கரைகாணாச் சக்தியைக் கண்டு வியந்து. அவர் கணித இயல் ஆசிரியராக ஆவதுதான் தகுதி என்று முடிவு செய்தார். ஆதலால் தமக்கு ஏற்ற மாணாக்கன் கிடைத்தான் என்று பெரு மகிழ்ச்சி அடைந்து. தம்முடைய முழுக்கருத்தோடும் கெப்பிலருக்குக் கணித இயல் விஷயங்களை எல்லாம் நன்கு கற்பித்து வந்தார். கெப்பிலரும் மதபோதகர் ஆகவேண்டும் என்னும் கருத்தைக் கைவிட்டு, தமது மனம் முழுவதையும் விஞ்ஞானத்திலும் கணித இயலிலும் ஈடுபடுத்தினார். அதில் தேறிப் புகழ் பெற்றார். பின்பு அந்நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் வானஇயல் பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

மாஸ்ட்டிலின். கோப்பெர்நிக்கஸ் வெளியிட்ட கொள்கையை நம்பியவர்களில் ஒருவர். அவர் அந்தக் கொள்கையையே கெப்பிலருக்குக் கற்பித்தார். அக்கொள்கையை உலகத்தார் அனைவரும் ஒப்புக்கொள்ளும்படி நிலைநாட்ட வேண்டும் என்று கெப்பிலரும் அறிவியல் ஆதாரங்களைத் தேடத் தொடங்கினார்.

கெப்பிலர் தமது இருபத்து மூன்றாவது வயதுக்குப் பிறகு, செல்வம் மிக்க சீமாட்டி ஒருத்தியை மணம் புரிந்து கொண்டார்.

செக்கோஸ்லோவாக்கியா என்று வழங்கும் நாட்டின் தலைநகரான ப்ராக் நகரில் வாழ்ந்தவரும் டென்மார்க்கு நாட்டினருமான ட்வீக்கோ ப்ரா என்னும் வான இயல் நிபுணர் கெப்பிலரின் கருத்துத் தவறானது என்று அதுவரை கூறி வந்திருந்தார். கெப்பிலரைத் தமது துணைவராக ஏற்றுக் கொண்டதிலிருந்து, அவர் தம்முடைய பழைய கருத்தைக் கைவிட்டு, சூரியனே கோள்களின் நடுநிலை என்னும் கருத்தை ஒப்புக் கொண்டார்.

இளம் பிராயத்தில் அவருக்கு நேர்ந்த நோய்களின் காரணமாக, அவருடைய கண் பார்வை மிகவும் பலவீனப்பட்டு விட்டது. ஆதலால், கோப்பெர்நிக்கஸின் கொள்கையை நிலைநாட்டுவதற்கு கணித இயலின் துணை ஒன்றையே கொண்டு, கோள்களின் சுற்றுப்பாதைகளைக் குறிக்கும் பலவகையான வடிவங்களை வரைந்து பார்த்து. அந்தச் சுற்றுப் போக்குகளின் முறைகளைக் கவனித்து, அவற்றைக் கணக்கிட்டு. கணித இயலின் மூலமாகவே கோப்பர்நிக்கஸின் கொள்கை உண்மையானது என்று ஆதாரம் காட்டி, கெப்பிலர் விளக்கினார்.

கணித முறையில் கெப்பிலர் வானத்தையும் அதில் உள்ள கோள்கள் முதலிய பலவற்றையும் ஆராயத் தொடங்கினார். கண் பார்வை ஊனமாக இருந்தும், புதிதாக இருநூறுக்கு மேற்பட்ட நட்சத்திரங்களைக் கண்டு

வெளியிட்டார். ட்வீக்கோ ப்ரா குறித்துள்ள குறிப்புகளோடு, தம்முடைய குறிப்புக்களையும் சேர்த்து, அக்கோள்கள் விண்ணில் இயங்கும் பாதைகளையும், அவற்றின் போக்கு, நிலை, விரைவு முதலியவற்றையும், நன்கு தெரிந்து கொண்டார். கோள்களின் வருங்கால நிலைகளையும் அவர் கணக்கிட்டுக் கூறினார். இதில் அவர் மிக்க பொறுமையோடு நெடுங்காலம் உழைத்தார். செவ்வாயை மட்டும் அவர் ஆறு ஆண்டுக் காலம் ஆராய்ந்தார். இந்த இயக்கங்களைப் பல வகையாக அமைத்துப் பார்த்தார். கோள்களின் பாதைகள் நீள் வட்டமானவை என்று முடிவு செய்தார்.

தாம் செய்து வந்த ஆராய்ச்சிகளைக் கெப்பிலர் பல நூல்களாக வெளியிட்டார். அவற்றுள் ஐந்தாவது நூலில்தான் கோள்களின் இயக்க விதிகளை அவர் மிக நன்றாகக் கூறியிருந்தார். "நான் கூறியவற்றை மக்கள் புரிந்து கொள்ளவில்லை. 'இதற்காக நான் வருந்தவில்லை. தம்முடைய இயற்கை விதிகளைக் கூர்ந்து நோக்க ஒருவன் வருவான் என்று கடவுள் இத்துணை பெருங்காலம் காத்திருந்தார். ஆதலால் என்னுடைய நூலை மக்கள் புரிந்து கொள்ள நூறு ஆண்டு ஆனாலும், அது பெரிது என்று நான் கருதமாட்டேன்" என்று அவர் அமைதியோடு கூறினார்.

அவரது வாழ்க்கையில் துன்பங்கள் மேன்மேலும் மிகுந்தன. நாட்டில் "முப்பது ஆண்டுப் போர்" நிகழ்ந்து கொண்டிருந்தது. குழந்தைகளில் ஐவர் அங்கே இறந்து போனார்கள். சம்பளம் கைக்கு வந்து சேரவில்லை. வறுமை வாட்டிற்று. ஆகவே, ஸாகான் என்னும் சிற்றூருக்குக் குடிபோனார். அங்கும் தம்முடைய சம்பளம் வந்து சேராததால், தலைநகருக்குச் சென்று, அதிகாரிகளோடு மன்றாடி, அதைப் பெறலாம் என்று எண்ணிப் பயணம் செய்தார். நெடுந்தூரம் குதிரையில் ஏறிச் செல்ல வேண்டியிருந்தது. மனம் சோர்ந்தது. உடல் சோர்ந்து நோய்வாய்ப்பட்டார். 1630 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ந் தேதியன்று அவர் காலமானார்.

அவ் ஊரில் கெப்பிலர் அடக்கம் செய்யப்பட்டார். பின்னர் போர் காரணமாக அவ் ஊரின் கோட்டை கொத்தளங்கள் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன. அவற்றோடு அவருடைய சமாதியும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. அவருடைய ஆவியையும், அறிவையும் போலவே அவருடைய உடலும் மாபெரும் விண்வெளியில் கலந்து விட்டது.

❖ ❖ ❖

உயிர் நீர் தண்ணீர்

இத்தனை காலமும் குடிக்கும் நீரை ஒரு விற்பனைப் பொருளாக யாரும் நினைத்துப் பார்த்திருக்கவில்லை. மக்களின் அத்தியாவசியப் பொருளாகவே அது கருதப்பட்டு வந்தது. ஆனால் இப்போது அது மிகப் பெரிய ஒரு வாணிபப் பொருளாக மாறிவிட்டது.

குடி நீருக்காக உலகமெங்கும் 800 மில்லியன் டாலர் (நான்கு இலட்சம் கோடி ரூபாய்) வாணிப வாய்ப்பு உள்ளதாக உலக வங்கி அறிவிக்கிறது. இதை கைவசப் படுத்துவதற்கு முதலாளித்துவ நாடுகள் பலவும் போட்டியிடுகின்றன.

இந்தியாவில் பாட்டில் நீர் வியாபாரம் 552 கோடி ரூபாய் வரை எட்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்காக கோககோலா, பெப்சி, நெஸ்லே, பிஸ்லரி, வெரியர், ஸான் பெல்லக்ரினோ, ப்ரைஸ் லைஃப் முதலிய பன்னாட்டு நிறுவனங்கள் களத்தில் இறங்கியிருக்கின்றன.

புட்டி நீர் (bottled water)

பல்வேறு மாநில மற்றும் மத்திய அரசின் சட்ட திட்டங்களைப் பின்பற்றி, மக்கள் பயன் பாட்டிற்காக நல்ல முறையில் பாதுகாப்பாக பலவித அளவுகள் கொண்ட புட்டிகளில் நிரப்பி கவனமாக மூடியிட்டு விற்கப்படும் அனைத்து ரக தண்ணீரும் புட்டி நீர் (bottled water) என்று அழைக்கப்படுகிறது.

புட்டி நீரில் இனிப்புப் பொருட்களோ இரசாயனப் பொருட்களோ இடம்பெறக்கூடாது. சர்க்கரை சேர்க்கக்கூடாது. குறைந்த அளவு கலோரியே இருக்க வேண்டும். அதே வேளையில் பழங்கள் அல்லது வாசனைப் பொருட்களிலிருந்து எடுக்கப்பட்ட எசன்ஸ் களையும், சத்துப் பொருட்களையும், நறுமணப் பொருட்களையும் மிகச் சிறிய அளவில் சேர்த்துக்கொள்ளலாம். இவற்றின் அளவு மொத்த எடையில் ஒரு சதவிகிதத்திற்கும்

மேற்படக்கூடாது. ஒரு சதவீகித்திற்கும் அதிகமாகி விட்டால் அது புட்டி நீர் என்ற இனத்திலிருந்து மாறி குளிர்பானம் (Soft drinks) என்ற பிரிவில் உட்பட்டு விடும். சட்டப்படி எல்லா புட்டி நீரும் சோடியம் கலப்பில்லாததாயிருக்க வேண்டும்.

அமெரிக்க FDA விதிகளின்படி தயாரிக்கப்படும் புட்டி நீர் சுத்தமாகவே இருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். அதுமட்டுமல்ல, புட்டி நீர் தயாரிப்பாளர்களின் அகில உலக சங்கமான IBWA (International Bottled Water Association) குறிப்பிடும் கண்டிப்பான சோதனைகளை 85 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்களும் கடைப்பிடிக்கின்றன. சுத்தத்திற்கு இவை உத்தரவாதம் அளிக்கின்றன.

அமெரிக்காவில் புட்டியில் அடைத்து விற்கப்படும் நீரை இரண்டு வருடங்கள் வரை பயன்படுத்தலாம் என்று உத்திரவாதம் அளிக்கப்படுகிறது. இந்தியாவில் பாட்டிலில் அடைக்கப்படும் நீர் அதிகபட்சம் ஆறு மாதம் வரைதான் பாதுகாப்பானது என்பதே உண்மை. பாட்டில் நீரை வைத்திருக்கும் இடங்களில் வேறு இரசாயனப் பொருட்களோ திரவங்களோ இருப்பது நல்லதல்ல.

தாது நீர் (Mineral water)

குடிக்கும் நீரில் இயற்கையில் உள்ள தாது உப்புக்களும், அபூர்வ மூலங்களும் காணப்பட்டால் அத்தகைய நீரைப் பொதுவாக தாது நீர் என்று அழைக்கலாம்.

தொடர்ந்து 180 டிகிரி சென்டிகிரேடில் நீரைக் கொதிக்க வைத்த பிறகு மீதமுள்ள அளவே தாது உப்புக்களின் அளவாகக் கொள்ளப்படுகிறது. ஒரே இடத்திலிருந்து கிடைக்கும் நீரிலேயே கால மாற்றத்திற்கு ஏற்றவாறு கனிமங்களின் அளவில் சிறிய வேறுபாடுகள் ஏற்படலாம்.

குடிக்கும் நீரின் வழியே தாது உப்புக்கள் உடலுக்குள் சென்றால் அது உடல் நலத்துக்கு நல்லது செய்யுமா என்கிற விஷயத்தில் இன்னும் இருவித கருத்துக்கள் இருக்கின்றன. ஓரளவு நன்மை செய்யும் என்பதே பெரும்பாலோரின் எண்ணம்.

தாது நீரிலுள்ள அமிலத்தின் அளவு, அதில் கலந்துள்ள கடினப் பொருட்களான ஆர்ஸானிக், போரோன் டை ஆக்ஸைட், புரோமின், கால்சியம் குளோரைட், கோபால்ட், கார்பன் டை ஆக்ஸைட், குரோமியம், செம்பு, புளோரைட், ஜெர்மேனியம் பை கார்பனேட்டுகள், அயோடின், இரும்பு, சிலிக்கா, சோடியம், ஸ்ட்ரான்ஷியம், சல்பேட், துத்தநாகம் போன்றவற்றின் கலப்பு அளவைப் பொறுத்திருக்கிறது. இவையே நீரின் தன்மையை நிர்ணயிக்கின்றன.

அமிலச் சத்துக் குணம்

ஹைட்ரஜன் அயன் (Potential hydrogen - H+pH) செறிவின் எதிர்நிலை லோகரிதமே pH. நீரின் தன்மையை அறிவதற்கான வழி இது. பூஜ்யம் முதல் ஏழு வரையுள்ள மதிப்பை அமிலத் தன்மை எனவும், ஏழு முதல் 15 வரையுள்ள மதிப்பை காரத்தன்மை எனவும் குறித்திருக்கிறார்கள். வீரியம் இல்லாத நிலையே ஏழு. வீரியத் தன்மை இல்லாத நீரின் pH மதிப்பு ஏழு. அமிலத் தன்மை கொண்ட நீரைத் தொடந்து பயன்படுத்தினால் பற்களுக்கு கேடு உண்டாகும். நீரில் கார்பன் டை ஆக்ஸைடின் அளவு அதிகரித்தால் அமிலத் தன்மை சாதாரணமாக அதிகரிக்கும்.

ஆர்ஸனிக் (Arsenic-As)

சாம்பல் நிறத்திலுள்ள உலோக மூலம் ஆர்ஸனிக். இது குளோரின், ஆக்சிஜன், கந்தகம் முதலிய வாயுப்பொருட்களுடன் கலந்து in-organic (கனிம) arsenic ஆகவும்; ஹைட்ரஜன், கார்பன் முதலியவற்றுடன் கலந்து organic (கரிம) arsenic ஆகவும் மாறுகின்றன.

ஆர்ஸனிக் ஒரு கொடியவிஷம். மரணத்தை ஏற்படுத்தும். தோல், நுரையீரல் போன்றவற்றைப் பாதிக்கும். புற்றுநோய் வருவதற்கு ஆர்ஸனிக் ஒரு

குடிநீரில் பாசிகள் வளருமா?

குடிநீரின் தேவைக்கான சூரிய ஒளியும், சுத்தமான காற்றும் கிடைக்கும் நிலையில், அத்தகைய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும் நீரில் பாசிகள் வளரும் வாய்ப்பு உண்டு. விலை குறைந்த மட்டமான பிளாஸ்டின் பாத்திரங்களில் குடிநீரை வைத்திருந்தால் அதன் சுவை ஓரளவு மாறுவதை உணரலாம். காலநிலைகளில் நீரின் சுவை பெருமளவில் மாறிவிடும். குறிப்பாக HDPE (High Density PET Poly Ethylene) பாட்டில்களில் வைத்திருந்தால்தான் இந்த மாற்றம். உயர்ரக (Poly Ethylene Tetraphthalate) புட்டிகளில் வைக்கப்படும் நீரின் சுவையில் மாறுதல் ஏற்படுவதில்லை.

காரணமாகும். முன்னாட்களில் ஆர்ஸனிக் கலந்த பெயின்ட்கள் மூலம் படிப்படியாக ஆர்ஸனிக் விஷம் உடம்பில் கலந்துவிடுவதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஆர்ஸனிக் விஷம் காரணமாக மூச்சுத் திணறல், வாந்தி இவற்றுடன் சிறுகுடல் உட்பட ஜீரண உறுப்புகளில் பல இடங்களிலும் வலி ஏற்படும். நுரையீரலும் பித்த நாளங்களும் பாதிக்கப்படும். தொடந்து இதயம், ஈரல், சிறுநீர்ப்பை, நரம்புகள் போன்றவற்றின் செயல்பாடுகள் மிகவும் பாதிக்கப்படும். தோலில் மட்டும் பட்டது என்றால் தோலில் கொப்புளம், சொறி போன்றவை வரலாம். புண்கள் ஏற்படலாம்.

போரான் டை ஆக்ஸைட் (Borondioxide-BO2)

எலும்புகளில் உருவாக்கம் மற்றும் இணைப்பு களுக்கு மிகத் தேவையானது. இது பற்கள் வலுவிழப்பதைத் தடுக்கவும் பல்லின் எனாமல் அழியாமல் இருக்கவும் உதவுகிறது.

கோபால்ட் (Cobalt-Co)

நரம்பு நோய்கள் வராமல் தடுக்கவும் அதற்கான சிகிச்சைக்கும் கோபால்ட் இன்றியமையாதது. வைட்டமின் பி 12 உடன் சேர்ந்து கோபாலமின் உருவாக்குவதற்கும் அது தேவை. பெர்னிஷியஸ் அனீமியாவுக்கான சிகிச்சையிலும், இரத்தக் குழாயைப் பொதிந்திருக்கும் மைலின் படலத்தின் (Myelin Sheath) சிகிச்சையிலும் பயன்படுகிறது.

குரோமியம் (Chromium-Cr)

சர்க்கரை நோயுடனும், நீண்ட ஆயுளுடனும் சம்பந்தப்பட்டது குரோமியம், எலிகளில் நடத்திய சோதனைகளிலிருந்து தொடர்ந்து குரோமியம் அளிக்கப்பட்ட எலிகளின் ஆயுள் மூன்று மடங்கு அதிகரித்ததாகத் தெரிகிறது. சர்க்கரையை சிதைத்து சிறு சிறு பகுதிகளாகப் பிரிப்பதில் குரோமியத்துக்கு குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. சர்க்கரை அதிகம் சேர்த்த பானங்களும், மிதபானங்களும் குடித்தால் குரோமியத்தியன் அளவு இயல்பாகவே குறைந்துவிடும்.

ஜெர்மேனியம் (Germanium-Ge)

புற்றுநோய் சிகிச்சையில் முக்கியப் பங்கு வகிக்கும் ஜெர்மேனியம் இதயத் துடிப்பைச் சீராக்கவும், பொதுவாக இரத்த அணுக்களுக்கு ஆக்ஸிஜன் அளிப்பதிலும் உதவுகிறது.

அயோடின் (Iodine-I)

வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் மூலகங்களில் ஒன்று அயோடின். தைராய்ட் சுரப்பியின் வளர்ச்சியில் அயோடினுக்கு முக்கிய பங்கு உண்டு. அயோடினின் அளவு குறைந்தால் தைராய்ட் சுரப்பி விரிவடைந்து கழலை (Goitre) என்ற நோய் வருகிறது. தினசரி 0.15 முதல் 0.25மி. கிராம் அயோடின் உடம்புக்குத் தேவை.

"அமிலத் தன்மை கொண்ட நீரைத் தொடந்து பயன்படுத்தினால் பற்களுக்கு கேடு உண்டாகும். நீரில் கார்பன் டை ஆக்ஸைடின் அளவு அதிகரித்தால் அமிலத் தன்மை சாதாரணமாக அதிகரிக்கும்.''

லித்தியம் (Lithium-Li)

தாது நீரில் பொதுவாக லித்தியத்தின் அளவு மிகக் குறைவாக இருக்கும். மது போதை, மன அழுத்தம் போன்ற நோய்களுக்கான சிகிச்சையில் லித்தியத்துக்கு முக்கியப் பங்குண்டு.

மாங்கனீஸ் (Manganese-Mn)

மாவுப் பொருள், மாமிசம், கொழுப்பு முதலியவற்றைச் சிதைத்து சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கவும், எலும்புகளின் அமைப்புக்கும், இரத்தம் உறைதல், பாலியல் செயல்பாடுகள் போன்றவற்றுக்கும் மாங்கனீஸ் அவசியமானது.

ரூபிடியம் (Rubidium-Rb)

இதன் பயன்கள் பற்றித் தெளிவாக தீர்மானிக்கப் படவில்லை.

ஸ்ட்ரான்ஷியம் (Strontium-Sr)

இதன் பயன்கள் பற்றித் தெளிவாகத் தீர்மானிக்கப் படவில்லை

கார்பன் டை ஆக்ஸைட் (Carbondioxide-CO2)

தண்ணீருக்குரிய சுவையை அளிக்கும் பொருட்களில் முக்கியமானது இந்த கரியமில வாயு. தண்ணீரின் சுத்தத்தைப் பாதுகாக்கவும் இது பயன் படுகிறது. ஆல்கஹாலை குடல் உறிஞ்சி எடுத்துக் கொள்ளவும் இது உதவுகிறது. மது வகைகளுக்கு வீரியத்தை அளிக்கிறது. மது அருந்துபவர்கள் மதுவுடன் சோடாவை சேர்த்துக் கொள்வது இதனால்தான்.

சோடியம் (Sodium-Na)

உயிரணுக்களுக்கிடையே சிறு அளவில் நீரைப் பங்கீட்டளிப்பதற்கும் தசைகள் சுருங்கி விரிவடைவதற்கும் இது உதவுகிறது. குளோரினும், சோடியமும் கலந்து சோடியம் குளோரைட் என்ற உப்பாக மாறுகிறது. நமது உணவு பண்டங்களுக்கு ருசியைத் தருகிறது. உப்பை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்து வதும் நல்லதல்ல. அதேவேளையில் உப்பே இல்லா விட்டாலும் உடலின் செயல்பாடுகள் பாதிக்கப்படும். தினசரி 2000–3000 மி.கி. சோடியம் உடலுக்குத் தேவை. பலவீனம், உடல் நலக்குறைவு, தசைகளில் தளர்ச்சி போன்றவை உப்புக் குறைவதன் காரணமாக முதலில் தோன்றும் பிரச்சினைகள்; பின்னர் அது உடலின் செயல்பாடுகளையும் பாதிக்கும்.

பொட்டாசியம் (Potassium-K)

உயிரணுக்களுக்குத் தேவையான நீரைக் கட்டுப்படுத்துவதில் பொட்டாசியத்துக்கு சிறப்பான பெரும் பங்கு உண்டு. ஊடுபாவு அழுத்தத்தை (Osmotic pressure) ஒழுங்கு படுத்துவதிலும், நாடித் துடிப்பு ஒழுங்காக அமைவதற்கும் பொட்டாசியம் தேவைப் படுகிறது.

உடலில் அதிக அளவில் நீர் தங்குவது, உடலிலிருந்து அதிக அளவில் நீர் வெளியேறுவது இவற்றைக் கட்டுப்படுத்துகிறது பொட்டாசியம். புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதிலும் இதற்கு முக்கிய பங்கு உண்டு. தினசரி 3,000–4,000 மி.கி. பொட்டாசியம் உடலுக்குத் தேவைப்படுகிறது. இது நாம் உண்ணும் உணவின் மூலமே கிடைத்துவிடுகிறது.

பொட்டாசியத்தின் அளவு குறைந்தால் தசைகளில் வலுவின்மை, இரத்த அழுத்தக் குறைவு, மலச்சிக்கல், பலவீனம் போன்றவை ஏற்படும். அளவு அதிகரிப்பதால் தசைகளில் வலு குறையும். காது சம்பந்தமான நோய்கள் வரும். காதுகள் பாதிக்கப்பட்டு கேட்கும் திறன் குறையும். வாயில் எப்போதும் ஒருவித உலோகச்சுவை இருந்து கொண்டேயிருக்கும்.

சிலிக்கா (Silica-Sio_2)

இயற்கையாகக் கிடைக்கும் தாதுக்களில் ஒன்று. எலும்புகள், குருத்தெலும்பு, பல் போன்றவற்றின் வளர்ச்சிக்குத் தேவைப்படுகிறது.

கால்சியம் (Calcium-Ca)

எலும்பு, பல் இவற்றின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் மூலம் கால்சியம். நீண்டநாள் இது போதுமான அளவில் கிடைக்காவிட்டால் ஒஸ்டியோ போரோசிஸ் என்ற நோய் வரும். தசைகளின் ஒழுங்கான அசைவுகளுக்கும் சீரான நாடித் துடிப்புக்கும் கால்சியம் உதவுகிறது. இதயத் துடிப்பு சரியாக அமைதல், இரத்தம் உறைதல் போன்றவற்றில் கால்சியம் முக்கியப் பங்கு வகிக்கிறது கால்சியம் சரியான அளவில் இல்லாவிட்டால் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். மாரடைப்பு ஏற்படும்.

மெக்னிஷித்துடன் சேர்ந்து கால்சியம் இதயத்துக்குத் தேவையான மின்சாரத்தை வழங்குகிறது எனவும் கூறலாம். ஹார்மோன்களை தயாரித்தல், செரிமான பொருட்கள் (Enzymes) உற்பத்தி போன்றவற்றிலும் கால்சியம் பெருமளவில் உதவுகிறது.

தினசரி 800 முதல் 1,000 மி.கி. கால்சியம் உடலுக்குத் தேவை. 11–24 வயதுள்ள பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு இந்த அளவு 1,200 மி.கி. வரை இருக்கலாம்.

கால்சியக் குறைவு காரணமாக இரத்தச் சோகை, அதிக வியர்வை, தளர்ச்சி போன்றவை ஏற்படும். கால்சியத்தின் அளவு அதிகரித்தால் பசியின்மை, எடைக் குறைவு, மலச்சிக்கல், ஒழுங்கற்ற இதயத் துடிப்பு ஏற்படலாம்.

மெக்னீஷியம் (Megnesium-Mg)

மெக்னீஷியத்தின் குறைவு காரணமாக வயிற்றில் வெட்டி இழுப்பது போன்ற வலி பலவீனம் போன்றவை வரலாம். தினசரி 300–400 மி.கி. மெக்னீஷியம் உடம்புக்குத் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. எலும்புகள் மற்றும் டென்டான் என்ற தசை நார்களின் அமைப்பு, பல என்சைம்களின் உற்பத்தி ஆகியவற்றில் மென்னீஷியம் தேவைப்படுகிறது.

பைகார்பனேட் (Bicarbonate-HCO_3)

பைகார்பனேட் எனப்படும் ஹைட்ரஜன் கார்பனேட் வயிற்றில் உள்ள அமிலத்தை ஒழுங்குபடுத்துகிறது. ஜீரணத்துக்கு உதவுகிறது. வயிறு, குடல்கள் சோர்வடையாமல் கவனித்துக் கொள்கிறது.

குளோரின் (Bicarbonate-HCO_3)

நாம் தினசரி உண்ணும் உணவுக்கு ருசியை அளிப்பது சோடியம் குளோரைட், அதாவது உப்பு. செல்களின் ஒஸ்மோடிக் அழுத்தத்தை சீரமைப்பதில் சோடியத்துக்கும் குளோரினுக்கும் பெரும் பங்கு உண்டு. உடம்பின் அமிலங்களுடன் சேர்ந்த உணவை ஜீரணிக்க உதவுகிறது. தினசரி 1,700 முதல் 6,100 மி.கி. குளோரின் உடம்புக்குத்தேவை. இது குறைவுபட்டால் வயிற்று அமிலங்கள் பாதிக்கப்பட்டு

வயிற்றுப்போக்கு ஏற்படலாம். வயிற்றுப்போக்கு ஏற்பட்டு உடம்பில் நீர் குறைவு (dehydration) ஏற்படும். தண்ணீரை சுத்தப்படுத்தவும் குளோரின் பயன்படுகிறது.

புளூரைட் (Fluore-F)

எலும்பு, பல் இவற்றின் வளர்ச்சிக்கு உதவுகிறது. புளூரைட் குறைவதால் பல் வியாதிகள் வருகின்றன. இதனால்தான் பற்பசைகளில் புளூரைட் சேர்த்துத் தயாரிக்கிறார்கள். எலும்பு தேய்வு (Osteoporosis) நோய் சிகிச்சையில் கால்சியம், விட்டமின் டி இவற்றுடன் புளோரைடும் சேர்க்கப்படுகிறது.

ஒவ்வொரு வயதினருக்கும் தேவைப்படும் புளூரைட் விவரம் வருமாறு :

வயது	ஆண் / மி.கி	பெண் மி.கி.
6 மாதம் வரை	0.01	0.01
6–12 மாதம்	0.5	0.5
1–3 வருடம்	0.7	0.7
4–8 வருடம்	1.1	1.1
9–13 வருடம்	2.0	2.0
14–18 வருடம்	2.9	3.2
19 வயதுக்கு மேல்	3.1	3.8

புளூரைடின் அளவு அதிகப்பட்டால் பற்களின் நிறம் மாறிவிடும். நீண்டநாள் பயன்படுத்தினால் எலும்பு களின் இணைப்பைப் பாதிக்கக் கூடும்.

சல்பேட் (Sulphate-So_4)

செல்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சல்பேட்களில் இருந்து கிடைக்கும் கந்தகம் உதவுகிறது. என்சைம்களில் இது முக்கியமானது. சல்பேட்டின் அளவு குறைந்தால் நோயுள்ள செல்களைக் குணமாக்கும் பணி பாதிக்கப்படும்.

இரும்பு (Iron-Fe)

சிவப்பு இரத்த அணுக்களின் உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிப்பது இரும்பு. இரத்தத்துக்கு ஆக்சிஜனைக் கொண்டு செல்லும் ஹிமோ குளோபினின் உற்பத்தியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் தினசரி 10 மி.கி. இரும்புச் சத்துத் தேவை. கர்ப்பிணிகளுக்கு 30 மி.கி. மாதவிடாய் சமயங்களில் பெண்களுக்கு 15 மி.கி. தேவை. நாம் உண்ணும் உணவிலிருந்து கிடைக்கும் இரும்பின் 5 முதல் 10 சதவிகிதம் உடம்பில் சேருகிறது. எனவே, நாம் எடுத்துக் கொள்ளும் இரும்புச் சத்தின் அளவில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

சோர்வு, இரத்த சோகை, பலவீனம், கை கால் விறைப்பு, தூக்கமின்மை, உறுதியற்ற நகங்கள், அடர்த்தியற்ற தலைமயிர், மலச்சிக்கல் குறைவால் ஏற்படுகின்றன. இரும்புச்சத்து அதிகரித்து விட்டால் ஈரலில் வீக்கம், நீரிழிவு நோய் போன்றவை வரலாம்.

துத்தநாகம் (Zinc-Zn)

செல்களின் அடிப்படைக் கூறான மரபு வழித் தகவல் கொண்ட DNAயின் அமைப்பில் முக்கிய பங்கு துத்தநாகத்துக்கு உண்டு. காயங்கள் விரைவில் ஆறவும், உடலில் தோன்றும் இன்சுலின் அளவு சீராக இருக்கவும் துத்தநாகத்தின் தேவை மிக அவசியம்.

செம்பு (Copper-Cu)

இரும்பைப் போலவே இரத்தத்தில் ஹீமோகுளோபின் உற்பத்திக்கு மிகவும் அவசியமானது செம்பு. இரத்த அணுக்களின் பலவீனத்துக்கு உடம்பில் செம்பின் அளவு குறைவாயிருப்பதும் ஒரு காரணமாகும்.

நீரின் கடினத் தன்மை (Water hardness)

நீரில் சுண்ணாம்பின் (lime) அம்சமே நீரின் கடினத் தன்மையாகும். கடினத் தன்மையை ஒட்டி நீரைப் பலவாறு குறிப்பிடலாம். கால்சியம் கார்பனேட்டின் அளவை வைத்தே நீரின் கடினத் தன்மை நிச்சயிக்கப்படுகிறது.

ஒரு லிட்டரில் கால்சியம் கார்பனேட்

அளவு (மி.கி.)	நீரின் தன்மை
0.75	மிருது நீர்
75–150	இடைத்தர கடினம்
150–300	கடின நீர்
300	அதிகக் கடின நீர்

கால்சியம் கார்பனேட்டின் அளவு டிகிரியில்தான் இருக்கும். அந்த டிகிரியும் பல வகைப்படும்.

தண்ணீர் பலவிதம்

IBWA (International Bottled water Association) இன் பரிந்துரைப்படி நீரின் தரம் பல்வேறு விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

தாதுநீர் (Mineral Water)

பூமியின் அடியிலிருந்து பாதுகாப்பாக கிணறுகள் மூலமாகவோ அருவியின் வழியாகவோ எடுக்கப்படும்,

இயற்கை மற்றும் தாதுக்கள் கலந்த நீர் தாதுநீர் எனப்படும். முன்பு இந்நீரில் கலந்திருக்கும் மொத்தத் தாதுப் பொருட்களின் அளவு 250 ppm வரைதான் இருக்கலாம் என்று விதி இருந்தது. (ppm என்றால் parts per million அதாவது milligram per litre). இன்று தாதுப் பொருட்களின் அளவு 500 ppm–க்குக் குறைந்தால் பாட்டிலில் low mineral content என்றும், 1500–ppm க்கு அதிகமானால் high mineral content என்றும் குறிப்பிட வேண்டும். இந்த அளவு 500–ppm க்கும் 1500–ppm இடைப் பட்டதாயிருந்தால் எதுவும் குறிப்பிட வேண்டியதில்லை.



ஊற்று நீர் (Spring Water)

தரைக்கடியிலிருந்து இயற்கை ஊற்றுக்கள் வழியாகவோ, சானல்கள் வழியாகவோ வரும் நீர் என்றால் Spring Water என்று குறிப்பிட வேண்டும் அருவியை அடுத்து தோண்டப்பட்ட சிறிய கிணறுகள் வழி எடுக்கப்படும் நீரையும் இந்தப் பிரிவில் சேர்க்கலாம்.

நகரசபை நீர் (Municipal Water)

நகரசபை வினியோகம் செய்யும் நீரை நகர சபை நீர் என்ற பெயரில் விற்பனை செய்யலாம். இவ்வாறு சேகரிக்கப்படும் நீரை மீண்டும் சுத்தப்படுத்தி வடிகட்டினால் Purified அல்லது Distilled என்ற வார்த்தையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

குழந்தைகளுக்கான நீர் (Infant brands)

இரசாயனப் பொருட்கள் எதுவும் கலவாத, கிருமிகள் அற்ற நீருக்கு சுத்தமான (sterile) என்ற வார்த்தையைச் சேர்க்கலாம். குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களைத் தயாரிக்க இந்த நீரைப் பயன் படுத்தலாம்.

அமெரிக்காவில் உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாடு (FDA - Food & Drug Administration) நிறுவனத்தின் விதிகளுக்கிணங்க நீரை பலவிதமாகப் பிரித்திருக்கின்றனர்.

பொங்கு ஊற்று நீர் (Artesian water)

ஒரு குறிப்பிட்ட பகுதியில் சேகரித்து வைக்கப்பட்ட நீர் நிலையிலிருந்து எடுக்கப்படும் பொங்கு ஊற்று நீர்.

குடிநீர் (Drinking water)

குடிப்பதற்கு ஏற்ற எல்லா வகை நீரும் குறிப்பாக பாட்டிலில் வரும் நீர் குடிநீர் எனப்படும்.

புட்டிநீர் (Bottled water)

சுத்தப்படுத்தி, குறிப்பிட்ட தர நிர்ணயப்படி, பாதுகாப்பான முறையில் புட்டியில் அடைக்கப்பட்ட குடிப்பதற்கேற்ற நீர்.

தாது நீர் (Mineral water)

இயற்கையாகவே கிடைக்கும் நீர் இது. தாதுக்களின் அளவு மாறாமலும் புதிதாக எதுவும் சேர்க்கப் படாமலும் ஊற்றிலிருந்து நேரடியாக சேகரித்த நீர். இதில் தாது உப்புக்களின் அளவு மாறாமல் நிலையாக இருக்கும்.

அடைக்கப்பட்ட குடிநீர் (Packaged drinking water)

கவனமாக சேகரித்து பாதுகாப்பான முறையின் கிருமிகள் அகற்றப்பட்ட குடிநீர்.

சுத்தமாக்கப்பட்ட நீர் (Purified water)

வடிகட்டி, நுண்கதிர், ரிவர்ஸ் ஆஸ்மாஸிஸ் போன்ற முறைகளால் சுத்தம் செய்யப்பட்ட நீர். இது Reverse osmosis water, de ionisation water, distilled water என்ற பெயரிலும் விற்பனை செய்யப்படுகிறது.

ஒளிரும் நீர் (Sparkling water)

சுத்தப்படுத்துவதற்கு முன் ஊற்றிலிருந்து எடுக்கும்போது நீரில் எவ்வளவு கரியமில வாயு இருந்ததோ அதே அளவு கரியமில வாயு, சுத்தப்படுத்திய பிறகு அந்த நீரில் மீண்டும் சேர்த்தால் கிடைப்பது (இது சோடா அல்ல, சோடா போன்றதும் அல்ல).

நன்றி : மனோரமா இயர் புக் – 2005

இசைத் தூண்கள்

சில கோயில்களில் சில தூண்களை மெதுவாகத் தட்டும்போது இனிய இசை எழும்புவதைக் கேட்டிருப்பீர்கள். இவை இசைத் தூண்கள் எனப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள இசைத்தூண்களில் மிகப் பழமையானதாகக் கருதப்படுவது திருநெல்வேலி நெல்லையப்பர் சுவாமி கோயிலில் உள்ளவையாகும். இசைத் தூண்கள் மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும் ஆழ்வார் திருநகரி, சுசீந்திரம், ஹம்பி ஆகிய இடங்களில் உள்ள கோயில்களிலும் உள்ளன. ஒரு சிறிய தடிமனான குச்சியைக் கொண்டு தட்டினால் பலவித இசைகளை எழுப்பும் இத் தூண்களை அமைத்த சிற்பிகளுக்கு இசையியலுடன் நிலயியல் பற்றியும் நன்கு தெரிந்திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

இத்தகைய தூனை அமைத்தவர்களுக்கு அதிர்வெண்கள் பற்றியும் தெரிந்திருக்கிறது. கல்லின் அடர்த்தி வகையைப் பொறுத்தே இசையொலி எழும்புகிறது என்றும் தெரிந்திருக்கிறது. மிகக் கவனமாக ஒலி அதிர்வாற்றல் கொண்ட கற்களைத் தேர்ந்தெடுத்து நீண்ட கற்கம்பிகளாகத் திறமையுடன் செதுக்கியுள்ளனர். சில தூண்களில் 22 நீண்ட கற்கம்பிகள் அமைத்துள்ளனர். இவை அனைத்துமே ஒரே கற்பாளத்திலிருந்து உருவாக்கப்பட்டவையாகும்.

இந்தக் கற்கம்பிகள் ஒரு மத்திய கற்தண்டைச் சுற்றி ஒழுங்கமைவுடன் நிறுவப்பட்டுள்ளன. மத்திய தண்டே இந்த மொத்த கட்டமைப்பிற்கு ஒருநிலைத் தன்மையை அளிக்கிறது. ஒரு தூணிலுள்ள ஒவ்வொரு கற்கம்பிக்கும் ஒவ்வொரு வடிவமைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கற்கம்பியைத் தட்டும்போது வெவ்வேறு விதமான ஒலியைக் கொடுக்கிறது. இந்த கற்கம்பிகள் அனைத்தும் ஒரே கற்பாளத்திலிருந்து செய்யப்பட்டிருந்தாலும் தூணின் ஒரு பகுதியாக ஆகிவிட்ட பிறகு அவை வெவ்வேறு ஒலிகளையே கொடுக்கின்றன. கற்கம்பிகளின் நீளத்தையும் பருமனையும், சிலிண்டர் வடிவம், சதுர வடிவம் எண் கோண வடிவம் அல்லது முறுக்கு வடிவமென்று பல வகை வடிவங்கள் கொடுத்து மாற்றி அமைப்பதன் மூலம் வெவ்வேறு ஒலிகள் கேட்கின்றன.



மதுரை கோயிலுள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் வெளித் தாழ்வாரத்தில் இரு இசைத் தூண்களும் தெற்கு வாயில் பக்கத்தில் ஐந்து இசைத் தூண்களும் உள்ளன.

ஜெய்ப்பூர் சூரிய கடிகாரம்

ஜெய்ப்பூர் நகரை உருவாக்கிய ஜெய்ப்பூர் மகாராஜா சவாய் ஜெய்சிங் டில்லியில் அமைத்த வான வானியல்

ஆய்வுக் கூடத்தைப் போலவே ஜெய்ப்பூரிலும் 1727 ஆம் ஆண்டு ஒரு வானாய்வுக் கூடத்தை நிறுவினார். இந்தக் கருவிகளின் துணை கொண்டு ஏற்கெனவே நிலவி வந்த வானியல் கருத்துக்களைச் சரி பார்த்து புதிய 'வானியல் அட்டவணை' ஒன்றை 'ஸிக் முகம்மது ஷாஹி' என்ற பெயரில் வெளியிட்டார். இந்த ஜந்தர் மந்தரில் 18 கருவிகள் உள்ளன.



ஜெய்ப்பூர்
சூரிய கடிகாரம்

பிருஹத்சம்ராட் என்று குறிப்பிடப்பட்ட உலகிலேயே மிகப் பெரிய இந்த சூரிய கடிகாரம் ஜெய்ப்பூர் நகர் அமைந்துள்ள அதே மகர ரேகை 27 டிகிரியில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பன்னிரண்டு மணி நேரம் நிமிடங்கள் உட்பட குறிக்கப்பட்டுள்ளன. இக் கருவியில் பொருத்தப்பட்டுள்ள சுட்டுக்கம்பியின் நிழல் எந்த குறியீட்டில் விழுகிறதோ அதுவே அங்கே அப்போதைய நேரம்.

செந்நிற சலவைக் கற்களினாலான கருவி துருவ நட்சத்திரத்தின் இடவமைப்பைச் சுட்டிக் காட்டுகிறது.

கிராந்தி–ரிதா என்று ஒரு கருவி. ஒரே அச்சில் சுழலும் இரு பித்தளைக் கோளங்கள் கொண்டது. ஒன்று நடுவரைக் கோட்டிற்கு இணையாகவும் மற்றொரு கோளம் துருவ இணைக் கோட்டிற்கு இணையாகவும் சுழலக் கூடியவை. இதைக் கொண்டு வான் பொருளின் தூரத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

வானில் கோள்களின் நிலை, சூரியன் சந்திரன், உதிக்கும் மற்றும் மறையும் நேரம் கிரகண நாள்களைக் கண்டுபிடிக்க உதவுவது எந்திர ராஜ். தட்பவெப்பத்தினால் எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படாத கலப்பு உலோக வட்ட வடிவ வட்டு போன்றது இது.

செங்குத்தாகத் தொங்கிக் கொண்டிருக்கும் ஒரு பித்தளை வட்டு கடல் மட்டத்திலிருந்து ஒரு இடம் எவ்வளவு உயரத்தில் உள்ளது என்பதைக் கண்டுபிடிக்க உதவுகிறது. இந்த வட்டின் குறுக்களவு பதினேழரை அடி மற்றும் டில்லியில் உள்ளது போல சம்ராட் எந்திரம், ஜெய்ப்பிரகாஷ் எந்திரம் முதலான பல பிரம்மாண்டமான கருவிகளும் பார்ப்பவர்களைப் பிரமிக்க வைக்கின்றன.

ஆயிரம் கதவு அரண்மனை

மூர்ஷிதாபாத் ஒரு சமயத்தில் வங்கத்தின் தலைநகராக இருந்தது. வங்கம், பிஹார், ஒரிஸ்ஸா ஆகிய பகுதிகளுக்கு சக்கரவர்த்தி ஔரங்கசீப்பின் திவானாக இருந்த நவாப் மூர்ஷித் குலிகானின் பெயரால் இந்நகர் மூர்ஷிதாபாத் என்று வழங்கப்பட்டது. இந்தியா பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தின் கீழ் வருவதற்குக் காரணமாக இருந்த பிளாசிப் போர் நடந்தது இங்கேதான். கல்கத்தாவிலிருந்து 219 கி.மீ. தூரத்திலுள்ளது இந்நகர்.

இங்குள்ள 'ஹஸார் துவாரி' எனும் ஆயிரம் கதவு அரண்மனை புகழ் பெற்ற வரலாற்றுச் சின்னமாகும். நூறு ஏக்கர் பரப்பளவுள்ள பூங்காவில் 450 அடி நீளமும் 200 அடி அகலமும் 40 அடி உயரமும் கொண்ட பிரம்மாண்டமான மாளிகை இது. மீர் ஜாபரின் வழி வந்த நவாப் ஹுமாயன் ஜான் என்பவரால் 1837ஆம் ஆண்டு இந்த மாளிகை கட்டப்பட்டது. ஆயிரம் கதவு மாளிகை என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் இந்த மாளிகையில் 1,200 கதவுகள் உள்ளன. இறுநூறு கதவுகள் போலிக் கதவுகள்.

41 பெரிய கூடங்களும் ஏராளமான அறைகளும் நான்கு பிரம்மாண்டமான மாடிப்படிகளும் கொண்டது.

இந்த மாளிகையில் ஐநூறுக்கும் மேற்பட்ட வண்ண ஓவியங்களும், கறுப்புச் சலவைக் கல்லில் செய்யப்பட்ட பல வண்ண சதுரங்கப் பலகையும், 14,000 க்கும் மேற்பட்ட அரபு இலக்கியங்களும் ஒரு அரியணை அறையும் உள்ளன. அரியணை அறை என்பது மிக அழகான பெரிய கூடம். அதன் நடுவில் பொன் வண்ணம் தீட்டப்பட்ட சலவைக்கல் மேடையில் வெள்ளி அரியணை. அதற்குமேல் தலைக்கு நேராக ஆயிரக்கணக்கான விளக்குகள் கொண்ட மிகப் பெரிய சர விளக்கு. இதைத் தவிர சலவைக் கல்லினாலான ஒரு அரியணையும் முந்நூறு வருட அரியணை ஒன்றும் அங்குள்ளது. நெருக்கடி காலத்தில் மாளிகை அறை களிலிருந்து வெளியேறிச் செல்ல ஆற்றங்கரை வரை ஏராளமான சுரங்கப் பாதைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

இங்குள்ள கத்ரா மசூதி, மோதிஜில் மசூதி, மோதிஜில் அரண்மனை, பாரா நகர் கோயில்கள் முதலியன அக்காலக் கட்டடக் கலையின் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

கண்ணாடிக் கோயில்

மத்தியப் பிரதேசத்தில் இந்தோரில் ஒரு கோயில் உள்ளது. இந்தக் கோயிலுக்குக் கண்ணாடிக் கோயில் என்று பெயர். 'காஞ்ச் மந்திர்' அல்லது 'ஹுக்கும்சந்த் ஜெயின் மந்திர்' என்று குறிப்பிடுகிறார்கள். இது ஒரு சமணர் கோயில். இரயில் நிலையத்திலிருந்து மூன்று கி.மீ. தூரத்திலுள்ளது.

மூன்று மாடிகள் கொண்ட இந்தக் கோயில் முழுக்க முழுக்கக் கண்ணாடியினாலானது. தளங்கள், சுவர்கள், மாடங்கள் அனைத்துமே கண்ணாடிதான். பளிங்குக் கல் பதித்த நடை நிலைக்கவுகளும், படிக்கட்டுகளும் கண்ணாடியால் ஆனவையே. கண்ணாடி ஓடுகள், கண்ணாடி செங்கற்கள் மிக அழகாக உருவாக்கப்பட்டுள்ளன. கண்ணாடிச் சுவர்களில் சமண மத புனித ஸ்தலங்கள், தீர்த்தங்கரர்களின் பெருமை, புராணக் கதைகள் சித்திரங்களாக தீட்டப்பட்டுள்ளன.

சமணத் துறவிகளின் பிராயசித்தம் மரணம்தான்; அதே போல் வாதங்களில் தோற்றவர்கள் சந்திக்க வேண்டியதும் மரணம்தான். அந்த மரண தண்டனையை நிறைவேற்றப் பயன்படும் கருவிகளான கழுமரம், ஈட்டி, விஷம் தோய்த்த அம்பு, அக்கினி குண்டம், சக்கர மரணம், கத்தி முதலானவை கண்ணாடியால் செய்யப்பட்டு வைக்கப் பட்டுள்ளன.



காஞ்ச் மந்திர்

அங்குள்ள விளக்கப் படங்கள் அதற்கான சட்டங்கள் எல்லாமே கண்ணாடியால் செய்யப் பட்டவையே. பளிங்குச் சிற்பங்கள், மாடிப் படிக் கட்டுகள், கைப்பிடிச் சுவர்கள், உண்டியல்கள், கிண்ணங்கள் முதலானவையும் கண்ணாடியால் செய்யப்பட்டவையே.

வெளிநாடுகளிலிருந்து கண்ணாடிகள் இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டுக் கலைஞர்களுடன் வெளிநாட்டுக் கலைஞர்களும் இதை உருவாக்கப் பாடுபட்டனர். ஹுக்கும் சந்த் ஜெயின் என்பவரால் 1921 ஆம் ஆண்டு இந்தக் கண்ணாடிக் கோயில் கட்டப்பட்டது.

ஓரிடத்தில் மூன்று தீர்த்தங்கரர்களின் சிலை உள்ளது. அதனருகே உள்ள கண்ணாடியில் பார்த்தால் 24 தீர்த்தங்கரர்களின் பிம்பங்கள் தெரியும். கோயிலுக்குப் பின்னாலுள்ள மணி மண்டபத்தில் ஏராளமான பதுமைகள் உள்ளன. புத்தரின் சரிதத்திலிருந்து மூன்று காட்சிகள் கண்ணாடியில் தெரிகின்றன. ஒன்றிற்கொன்று வித்தியாசமான சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களின் வனப்பிற்கு ஈடு இணையே கிடையாது.

(நூல் : நம்மவர் செய்த விந்தைகள் 100)

❖ ❖ ❖

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அரிய செயல்பாடுகள்



உலகளவில் மனிதவள மேம்பாட்டிற்காக பல முக்கியமான அம்சங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது, அவற்றில் மனிதவள மேம்பாட்டின் முக்கியக் காரணியாக திகழ்வது இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை ஏற்படுத்தி தோழமை உணர்வுடன் போட்டி மனப்பான்மையோடு அவர்களின் ஆற்றலை மேம்படுத்தி வருகிறது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

இளைஞர்களின் விளையாட்டு ஆர்வத்தினை ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் தமிழக அரசு "தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்" என்ற அமைப்பினை உருவாக்கியது. இவ்வமைப்பு இந்திய விளையாட்டுக் குழும அமைப்பிற்கு ஒப்பானதாகும்.

குறிக்கோள்களும், இலக்குகளும்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய குறிக்கோள்கள் பின்வருமாறு :–

1. மாவட்டத் தலைநகரங்களிலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் விளையாட்டிற்கான விளையாட்டு அரங்க மற்றும் ஆடுகள வசதிகளை உருவாக்குதல்.
2. திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை பெறச் செய்தல்.
3. தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும் வகையில் விருதுகளும், பல்வேறு ஊக்க உதவிச் சலுகைகளும் வழங்குதல்.
4. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர்களிடையே சாகசச் செயல்கள் செய்ய ஆர்வத்தையும், உடற்பயிற்சி செய்ய ஆவலையும் ஊக்குவித்தல்.
5. மாணவர் மற்றும் மாணவரல்லாத இளைஞர் சமுதாயத்தினரிடையே அறிவியல் முனைப்பு, சமுதாய நல்லிணக்கம் மற்றும் சேவை மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்திடல்.
6. விளையாட்டு மற்றும் இளைஞர்கள் நலன் வளர்ச்சியின் நோக்கத்தில் மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களைச் செயல்படுத்துதல்.



பிரபலமான விளையாட்டுக்களுக்கான ஒரு வரையறுக்கப்பட்ட திட்டத்தினை மேம்படுத்தும் பணியிலும் ஈடுபடுத்தப்படுவர்.

விளையாட்டுக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

ஒரு நாட்டில் விளையாட்டுக்களில் பங்கேற்கும் மனப்பான்மையினை ஊக்குவிப்பதில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மாநிலத்திலுள்ள அனைத்து திறமையாளர்களுக்கும் போதுமான கட்டமைப்பு வசதிகளை அமைத்து தருவதற்கு தமிழ்நாடு முன்னுரிமை அளித்துள்ளது.

7. பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், இளைஞர் விழாக்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்தி இளைஞர்களிடம் எழுச்சியையும் உத்வேகத்தையும் மலரச் செய்தல்.

தமிழ்நாடு கடந்த ஆண்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் குழுப் போட்டிகளிலும், தனித்திறன் மற்றும் குழுப் போட்டிகளிலும், முன்னிலை வகித்து வருகிறது. இது தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுக் கட்டமைப்பு, பயிற்சி வசதிகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க உதவித் தொகை ஆகியவற்றால் ஏற்பட்டது.

மாவட்ட அளவிலான திட்டங்கள்

மாவட்டங்களில் உள்ள தலைசிறந்த விளையாட்டுத் திறன்களை ஒருங்கிணைப்பதே இதன் குறிக்கோளாகும். தேசிய விளையாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும் மாவட்டங்களின் இதர பகுதிகளிலும் கண்டறியப்படும் விளையாட்டு திறன்மிக்கவர்களுக்கு பயிற்சி அளிக்க இது வழிவகுக்கும். மாவட்ட அளவில் விளையாட்டை ஊக்குவிக்க விரும்பும் விளையாட்டு ஆர்வலர்கள் இந்நிலையில் கண்டறியப்பட்டு ஊக்குவிக்கப்படுவர். அனைத்து மாவட்ட விளையாட்டு அலுவலர்களும் மாவட்டத்தில் பிரபலமான விளையாட்டுக்களை கண்டறிந்து அதனை முன்னேற்ற தகுந்த விளையாட்டு வரைபடம் தயாரிக்கும் பணியில் தொடந்து ஈடுபடுத்தப்படுவர். மேலும் மாவட்டத்தில்

பன்னாட்டுத் தரத்திலான வசதிகள்

ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை

இவ்விளையாட்டரங்கம் சுமார் 40,000 இருக்கை வசதியைக் கொண்டு கட்டப்பட்டது. மேலும், பன்னாட்டு தரத்திலான கால்பந்து ஆடுகளம் (புல்வெளியுடன்) மற்றும் தடகள ஓடுகள (400 மீட்டரில் 8 ஓடுகளப் பாதையுடன் செயற்கை இழை ஓடுகளம்) வசதிகளைக் கொண்டது. இவ்விளையாட்டரங்கம் மின்னொளி அமைப்பு மற்றும் மின்னணு கணக்கியல். கருவி ஆகிய வசதிகளையும் கொண்டது. மேலும், இவ்விளையாட்டரங்கில் ஒரு சதுரங்கக் கூடம், ஒரு பளுதூக்கும் கூடம் மற்றும் மேசைப்பந்து விளையாட்டிற்கான ஒரு கூடமும் அமைந்துள்ளன.

8,000 இருக்கை வசதியைக் கொண்ட இவ்விளையாட்டரங்கம் கையுந்துபந்து, கூடைப்பந்து, மேசைப்பந்து, சிறகுப்பந்து, குத்துச்சண்டை, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்ற விளையாட்டுக்கான வசதிகளுடன் குளிர்சாதன வசதியுடன் கூடியது. தற்போது இந்த வளாகத்தில் ஸ்கேட்டிங் ரிங்க் மற்றும் ரோலர் ஹாக்கி ஸ்கேட்டிங் ரிங்க் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வளைகோல்பந்து விளையாட்டரங்கம், எழும்பூர், சென்னை.

இவ்விளையாட்டரங்கம் 4000 இருக்கை வசதியைக் கொண்டது. வளைகோல்பந்து ஆடுகளம் புதிய **"மெகா டர்ப் செயற்கை புல்வெளி"** 30 x 15மீ அளவில் பயிற்சி வளைகோல்பந்து ஆடுகள வசதியுடன் அமைக்கப் பட்டுள்ளது. மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து ஆடுகளத்தில் வண்ணத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் வகையில் செயற்கை மின்னொளி வசதி அமைக்கப் பட்டுள்ளது.

நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை.

இவ்விளையாட்டரங்கம் 4000 இருக்கை வசதியுடன் ஒரு போட்டி குளம் – (50 x 25மீ), ஒரு பாய்ச்சல் குளம் – (18 x 25மீ) மற்றும் ஒரு பயிற்சி குளம் – (20 x 25மீ) ஆகிய வசதிகள் உடையது.

டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை,

இவ்விளையாட்டரங்கத்தில் மத்திய ஆடுகளத்தில் 5000 இருக்கை வசதிகளும் மற்றும் 6 பயிற்சி ஆடுகளங்களில் 2000 இருக்கை வசதிகளும் உள்ளது. இந்த செயற்கை இழை ஆடுகளங்கள் சர்வதேச அளவிலுள்ள ஆடுகளங்களுக்கு இணையாகவும், மின்னொளி அமைப்புடன் கூடியதாகவும் உள்ளது.

ஸ்குவாஷ் (சுவர்பந்து) ஆடுகளம்,
மாநில விளையாட்டு வளாகம், நேரு பூங்கா

தனியார் கூட்டாண்மையுடன் எட்டு சர்வதேச தரத்திலான ஸ்குவாஷ் ஆடுகளங்கள் மாநில விளையாட்டு வளாகம், நேரு பூங்காவில் தமிழ்நாடு மாநில ஸ்குவாஷ் ராக்கெட் கழகத்துடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ளன.



மதுரை மற்றும் கோவையில்
செயற்கை இழை ஓடுகளப் பாதை

மதுரை ரேஸ் கோர்ஸ் விளையாட்டரங்கில் செயற்கை இழை ஓடுகளப் பாதை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு செயற்கை இழை ஓடுகளப் பாதை கோவை நேரு விளையாட்டரங்கில் மேம்படுத்தப்படவுள்ளது.

அண்ணா விளையாட்டரங்கம், பாளையங் கோட்டையிலும் சென்னை ஒய்.எம்.சி.ஏ உடற்பயிற்சி கல்லூரியுடன் இணைந்து, அக்கல்லூரி மைதானத்தில் கூட்டு கட்டமைப்பு மேம்பாட்டு வசதியுடன் செயற்கை இழை ஹாக்கி ஆடுகளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திறமை கண்டறிதல் மற்றும் திறமை மேம்படுத்துதல் மாவட்டங்களில் விளையாட்டுத் திறன் மிக்கவர்களை கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்.

பள்ளிகளில் உடற் திறன் தேர்வுகளைப் பரவலாக நடத்தி அவர்களுக்கு விளையாட்டு அறிக்கை அட்டை வழங்குதல்.

தமிழ்நாட்டில் சர்வதேச விளையாட்டு வீரர்களின் திறமையை கண்டறியும் திட்டத்தின் கீழ் உடற் திறன் தேர்வுப் போட்டிகளை, மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 6,7 மற்றும் 8ஆம் வகுப்புகளில் பயிலும் சிறுவர்/ சிறுமியர்களுக்கு நடத்துவதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாட்டில் விளையாட்டினை வளர்ச்சியடையச் செய்ய அரச இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. மேலும், அரசு அறிவுறுத்தலின் பேரில், உடற்திறன் தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பள்ளி சிறுவர் / சிறுமியர்களுக்கு விளையாட்டு முன்னேற்ற அறிக்கை அட்டை வழங்கப்படுகின்றது. இந்த அறிக்கை அட்டையின் அடிப்படையில் சிறுவர் / சிறுமியர்கள் அவர்களுக்கு ஏதுவான குறிப்பிட்ட விளையாட்டில் கலந்து கொள்ளவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. இவ்வாறு திறன் மிக்கவர்கள் விவரம் மாநில அளவிலான விவரக் குறிப்பேட்டில் (டேட்டா பேங்க்) பதிவு செய்யப்பட்டு அதன் மூலம் வருங்கால திறன்மிக்கவர்களை கண்டறிய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டம், பள்ளிக் கல்வி இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர், தொடக்கப்பள்ளி இயக்குநர் மற்றும் ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகளின் ஆய்வாளர் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி மாவட்ட அளவில் விளையாட்டு திறன் மிக்கவர்களை கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6,7 மற்றும் 8–ஆம் வகுப்புகளுக்கும் சிறுவர் / சிறுமியர்களின் உடற்திறனை கண்டறிய, வேகமாக ஓடுதல், (Speed) அதிகமாக தாக்குப்பிடிக்கும் திறனை கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனை கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில் 10–க்கு 10 என்ற மதிப்பெண்கள் அல்லது 2 தேர்வுகளில் 10–க்கு 9 என்ற மதிப்பெண் பெற்றவர்களின் பட்டியல் குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப் படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100மீ, 200மீ, 400மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகள பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களை கண்டறிய போட்டிகளை நடத்தி வருகிறது. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு. விளையாட்டுத் திறனை கண்டறிய மண்டல அளவில் ஏற்கெனவே மேலே குறிப்பிட்ட 6 தடகள பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அப்போட்டிகளில் பங்கேற்க கல்வி மாவட்ட அளவில் முதல் 2 இடங்களில் வெள்ளி பெற்ற சிறுவர் / சிறுமியர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. உள்ளூர் அளவில் அதிக திறமை வாய்ந்த சிறார்களை கண்டறியும் பொருட்டு இம்முயற்சி ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்கள்

கல்லூரிகளில் பயிலும் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்தி அவர்கள் பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டுப் போட்டிகளில் வெற்றிவாகை சூடி பெருமை சேர்த்திடும் வகையில் அரசு, வெவ்வெறு மாவட்டங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் பல்வேறு விளையாட்டுகளில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்புக்களை பயன்படுத்த, ஏழு ஆண்கள் கல்லூரிகளிலும் மற்றும் ஐந்து பெண்கள் கல்லூரிகளிலும் இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களை அமைக்க அனுமதி வழங்கியது.

மேலும், அரசு குறைந்தபட்ச தகுதியை நிர்ணயித்தும், கல்லூரி நிருவாகமே இத்திட்டத்தின்கீழ் இருநூற்றி முப்பது மாணவ, மாணவிகளை சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கியது.

மேற்படி கல்லூரிகளைச் சார்ந்த சிறந்த விளையாட்டு திறன்படைத்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இணை விளையாட்டு மேம்பாட்டு மையங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

மாநில அளவிலான சிறப்பு அகாடமியில் – விளையாட்டுத் திறன் மிக்கவர்களை கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்.

சிறப்பு அகாடமிகள்

சிறப்பு விளையாட்டு அகாடமிகள் உலகம் முழுவதும் தற்பொழுது பிரபலமாக உள்ளது. இந்த சிறப்பு விளையாட்டு அகாடமியில் பயிற்சி பெறுபவர்களின் திறமையை மேம்படுத்தவும் அவர்கள் வெற்றி வாகை சூடவும் வழிவகுக்கின்றது. ஒருவரின் திறமையை குறிப்பிட்ட விளையாட்டில் மேம்படுத்த உளவியல் தேர்வு, மனவலிமை, உடல் வலிமை, சத்துணவு, முறையான பயிற்சி, விளையாட்டு உபகரணங்கள், மருத்துவ வசதி மற்றும் விஞ்ஞான அடிப்படையிலான பயிற்சி மிக அவசியம். இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பயிற்றுநர்களையும் மற்றும் உயர்ந்த திறன் பெற்றவர்களையும் கொண்ட பயிற்சிகளை அளித்து வருகிறது. இருப்பினும், அவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரும் வகையில் ஊக்குவித்தல் அவசியமாகிறது.

கீழ்க்காணும் விளையாட்டுக்களில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நிறுவப்பட்டுள்ளன:

- மதுரையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிவேக ஓட்டம் மற்றும் குதித்தல் அகாடமி.
- சென்னையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து அகாடமி.
- சென்னை புதூர் அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கிரிக்கெட் அகாடமி.
- புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கூடைப்பந்து அகாடமி.
- சென்னை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய எறிதல் அகாடமி.
- சென்னை நுங்கம்பாக்கம் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கையுந்துபந்து அகாடமி.
- சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய டைவிங் அகாடமி.
- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீண்ட தூர ஓட்டத்திற்கான அகாடமி.

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய குறுந்தூர ஓட்டத்திற்கான அகாடமி.
- திண்டுக்கல்லில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய சிறுமியர் கால்பந்து அகாடமி.
- சென்னையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வளைகோல் பந்தாட்ட அகாடமி.

தேசிய அளவில் – விளையாட்டுத் திறன்மிக்கவர்களை கண்டெடுத்தல் மற்றும் திறமைமிக்கவர்களை மேம்படுத்துதல்

சேம்பியன் மேம்பாட்டுத் திட்டம்

சேம்பியன் மேம்பாட்டு திட்டம் சர்வதேச அளவில் பதக்கங்களை வெல்லக்கூடிய தனித்தன்மையுடைய

திறமையுள்ள விளையாட்டு வீரர்களை கண்டறியும் ஓர் ஒப்பற்ற திட்டமாகும். சர்வதேச அளவில் பங்கேற்று பதக்கங்களைப் பெற்று தாயகத்திற்கு பெருமை சேர்க்கக் கூடிய சேம்பியன்களை உருவாக்க ஒரு தனிப்பட்ட திட்டமும் செயலாக்கமும் தேவைப்படுகின்றது. அதனடிப்படையில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பல்வேறு விளையாட்டுக்களில் தமிழகத்திலிருந்து பதக்கங்களைப் பெற வாய்ப்புள்ள சேம்பியன்களை இனம் கண்டது. அவ்வாறு இனம் கண்டறியப்பட்டவர்களுக்கு அவர்களுடைய திறமைகளை மேலும் வளர்க்க அவர்களது தேவைக்கேற்ப சரியான உதவிகள் வழங்கப்படுகின்றன. தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப்பதக்கம் பெற்றவர்கள் மேலும் சில குறிப்பிட்ட விளையாட்டுக்களில் தங்கம் அல்லது வெள்ளி பதக்கம் பெற்றவர்கள்தான் இத்திட்டத்தின் கீழ் பயனடைய முடியும் என்ற தகுதிக் குறிப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மூலம் இனம் கண்டறியப்பட்ட விளையாட்டு சேம்பியன்களுக்கு தேவையான உதவிகளும் வழங்கப்படுகின்றன. நிதி உதவிகளைத் தவிர அவர்களுடைய உளவியல் திறன் மற்றும் உடல்ரீதியான வலிமையினை மேம்படுத்தவும், அந்தந்த விளையாட்டிற்கு தேவையான சத்தான உணவு உட்கொள்ளும் முறையை பின்பற்றுதல் மற்றும் போட்டிகளில் வெற்றிவாகை பெற இயக்கும் ஆற்றல் போன்றவைகளில் (Physiological ability, Psychological Strength, Motivational aspects, Nutrition intakes) மேம்படுத்த பயிற்சியையும், அதனால் அவர்கள் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றிவாகை சூட வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் இயலுகிறது.

மாவட்ட அளவிலான
இருப்பிட பயிற்சி முகாம் திட்டம்

உலகத்திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்ட மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென மாவட்ட அளவிலான இருப்பிட பயிற்சி முகாம்கள் மாநிலத்தில் **30** மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் தத்தம் திறமைக்கேற்ப பங்குகொள்ளச் செய்வதற்கென இந்த மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டின் அடிப்படை திறமைகள் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

மாநில அளவிலான பயிற்சித் திட்டம்

பல்வேறு விளையாட்டுகளில் திறன்மிக்கவர்களை கண்டறிய மாவட்டம், மாநிலம் மற்றும் மண்டல அளவிலான இருப்பிட கோடை கால பயிற்சி முகாம்கள் நடத்தப் படுகின்றன.

அகில இந்திய ஊரக விளையாட்டு போட்டிகள் பயிற்சி முகாம்

பல்வேறு மாநிலங்களில் தேசிய அளவில் நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில், தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட பதினாறு வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு, பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் ஏழு நாட்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள் –
தேசிய அளவில் பங்கேற்கும் முன் பயிற்சி முகாம்

பல்வேறு மாநிலங்களில் நடத்தப்படும் தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக அணி பங்கு பெறுவதற்கு முன்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிருக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் ஏழு நாட்களுக்கு பயிற்சி முகாம் நடத்தப்படுகிறது.

தேசிய அளவில் – பயிற்சி முகாம் திட்டம்

அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில விளையாட்டுக் கழகங்கள் பன்னாட்டு அளவில் பங்குபெறும் முன்னர், தேசிய அளவில் பயிற்சி முகாம் தமிழ்நாட்டில் நடத்தப்படுமானால், அதற்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மனப்பாங்கினை மேம்படுத்துதல்

மாவட்டத்திற்குள் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து தரப்பினரும் பங்கேற்றல்

உள்ளூர் அளவில் இதுவரை கண்டறியப்படாத திறமைகளை வளர்த்திடவும், உடற்தகுதி மற்றும் விளையாட்டில் ஆர்வத்தினை அடிமட்ட அளவில் ஊக்குவிக்கவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

அனைத்துப் போட்டிகளும் மாவட்ட அளவில் அனைத்து நிலைகளிலும் நடத்தப்படும். அவையாவன :

- ❖ ஒரு குறிப்பிட்ட பகுதி (அ) இடத்தில் அமைந்துள்ள பள்ளிகளுக்கிடையே.
- ❖ ஒரு குறிப்பிட்ட பகுதி (அ) இடத்தில் அமைந்துள்ள குழுக்களுக்கிடையே.
- ❖ கல்லூரிகளுக்கிடையே.
- ❖ வட்டாரங்களுக்கிடையே (இரண்டாக இருப்பினும்)
- ❖ இரண்டு (அ) மூன்று பிரிவுகளுக்கிடையே.
- ❖ மாவட்டத்திற்குள் ஏதாவது ஒரு விளையாட்டில் சமுதாய பங்கேற்பினை ஊக்குவிக்கும் வகையில் அனைத்துப் போட்டிகளையும் நடத்துதல்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் 200 போட்டியாளர்கள் பங்கேற்கும் வகையிலும் ஓர் உறுதியான அடித்தளம் அமைத்திடும் வகையிலும் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டிகள் விளையாட்டில் ஆர்வமுள்ள நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளால் முதன்மையாக ஏற்று நடத்தப்படும். மாவட்ட விளையாட்டு அலுவலர், மாவட்ட அளவிலான நிலை–1 போட்டிகளை நடத்துவதில் முக்கிய பங்கு வகிப்பார்.

மாவட்ட அளவிலான போட்டிகள்

மாதாந்திர விளையாட்டுப் போட்டிகள்

கண்டறியப்பட்ட திறமை மற்றும் வளர்ந்துவரும் திறமைகளில் தொடர்ச்சியாக போட்டிகள் நடத்துவதன் மூலம், "போட்டிகளில் கலந்து கொள்ளும் மனப்பாங்கினை" வளர்க்க இயலும். சென்னையில் தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டுக்களில், போட்டிகள் மாதந்தோறும் நடத்ததப்பட்டு வருவதால், சிறப்பான பங்கேற்கும் ஆர்வம் அதிகமானதையும், போட்டியாளர்களின் முன்னேற்றத்தையும் அறிய முடிகிறது. அனைத்துவகை வயதினருக்கும் வெவ்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் அனைத்து மாவட்டங்களிலும் மாதம் ஒரு முறை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான போட்டிகள் விளையாட்டு வீரர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களின் திறனை அதிகரிக்கச் செய்யவும் மாபெரும் வாய்ப்பாக அமைகிறது. தற்போது அனைத்து மாவட்டங்களிலும், தடகள விளையாட்டு மற்றும் அந்தந்த மாவட்டத்தில் பிரபலமாக விளங்கும் விளையாட்டுக்களில் பள்ளி மற்றும் கல்லூரி

மாணவர்கள் பங்கேற்க வாய்ப்பளிக்கும் வண்ணம் மாதந்தோறும் மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் முப்பது மாவட்டங்களில் கீழ்கண்ட விளையாட்டுகளில் சிறுவர், சிறுமிகளுக்காக நடத்தப்படுகிறது.

தடகளம், கூடைப்பந்து, கையுந்துபந்து, கால்பந்து, வளைகோல்பந்து, வாள்சண்டை, மேசை பந்து, டென்னிஸ், குத்துச் சண்டை, நீச்சல், டேக்வொன்டோ மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ்.

அண்ணா சைக்கிள் போட்டி

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் 16 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு தனித்தனியாக மாவட்ட அளவிலான அண்ணா சைக்கிள் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவிலான அண்ணா சைக்கிள் போட்டி ஒவ்வொரு ஆண்டும் சுழற்சி முறையில் ஒரு மாவட்டத்திலிருந்து வெற்றிபெறுபவர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றது.

அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள்

ஒன்று அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் நீச்சல் வீரர்களின் திறமைகளை அதிகப்படுத்தும் வகையில், அனைவரும் பங்கேற்கும் வகையிலான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தடகள விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு வயது பிரிவுகளில், சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச தரத்திலான செயற்கை ஓடுகள தளத்தில் பல்வேறு வயதுப் பிரிவினருக்கு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதேபோன்று, சென்னை வேளச்சேரியில் அமைந்துள்ள சர்வதேச தரம் வாய்ந்த நீச்சல் குள வளாகத்தில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அனைவரும் பங்கேற்கும் வகையிலான நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விளையாட்டுகள்

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விளையாட்டுப் போட்டிகளுடன், புதியதாக ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள் சண்டை, குத்துச் சண்டை, நீச்சல், டேக்வொன்டோ, கைப்பந்து, டென்னீஸ், ஜுடோ, ரோடு சைக்ளிங், கடற்கரை கையுந்துபந்து மற்றும் செஸ் ஆகிய 12 விளையாட்டுக்கள் பள்ளிகளுக்கிடையேயான குடியரசுதின விளையாட்டுப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இப்புதிய விளையாட்டுகள் நடத்துவதற்கான விதிமுறைகளை கற்றுக் கொள்ளும் வகையில் மாநிலம் முழுவதும் இவ்விளையாட்டு நுணுக்கங்கள் தெரிந்த வல்லுநர்களால், உடற்கல்வி ஆசிரியர்களுக்கும் உடற்கல்வி இயக்குநர்களுக்கும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் இணைந்து இப்புதிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது.

உலகத் திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின் கீழ் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

அரசு வழிகாட்டுதலின்படி, தமிழகத்தில் அனைத்துப் பள்ளிகளிலும், 6,7 மற்றும் 8–ஆம் வகுப்பு சிறுவர் / சிறுமியர்களின் உடற்திறனை கண்டறிய, வேகமாக ஓடுதல், (Speed) அதிகமாக தாக்குப்பிடிக்கும் திறனை கண்டறிதல் (Endurance), உடல்வலிமை கண்டறிதல் (Strength), உந்து திறன் மற்றும் சுறுசுறுப்புத் திறனை கண்டறிதல் (Explosive Power and Agility) ஆகிய உடற்திறன் ஆற்றல் போட்டிகள் நடத்தப்பட்டு, அந்தத் தேர்வுகளில் ஒரு தேர்வில் 10–க்கு 10 என்ற மதிப்பெண் அல்லது 2 தேர்வுகளில் 10–க்கு 9 என்ற மதிப்பெண்கள் பெற்றவர்களின் பட்டியல், குறிப்பிட்ட படிவத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 100மீ, 200மீ, 400மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் ஆகிய தடகள பிரிவுகளில் தமிழ்நாட்டில் உள்ள 64 கல்வி மாவட்டங்களில் விளையாட்டுத் திறமை உடையவர்களை கண்டறிய, போட்டிகளை நடத்தின. அதனைத் தொடர்ந்து, கல்வி மாவட்டங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து 9 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, முதல் இரண்டு இடத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு, அவர்களின் திறமைகளை கண்டறிய, மண்டல அளவில் போட்டிகள் நடத்தப் படுகின்றன. சர்வதேச அளவில் திறமை வாய்ந்த சிறார்களை கண்டறியும் பொருட்டு ஒரு விரிவான தேர்ந்தெடுக்கும் முயற்சி நடைமுறையில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

சர்வதேச அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், சென்னை ஒப்பன்

டென்னிஸ் விளையாட்டில் இதுகாறும் சென்னையில் "டாடா ஒபன்" என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. தற்போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமும் மற்றும் ஐஎம்சி (International



Merchandising Corporation) நிறுவனமும் இணைந்து இந்த போட்டியை "சென்னை ஒபன்" (CHENNAI OPEN) என்ற பெயரில் டென்னிஸ் போட்டிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2006 ஜனவரி 2 முதல் 8 வரை சென்னை ஒபன் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. சென்னை ஒப்பன் டென்னிஸ் போட்டிகள் சர்வதேச தரத்தை ஒட்டிய மற்றும் சர்வதேச அளவில் மதிப்பு மிக்க விளையாட்டுப் போட்டியாகும். இந்த போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டில் புகழ்பெற்ற சேம்பியன் டென்னிஸ் விளையாட்டு வீரர்களும், மற்றும் அப்போட்டிகளில் வளர்ந்து வருகின்ற விளையாட்டு வீரர்களும், சர்வதேச அளவில் தங்களுக்கென ஒரு நிலையை ஏற்படுத்திக் கொள்ள இயலும். நம் நாட்டின் தலைசிறந்து டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் பங்கேற்பார்கள். இவ்வாறு விளையாட்டு வீரர்கள் பங்கேற்பது, சென்னை டென்னிஸ் விளையாட்டு வீரர்களின் ரசிகர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பாகும். சென்னையில் நடத்தப்படுகின்ற டென்னிஸ் போட்டிகள், உலகம் முழுவதும் தொலைகாட்சிகளில் நேரிடையாக ஒளிபரப்பப்படுவதால், அதனைப் பார்க்க பார்வையாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இதனால் உலகத்தின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்கள், இப்போட்டியில் பங்கேற்க ஆர்வமாய் உள்ளனர். இப்போட்டிகள் சர்வதேச அளவிலான விளையாட்டு சானல் மூலம் உலகளாவ ஒளிபரப்பப்பட்டன. அதனால், சென்னை ஒப்பன் என்ற பெயரிலான டென்னிஸ் போட்டிகளின் நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள்

தமிழக அரசு தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகைகள், விருதுகள் மற்றும் ஊக்கத் தொகைகள் வழங்கி வருகின்றது.

விளையாட்டு உதவித் தொகைத் திட்டம்.

இத்திட்டத்தின்கீழ், 17 விளையாட்டுப் போட்டிகளில், தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு (குறைந்தபட்சம் தேசிய அளவில் பதக்கம் பெற்றவர்) உதவித் தொகையாக ஒருமுறை மட்டும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி மாணவராக இருந்தால், ரூ.5,000மும், கல்லூரி / பல்கலைக்கழக மாணவராக இருந்தால் ரூ.6,500ம் வழங்கப்பட்டு வருகிறது.

நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கான ஓய்வூதிய திட்டம்

நலிந்த நிலையிலுள்ள, கடந்த காலங்களில் சிறந்து விளங்கிய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் அவர்களுடைய மாத வருமானம் ரூ.2000க்கு மிகாமலும், 58 வயதைக் கடந்தவராகவும் இருந்தால், அவர்களுக்கு ஓய்வூதியமாக மாதமொன்றுக்கு ரூ.500 வீதம் அவர்களுடைய வாழ்நாள் முழுவதும் நிதியுதவியாக வழங்கப்படுகிறது.

விளையாட்டு வீரர்கள் நல நிதி

தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்கள் காயமடைந்தால்

அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் பொருட்டு, விளையாட்டு வீரர்கள் நல நிதி ஒன்று தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

திறமையான விளையாட்டு வீரர்களுக்கென பணி ஒதுக்கீடு செய்து நியமனம் செய்தல்

தற்போது காவல்துறையில் நடைமுறையில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான 10 சதவிகித இட ஒதுக்கீடு முறை, ஏனைய சீருடைப் பணித் துறைகளான சிறைத் துறை மற்றும் வனத் துறைக்கும் நீட்டிக்ககப்பட்டுள்ளது. மேலும் இது தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறைக்கும் நீட்டிக்கப்படும்.

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருதிற்காக தேர்ந்தெடுக்கப்படும் விளையாட்டு வீரர் / வீராங்கனைகளுக்கு தலா ரூ.1 இலட்சம் பண முடிப்பும் மற்றும் பாராட்டுப் பத்திரம், சம்பந்தப்பட்ட விளையாட்டினை பிரதிபலிக்கும் பட்டயமும் பரிசாக அரசு வழங்கி வருகின்றது. இதுவரை சர்வதேச போட்டிகளில் வெற்றிபெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்த 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.

**பயிற்றுநர்களுக்கும்,
உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கும்
முதலமைச்சர் விருது**

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த முறையில் பணியாற்றி, தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் இரு பயிற்றுநர்களுக்கும் மற்றும் இரு உடற்பயிற்சி கல்வி ஆசிரியர்களுக்கும் முதலமைச்சர் விருது வழங்கப்படும். ஒவ்வொரு நபருக்கு ரூ.1 இலட்சம் பரிசுத் தொகையும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும்.

உயரிய ஊக்கத் தொகை

தமிழ்நாட்டைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில், வீட்டுமனை மற்றும் அடுக்குமாடி வீடு வழங்குவதற்கு பதிலாக, உயரிய ஊக்கத் தொகை வழங்கவும்,

2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் தெற்காசிய மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் பெறும் பட்சத்தில் அவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

❖ ❖ ❖

உருளைக் கிழங்கின் கதை

தென் அமெரிக்காவில் ஆண்டியன் வெப்ப மண்டல மலைப் பிரதேசத்தில் உருளைக் கிழங்கு முதலில் பயிரிடப்பட்டது. அங்கு இப்பொழுதுகூட பல வடிவம், வண்ணம் உடைய உருளைக் கிழக்குகளைக் காண முடியும். தென் அமெரிக்காவின் முக்கிய உணவுப் பொருளாக உருளைக் கிழங்கு உள்ளது. அவர்கள் அதனைப் பல வகைகளில் பயன்படுத்துகிறார்கள்.

16ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர்கள் உருளைக் கிழங்கை ஐரோப்பாவுக்கு கொண்டு வந்தனர். அடுத்த 50 ஆண்டுக் காலத்தில் போர்ச்சுக் கீசியர்கள் இந்தியாவில் உருளைக் கிழங்கை அறிமுகப்படுத்தினார்கள்.

இந்தியாவில் 1615–1617ஆம் ஆண்டுகளில் கிழக்கிந்தியக் கம்பெனியுடன் தொடர்புள்ள எட்வர்டு டெர்ரி என்ற பாதிரியார் இந்தியாவின் வடக்குப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்தபொழுது, உருளைக் கிழங்கு ஏராளமாகப் பயிரிடப்படுவதைப் பார்த்ததாகக் கூறியுள்ளார்.



கிழங்கு வகைகள் இந்தியாவில் முக்கிய உணவுப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை பல்வேறு விதமான மண்களிலும் விளையக்கூடியவை ஆகும். இவைகளில் கார்போஹைடிரேட் ஏராளமாக உள்ளது. பல தாதுப்பொருள்களும், விட்டமின்களும் உள்ளன. கால்நடைத் தீவனமாகவும், சாராயம், சர்க்கரை தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன.

தற்பொழுது 12 மத்திய உருளைக் கிழங்கு ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. அகில இந்திய ஒருங்கிணைந்த உருளைக் கிழங்கு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இவைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

இந்தியப் புவியியல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மேம்பாடு செய்யப்பட்ட 23 உருளைக் கிழங்கு வகைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்கள்: சந்திரமுகி, ஜோதி, சந்தூரி, பஹாார், பாவ்ஷா லாலிமா ஆகியவை ஆகும். ஆய்வு நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு 2,000 டன்கள் கலப்பின விதை உருளைக் கிழங்குகளை விநியோகம் செய்கின்றன.

அதனால் உற்பத்திச் செலவு கணிசமாகக் குறைகிறது. பல்வேறு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, தொட்டிகளில் உருளைக் கிழங்கு பயிரிடும் முறையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; இது ஒரு புதிய சாதனையாகும். ★


குடுமியான் மலை


குன்றக்குடி

நார்த்தா மலை

தமிழரசு

R.N.I.No.21446/70-Regn.No.TN/ARD/48/09/-11
& WPP No.TN/PMG(CC R)518/09-11